விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை (18.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 304

## தமிழ்த் தேசியக் கட்சிகள் அமைப்பு ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட இணக்கம்



### ஆராய்வதற்கு குழுவும் நியமனம்

(யாழ்ப்பாணம்)
"தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்து கட்சிகளும் அமைப்பு ரீதியாக ஒன் 15

## மோ.சைக்கிள் - டிப்பர் கோப்பாயில் விபத்து

### இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிளும் டிப்பரும் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் குடும்பஸ்தரொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.
குறித்த விபத்துச் 15

## முன்னணி புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)
தற்போதைய அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியில் எதிர்ப்பினை வெளியிடும் முகமாக ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டம் நேற்று முற்பகல் 15

## கிளிநொச்சியில் 8 பேர் கைது

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் 8 பேர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதநகர் பகுதியில் சட்ட 15

# யாழில் கொரோனா பரவும் ஆபத்து!

### காங்கேசன்துறை முகாமில் இருவருக்கு தொற்று உறுதி

### ரயில், பஸ்ஸில் பயணித்ததால் சமூகத் தொற்றாகும் அபாயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. காங்கேசன்துறை கடற்படை முகாமில் பணியாற்றும் இருவருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இருவரும் ரயில் மற்றும் பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்கு பிரயாணம் செய்ததால் கொரோனா சமூக தொற்றாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.
(16ஆம் பக்கம் பார்க்க)

## புன்னாலைக்கட்டுவனில் முதியவர் மீது வாள்வெட்டு

### மோ.சைக்கிளில் வந்த நான்கு பேரே தாக்குதல் நடத்தினர்

(யாழ்ப்பாணம்)
யாழ்.புன்னாலைகட்டுவன் பகுதியில் முதியவர் ஒருவர் மீது நேற்று மாலை வாள்வெட்டு தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. 15

## நேற்றும் 121 பேருக்கு கொரோனா உறுதி

(கொழும்பு)
மினுவாங்கொட கொத்தணி கொரோனா பரவல் இலங்கையில் கொரோனா 3ஆவது அலையாக உருவாகி பெருஞ் சவாலாக மாறிவரும் 15

## வெற்றிலைக்கேணியில் விபரீத முடிவெடுத்த இராணுவச் சிப்பாய் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
வெற்றிலைக்கேணி 553 ஆவது படைப்பிரிவு முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் 16

## வவுனியா மாணிக்கர் வளவில் இருவர் வெட்டிப் படுகொலை

### ஒருவர் படுகாயம்; சந்தேகநபர் கைது



(வவுனியா)
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாணிக்கர் வளவுப் பகுதியில் இருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.
மேலும் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப் 15

### தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில்

## சுமந்திரன் பங்கேற்பு அனந்தி வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)
ராஜபக்ஷ அரசின் அடக்குமுறைக்கு ஜனநாயக ரீதியில் எதிர்ப்பு வெளி 15

### கட்டுக்கடங்காத கொரோனா

## மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்தை முடக்குங்கள்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)
நாட்டில் கொரோனா 2ஆம் அலையின் மூலம் அறியப்படாத நிலையில், அபாய வலயங்களில் சமூக பரவல் உருவாகியிருக்கலாம் 16

## பொலிஸார் சட்டத்தை மலினப்படுத்த கூடாது

### சட்டமா அதிபர் எச்சரிக்கை

10ஆம் பக்கம் பார்க்க

### பயணங்களைக் கட்டுப்படுத்துங்கள்

## கொரோனா தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)
நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுலில் இல்லாத பகுதிகளிலும் கொரோனா 16

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் ஐந்து இளைஞர்கள் படுகாயம்

## வவுனியா செட்டிகுளம் பகுதியில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, செட்டிக்குளம், கிறிஸ் தவகுளம் பகுதியில் காணி துப்பரவாக்கும் பணிக்காக சென்றிருந்த இளைஞர்கள் துப்பாக்கி முனையில் தாக்குதல் நடத் தப்பட்டதாக படுகாயமடைந்த இளை ஞர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் செட்டிகுளம், கிறிஸ்தவ குளம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற் றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

செட்டிகுளம், கிறிஸ்தவ குளம் பகு தியில் காணி துப்புரவாக்கும் பணிக்காக சென்று ஓய்வெடுத்து கொண்டிருந்த 05 இளைஞர்கள் மீது அங்கு வந்த குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

துப்பாக்கிளை காட்டி கத்தி, வாள், கோடாரி மற்றும் இரும்பு கம்பிகள் போன்ற கூரிய ஆயுதங்களை கொண்டு தாக்கிய தாகவும், தம்மிடம் இருந்த பணம், நகை, தொலைபேசி போன்ற உடமைகளையும் அந்த குழு பறித்து சென்றுள்ளதாகவும் படுகாயமடைந்த இளைஞர்கள் தெரிவித் துள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயம டைந்த 5 இளைஞர்களும் நேற்று முன் தினம் இரவு செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, நேற்று காலை மேல திக சிகிச்சைக்காக வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் தொடர்பில் வவு னியா வைத்தியசாலை பொலிஸார் முறைப்பாட்டை பெற்றுக்கொண்டுடன், மேலதிக விசாரணைகளை வவுனியா பொலி ஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-03,250,299)

# "இருவரையும் போட்டுள்ளேன் தேவையென்றால் போய்ப்பாருங்கள்"

## வவுனியா இரட்டை படுகொலையாழி வாக்குமூலம்

(வவுனியா)

"அங்கு இருவரையும் போட்டுள்ளேன் தேவையென்றால் போய்ப் பாருங்கள்" என வவுனியாவில் இரட்டை படு கொலை செய்த கொலையாழி தெரிவித் துள்ளார்.

வவுனியாவில் இருவர் நேற்றுக் காலை வெட்டி படுகொலை செய்யப்பட்டனர்.

நேற்று காலை கொலை நடந்த வீட்டி ற்கு அயலிலுள்ள வீடொன்றிற்கு சென்ற சந்தேகநபர் வீட்டில் உள்ளவர்களை அழைத்து அவர்களிடம் வாங்கிய காட்டுக் கத்தியை ஒப்படைத்துள்ளார். இதன்போது "அங்கு இருவரையும் போட்டுள்ளேன். தேவையென்றால் போய்ப் பாருங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

பின்னர் சம்பவம் நடந்த வீட்டிலிருந்த தனது ஆடைகள் உள்ளிட்ட சில பொருட் களை எடுத்துக் கொண்டு அங்கிருந்து கால்நடையாக கிளம்பியுள்ளார்.

அவரது தகவலால் அச்சமடைந்த அயலவர்கள் சம்பந்தப்பட்ட வீட்டுக்கு சென்றுள்ளனர். அங்கு இருவர் உயிரி ழந்த நிலையிலும், மற்றொருவர் படுகாய மடைந்த நிலையில் குற்றுயிராகவும் காணப்பட்டுள்ளார். இதனையடுத்து ஓம ந்தை கொலிஸாருக்கு தகவல் வழங்கப் பட்டதுடன், நோயாளர் காவு வண்டியில் படுகாயமடைந்தவர் வவுனியா வைத்திய சாலைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

இதனையடுத்து கிராம மக்கள் சிலர் சந்தேகநபரான இளைஞனை தேடிச் சென்றனர். இளைஞன் நடந்து சென்று கொண்டிருந்ததை அவதானித்தனர். அவரிடம் ஆயுதங்கள் ஏதாவது இருக் கலாம் என்ற அச்சத்தில் அவரை பின் தொடர்ந்து சென்று சற்று தொலைவில் கடமையிலிருந்த போக்குவரத்து பொலி ஸாரிடம் விடயத்தை தெரிவித்தனர். இளைஞனை போக்குவரத்துப் பொலி ஸார் மடக்கிப்பிடித்தனர்.

சம்பவம் நடந்த வீட்டில் மதுபான போத்தல்கள் பல காணப்பட்டன. மது அருந்திய இடத்தில் விபரீதம் நடந்தி ருக்கலாமென்ற தோற்றத்தை ஏற்படுத் தும் சூழல் அங்கு காணப்பட்டது.

கைதான இளைஞனிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கொலையை தானே புரிந்ததாக அவர் ஒப்புக் கொண்டார்.

இளைஞனின் வாக்குமூலத்தில் "நாம் நான்கு பேரும் நேற்று முன்தினம் இரவி லிருந்து மது அருந்தினோம். அவர் களிற்கு போதை ஏறியதும் என்னை தாக்கினார்கள். இதனால் ஆத்திரமடைந்து இரவு 1 மணியவில் வீட்டை விட்டு வெளியேறினேன்.

வீட்டுக்கு வந்து சிறிது நேரம் இருந்து விட்டு மீண்டும் சென்றேன். வீடொன்றில் வாங்கிய காட்டுக் கத்தியிருந்தது. அதி காலை 4 மணியளவில் அங்கு சென்ற போது மூவரும் போதையில் தூங்கிக் கொண்டிருந்தனர். கத்தியாலும் கோடாரி யாலும் அவர்களை வெட்டினேன்" என வாக்குமூலமளித்துள்ளார். (ம-03)

### கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்திலிருந்து

# வல்வெட்டித்துறைக்கு வந்த பெண்ணால் நேற்று பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு - கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் பணியாற்றிய பெண் ஒருவர் யாழ். வல்வெட்டித்துறை க்கு நேற்று வந்திருந்த நிலையில் அடை யாளம் காணப்பட்டு விடத்தல்பளை தனி மைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பகுதியில் உள்ள வீடொன்றுக்கு வந்திருந்த நிலையில் கிளிநொச்சி - விநாயகர்புரம் பகுதியை சேர்ந்த குறித்த பெண் அடையாளம் காணப்பட்ட நிலையில் பிரதேச சுகாதார அதிகாரிகளின் கவனத்திற்கு குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது.

பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த சுகாதார பிரிவினர் பெண்ணிடம் நடத்திய விசாரணையில் அவர் கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் உள்ள நிறுவனம் ஒன்றில் பணியாற்றியமை கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தினால் வல்வெட்டித் துறை பகுதியில் சிறிது பரபரப்பான நிலை ஏற்பட்டிருந்தது. (ம-03)

### 20 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது

# வாக்கெடுப்பிற்கு வழிவகுக்கும் திருத்தங்கள் முன்வைக்கப்படமாட்டாது

## நீதி அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திரு த்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது வாக்கெடுப்பிற்கு வழிவகுக்கும் திருத்தங்கள் முன்வைக்கப்பட மாட்டாது என நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு 21 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப் பட்ட பின்னர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமென நீதி அமைச்சு தெரி வித்துள்ளது.

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதனுடன் தொடர்புடைய திருத்தங்களில் மாற்றம் ஏற்பட்டால், அது பாராளுமன்ற உறுப் பினர்களின் ஒப்புதலுடன் நடைபெறும் என்றும் நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், உயர் நீதிமன்றம் வழங் கும் தீர்ப்புகளுக்கேற்ப, குறித்த திருத்தங் கள் மேற்கொள்ளப்படும் என்றும் நீதி அமை ச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-03)

# 20 இல் குறைகள் இருந்தால் திருத்தலாம் கைவிட முடியாது

## (அமைச்சர் ரத்நாயக்க தெரிவிப்பு)

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தில் குறைகள் இருந்தால் அவற்றை சரிசெய்யப்படும். ஒருபோதும் அந்நடவடிக் கையை கைவிடமுடியாது என அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற நிலையை உருவாக்குவதற்காகவே ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ தீவிரமாக செயற்பட் டுக்கொண்டிருக்கிறார். அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலம் நிறை வேறிய பின்னர், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். நுவரெலியா - டயகம பகுதியில் நேற்று நடைபெற்ற வீதி புனர மைப்புக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள் ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து வெளியி டுகையில்,

19 ஆவது திருத்தச்சட்டமூலம் இல்லா தொழிக்கப்படும் என ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களின் போது அறிவிக் கப்பட்டது. தற்போது அதனைசெய்ய முற்படும்போது எதிர்ப்பு கிளம்பியுள்ளது. 20இல் குறைகள் இருந்தால் அவற்றை சரிசெய்யலாம். ஆனால், அந்நடவடிக் கையை கைவிடமுடியாது.

20ஆவது திருத்தச்சட்டமூலம் நிறை வேறிய பின்னர், நாட்டுக்கு பொருத்தமான புதிய அரசியலமைப்பொன்று இயற்றப் படும். அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் அப்பணி நிறை வுசெய்யப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

அதேவேளை, முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சட்டரீதியாக உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது. இது அரசியல் பழிவாங் கல்நடவடிக்கை அல்ல. எனவே, சட்டத்துக்கு மதிப்பளித்து ரிஷாட் பதியுதீன் பொலிஸா ரிடம் சரணடைய வேண்டும்.

எவராவது தவறிழைத்திருந்தால் தகுதி தராதரம் பாராது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)


**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (4298)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.





**ஓலைச்சுவடி சோதிட நிலையம்**

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் யாழ்ப்பாணம். (4297) பண்டாரிக்குளம், வவுனியா. 076 328 7119



**வேலையாட்கள் தேவை**

பருத்தித்துறை வீதி, நல்லூரடியில் ஆரம்பிக்கவிருக்கும் Restaurant ஒன்றுக்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு (4300)

076 336 5885, 077 438 4133

# ஆபத்தான கட்டத்திற்குள் இலங்கை

# வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நாட்டில் தற்போது ஆங்காங்கே கொரோனா தொற்றாளர்கள் கொத்தணியாக அடையாளம் காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

சில நோயாளிகளுக்கு கொரோனா வைரஸ் எங்கு தொற்றியது என்பதை கண்டுபிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவித்தார்.

இதன்காரணமாககொரோனா நோய் சமூகத்தில் பரவியுள்ளது என்ற அறிக்கை வெளியிட நேரிடும் எனவும் இறுதி ஆபத்தான கட்டத்திற்கு இலங்கை சென்றுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நோயாளிகளிடம் நோய் அறிகுறிகள் குறைந்து காணப்படுவது சாதகமான நிலைமை. கொரோனா தொற்றாளர்களின் தொற்று மூலத்தை கண்டுபிடிப்பதை விட தினமும் அதிகரித்து வரும் தொற்றாளர்களுக்கு குறித்து தேவையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து கலந்துரையாடி வருவதாகவும் நவீன் டி சொய்சா குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற றிசாத் ஆதரவை எதிர்பார்க்கவில்லை

## –மகிந்தானந்த–



(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற றிசாத் பதியுதீனின் ஆதரவை அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். ஹற்றனில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், றிசாத் பதியுதீனின் ஆதரவின்றி முன்மொழியப்பட்ட 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திடம்உள்ளது எனகூறினார்.

அத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் நீதிமன்றங்களில் சரணடைந்து கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கு பதிலாக தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வேண்டும் என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

குறிப்பாக தற்போதைய அரசாங்கத்தில் உள்ளவர்கள் கடந்த அரசாங்கத்தினால் குறிவைக்கப்பட்ட போதும் அவர்கள் தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபித்ததாக அவர் சுட்டிக்காட்டினார். (நி-7)

# புதிய இராஜதந்திர அதிகாரிகள்! வாழ்த்துரைத்த பிரதமர் மகிந்த

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கான இலங்கை இராஜதந்திர அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ள நான்கு பேர் அலரிமாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவ்வ சந்தித்துள்ளனர்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள மொஹான் பீரிஸ், சீனாவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் கலாநிதி பாலித கோஹண, ஜப்பானுக்கான இலங்கையின் புதிய தூதுவர் சாஜீவ் குணசேகர, ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்திர பிரதிநிதி சீ.ஏ.சந்திரபிரேம ஆகியோர் பிரதமரைச் சந்தித்தனர்.

வெளிநாடுகளில் இராஜதந்திர சேவைகளுக்கு செல்லும் இந்த அதிகாரிகளுக்கு பிரதமர் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்த இராஜதந்திர அதிகாரிகள் இன்னும் சில தினாங்களில் இராஜதந்திர சேவைகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்லவுள்ளனர்.

இராஜதந்திர அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளவர்களில் மொஹான் பீரிஸ், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் கீழ் முன்னாள் பிரதம நீதியரசராகவும் சட்டமா அதிபராகவும் கடமையாற்றியவர்.

அவுஸ்திரேலியரான கலாநிதி பாலித கோஹணவும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் முக்கிய அரச பதவிகளை வகித்த நபர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 19 ஆல் எனது கைகள் கட்டப்பட்டுள்ளன 20 ஐ முடிந்தளவு நிறைவேற்ற வேண்டும்



(கொழும்பு)

தனது முதலாவது பதவியாண்டு நிறைவு தினத்திற்கு முன்னர் புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாக்குறுதியளித்துள்ளார்.

19 ஆவது திருத்தத்தை வைத்துக்கொண்டு தன்னால் எதனையும் செய்யமுடியாது என்றும் கூடிய விரைவில் 20 ஆவது திருத்த யோசனையை நிறைவேற்றிவிட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற 20 ஆவது திருத்த யோசனை மற்றும் புதிய அரசியலமைப்புப் பணிகள் குறித்து ஆளும் கட்சி உறுப்பினர்களைத் தெளிவுபடுத்துகின்ற சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார். தொடர்ந்தும் பேசிய அவர்,

தற்சமயம் அமுலில் உள்ள 19 ஆவது திருத்தத்தினால் எனது கைகள் கட்டப்பட்டுள்ளன. இதனால் 20ஆவது திருத்த யோசனையை முடிந்தளவில் நிறைவேற்ற வேண்டும்.

அராஜகத்தை எதிர்க்கின்ற, அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்கின்ற வகையிலான புதிய அரசியலமைப்பு தான் தேவையாக இருக்கிறது.

இரண்டாவது பதவியாண்டு ஆரம்பிக்கும் முன்னர் புதிய அரசியலமைப்பினை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன் என்றார்.

இதேவேளை 20ஆவது திருத்த யோசனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் குறித்த உச்ச நீதிமன்றத்தின் வியாக்கியானம் எதிர்வரும் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவினால் அறிவிக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் அந்த யோசனை மீது விவாதம் நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளஹ்ம குறிப்பிடத்தக்கது. (நி-7)

# இலங்கையை அமெரிக்காவின் காலனியாக மாற்றும் சதித் திட்டம்-எச்சரிக்கும் விஜயதாச

(கொழும்பு)

நாடு தற்போது செல்லும் நிலை நீடித்தால் இன்னும் சில வருடங்களில் இலங்கை நிச்சயமாக அமெரிக்காவின் காலனியாக மாறிவிடும் என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சீனாவின் காலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிராக இலங்கையை அமெரிக்காவின் காலனியாக மாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காக அமெரிக்க தூதுக்குழு விரைவில் இலங்கை வரவுள்ளது.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் என்பது இலங்கையை சீனாவின் காலனியாக மாற்றுவதற்கு எதிராக அமெரிக்காவின் காலனியாக மாற்றுவதற்கான சதித் திட்டம்.

நாட்டைப் பாதுகாக்கவே மக்கள் நம்பிக்கை வைத்து ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் நாட்டை ஒப்படைத்துள்ளனர். எனினும் இவர்கள் நாட்டை காட்டிக்கொடுப்பார்கள் என்றால் மக்கள் அப்பாவிகளாக பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.



மக்கள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்திற்குச் செல்வார்கள் எனவும் அவர்மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதி முடக்கம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் டொக்யாட் பகுதியில் பணியாற்றும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கொழும்பு துறைமுகத்தின் அப்பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. குறித்த பகுதிக்குள் பிரவேசிப்பதற்கும் அங்கிருந்து வெளியேறுவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த பகுதியில் பணியாற்றிய ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-7-6)

# மினுவாங்கொட கொரோனா கொத்தணி தொடர்பில் விசாரணைகள் மும்முரம்



(கொழும்பு)

மினுவாங்கொட கொரோனா கொத்தணி ஆரம்பமானது எவ்வாறு என விசாரணை செய்வதற்காக அரச புலனாய்வு அதிகாரிகள் ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் ஆலோசனைகளுக்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 200 இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# '20'ஐ எதிர்த்து போராட்டம் தடுத்து நிறுத்திய பொலிஸார்



(கொழும்பு)

பாராளுமன்ற அதிகாரத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கைப்பற்றும் நோக்குடன் முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை எதிர்த்து சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர்கள் முன்னெடுத்த போராட்டத்தை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.


மக்களின் இறையாண்மையை ஒழிப்பதற்கும் ஒரு சர்வாதிகார நிர்வாகியை உருவாக்குவதற்கும் எதிராக சமூகத்தைத் தெளிவுபடுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை பொலிஸார் தடுத்துள்ளதாக, "20 இற்கு எதிரான தொழிற்சங்க இயக்கம்" தெரிவித்துள்ளது.

20 இற்கு எதிரான போராட்டத்தின் ஒரு கட்டமாக, தொழிற்சங்கத் தலைவர்கள் நேற்று முன்தினம் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பு சுவரொட்டியை ஒட்ட முனைந்தனர்.

தொழிற்சங்கத் தலைவர்கள் சமூக இடைவெளி மற்றும் பிற தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களைக் கடைப்பிடித்து ஒன்றிணைந்த போதிலும் பொலிஸார் அவர்களைத் தடுத்ததாக, 20 ஆவது திருத்தத்திற்கு எதிரான தொழிற்சங்க இயக்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# வெளிநாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வாக்குரிமை

## பிரதமர் முன்மொழிவு



(கொழும்பு)

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட தேர்தல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கு எதிர்காலத்தில் முன்மொழிவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூலோபாய திட்டமிடல் தொடர்பிலான கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

குறித்த சந்திப்பின்போது விடயங்களை தெளிவுபடுத்திய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, 2020-2024 இற்கான தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூலோபாய திட்டமிடலுக்கு அமைய தேர்தல் சட்ட திருத்தத்தை மேற்கொள்வது அத்தியாவசியமாகும் எனச் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## கட்டுநாயக்கவின் அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இருந்து புறப்படும் அனைத்து பயணிகளும் புறப்பட 72 மணி நேரத்திற்குள் பி.சி.ஆர்.சோதனைகள் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த நடைமுறை இன்று மாலை 6 மணி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)

# ஊரடங்கை மீறியோர் கைது

# [203]

(கொழும்பு)

கம்பஹாவில் பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 203 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாத்திரம் 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த நான்காம் திகதி முதல் நேற்றுக் காலை ஆறு மணிவரையான காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஜ-4)

# குடிவரவு சேவைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடிவரவு திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் நாளை திங்கட்கிழமை முதல் மக்கள் சேவைகளுக்காக திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவைகளைப் பெறுவதற்கு அலுவலகத்திற்கு வருவதற்கு முன்பு, பொதுமக்கள் வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கம் அல்லது திணைக்களத்தின் வலைத்தளம் மூலம் அனுமதியை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி பெறாதவர்கள் அலுவலக வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று திணைக்களம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும், முடிந்தவரை அருகிலுள்ள பிராந்திய அலுவலகத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் பொதுமக்களைக் குடிவரவு மற்றும் குடிவரவு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஜ-4)

# பெண் உயிரிழப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அவருடைய உறவினர்கள் நேற்று முன்தினம் ஹிக்கடுவ பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டதை அடுத்து சுகவீனமுற்ற குறித்த பெண் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஹிக்கடுவ களுபே பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த 13 ஆம் திகதி போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண்ணின் உறவினர்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இலங்கை-பாகிஸ்தான் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை எவ்வாறு காத்திரமான முறையில் பயன்படுத்துவது என்பது குறித்தும் அதனை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் நகர்வுகளின் போது ஏற்படும் நெருக்கடிகளை எவ்வாறு கையாள்வது என்பது பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) முஹம்மட் சாத் கட்டாக், கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போது இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது இருதரப்பிலிருந்தும் ஏற்படத்தக்க பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது, எவ்வாறு தீர்வை எட்டுவது என்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் ஆடை உற்பத்தி, கட்டுமானப்பொருட்கள், வேளாண்மை மற்றும் பதப்படுத்தல், மருந்துப்பொருட்கள், சுற்றுலா மேம்பாடு, தொழில்நுட்ப அபிவிருத்தி, வர்த்தகம், முதலீடு மற்றும் தொழிற்றுறை வளர்ச்சி ஆகிய துறைகளில் இருநாடுகளும் ஒன்றிணைந்து செயலாற்றுவதற்குக் காணப்படும் சாத்தியப்பாடு தொடர்பிலும் இருதரப்பினரும் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டனர்.

இதன்போது பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு பாகிஸ்தான் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் என்று அந்நாட்டு உயர்ஸ்தானிகர் அமைச்சர் விமல் வீரவன்சவிடம் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அரச தேவைக்காக நியமிப்பதும் இடமாற்றுவதும் தவறான அரசியல் கலாசாரத்தை உருவாக்கும்

## சாணக்கியன் சாடல்

(கல்முனை)

அரச தேவைகளுக்காக அரச அதிபர்களை இடமாற்றம் செய்வதும் நியமனம் செய்வதும் தவறான அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் விடயமாகும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாங்கள் தான் இந்த அரசாங்க அதிபரை கொண்டு வந்தோம் எனச் சொன்னவர்கள் தற்போது அரச அதிபர் ஒருவருக்கு அநீதி நடக்கும் போது மௌனமாக உள்ளனர். அவர்களது எஜமானர்களின் தவறான முடிவையும் தலையாட்டி பொம்மைகளாக இருந்து ஆதரிப்பதையும் பார்க்க கவலையளிக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அரசாங்க அதிபராக கலாமதி பத்மராஜா நியமிக்கப்பட்டு பத்து மாதங்கள் தான் ஆகின்றது. அதற்குள் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்தை நான் கலாமதி பத்மராஜாவின் இடமாற்றமாக பார்க்கவில்லை. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் இடமாற்றமாகவே பார்க்கின்றேன்.



நாம் எப்போதும் அரச அதிகாரிகளின் கரங்களை பலப்படுத்த வேண்டும். அரச அதிகாரிகள் சரியான முறையில் செயற்படும்போது அவர்களுக்கு அழுத்தங்கள் உருவாவதுடன் இடமாற்றங்களும் வழங்கப்படுகின்றன. இதனாலேயே அரச அதிகாரிகள் தங்களது கடமையினை மேற்கொள்ள தயங்குகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# மைத்திரியிடம் வாக்குமூலம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயங்கரவாத தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சுமார் 3 மணி நேரம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

நான்காவது நாளாகவும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று (சனிக்கிழமை) முற்பகல் ஆஜராகி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இறுதியாக கடந்த 15 ஆம் திகதி ஆணைக்குழுவில் வாக்குமூலம் வழங்கிய அவர், பல்வேறு முரணான வாக்குமூலங்களை வழங்கியிருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தீவைக்கப்பட்ட விவசாய நிலம்



(கொழும்பு)

மெதிரிகிரிய பிரதேச சபைக்கு சொந்தமான பகுதிகளில் உள்ள வயல் நிலங்களுக்கு அடையாளம் தெரியாத நபர்களால் தீ வைக்கப்படுவதால் பிரதேசவாசிகள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் குறித்த பகுதியில் விவசாயிகளுக்காக அரசாங்கம் உரங்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல் இந்த பகுதியில் வேறு சில பயிர்கள் பயிரிடப்படும் நிலங்களுக்கும் தீ வைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

2ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
23 – 08 – 1987

இறப்பு
18 – 10 – 2018

மரியதாஸ் நிலோஸ்

காற்றுக் கூட புகமுடியாத வெற்றிடமானது
நீ வாழ்ந்த எம் இல்லம்,
உன்னை உடலோடு பார்த்துப்பேச முடியாத
இத்தருணங்களில் நாம் அனுபவிக்கும்
வேதனைகளை எம் விழியோரம்
உண்டாகும் கண்ணீர்த்துளிகள் சொல்கின்றது
கவிதை எழுதியோ, கண்ணீர் வடித்தோ
எம் சோகத்தை ஆற்றிக்கொள்ளமுடியாது
உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்.
உயிரோடு இருக்கும் போது
என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டீர்.
என்னும் இயேசுவின் அழியா வார்த்தைகள்
ஆறுதலாய் அமைகின்றது
இறைவனின் சந்நிதானத்தில் இளைப்பாற என்றும்
இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்

C-631

சென் தோமஸ் லேன்,
பருத்தித்துறை

குடும்பத்தினர்.

## முகக்கவசத்தை பிடுங்கிய பிறந்த குழந்தை

# உலகம் கொரோனாவிலிருந்து விடுதலைபெறும் அறிகுறி




(ஜெனிவா)

பிறந்து சில நொடிகளேயான குழந்தையை வைத்தியரொருவர் தூக்கிப்பிடித்து காண்பிக்கும் போது, அக் குழந்தை, வைத்தியரின் முகக்கவசத்தை பிடுங்கி இழுக்கும் காட்சியானது, சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது.

உலக அளவில் இவ் வருடத்தை கொரோனா புரட்டிப்போட்டுள்ள நிலையில், விரைவில் இயல்பு நிலைக்கு உலகம் திரும்ப வேண்டும் என்பதை புதிய வரவு (குழந்தை) உணர்த்துவதாகவே நம்பிக்கை ஏற்படுவதாக பலரும் கருத்துகளை பதி விட்டு வருகின்றனர்.

முகக் கவசமில்லாத வாழ்க்கையே எதிர்கால உலகிற்கு அவசியமென்பதையே இந்த பிஞ்சுக் குழந்தை உணர்த்துகிறது என்று சிலர் கருத்துகளை பதிவிட்டுள்ள நிலையில், விரை வில் நாம் எல்லோரும் முகக்கவசத்தை கழற்றப் போகிறோம் என்பதன் அறிகுறியே இது என குறித்த வைத்தியரும் கூறியுள்ளார்.

மேலும், 2020ஆம் ஆண்டின் சிறந்த படமாக வேண்டும் என தனது விருப்பத்தை பலரும் பதிவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஈழத்தமிழ் அகதிகள் இடமாற்றம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் வடக்கு சுமாத்ராவில் உள்ள மெடன் பகுதியில் வைக்கப்பட்டிருந்த 12 ஈழத்தமிழ் அகதிகள் தெற்கு சுலவேசி பகுதியில் உள்ள மகஸ்ஸர் பகுதிக்கு இடமாற்றப்பட்டனர்.

இந்த இடமாற்றம் பாதுகாப்பு காரணங்களுக்காக நடந்துள்ளதாக மகஸ்ஸார் குடிவரவுத் தடுப்பு மையத்தின் தலைமை அதிகாரி ரொகொல் சிற்று மொறங் தெரிவித்தார்.

தமிழ் அகதிகளின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு அவர்கள் இடமாற்றப்பட்டனர். (ஜ-4)

# பாதசாரி கடவையை சீர்செய்ய கோரிக்கை

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக காணப்படும் பாதசாரிக்கடவை அழிவடைந்துள்ளது.

வாகனப் போக்குவரத்து அதிகம் காணப்படும் வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பாதசாரிக்கடவையை சீரமைத்துத்தருமாறு வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வைத்தியசாலைக்கு சிறுவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், முதியவர்கள் என பல்வேறு தரப்பட்டவர்கள் தினமும் சென்று வருகின்றனர்.

அவர்கள் பாதசாரிகள் கடவையூடாகவே வீதியைக் கடக்கின்றனர்.

இந்நிலையில் நீண்ட நாட்களாக பாதசாரிக் கடவையில் உள்ள கோடுகள் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதனைச்சீரமைத்துத் தருமாறு பல்வேறு அமைப்புக்களாலும் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் இதுவரை சீர்செய்யப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்டவர் விரைவில் வைத்தியசாலைக்கு முன்பாக காணப்படும் பாதசாரிக்கடவையை சீரமைத்துத்தருமாறு வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக நகர்ப் பகுதிகளில் காணப்படும் பாதசாரிக்கடவைகள், வீதிக் குறியீடுகள் என்பனவும் வெள்ளை நிறத்தினால் அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள பாதசாரிக் கடவை சீரமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# பார்த்தீனியத்தால் பாதிக்கப்படும் கோவா பயிர்ச் செய்கை



(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியில் நச்சுச் செடியான பார்த்தீனியத்தால் விவசாயிகள் பெரும் பாதிப்பினை எதிர் கொண்டுள்ளனர்.

குறிப்பாக புன்னாலைக் கட்டுவன் தெற்கு ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அண்மையில் விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கோவா பயிர்ச் செய்கை பார்த்தீனியத்தின் பரம்பல் காரணமாக கடுமையாகப்பாதிக்கப்பட்டுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (5,4,18)



**ஹாவாய் சைவ ஆதீனம் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் யாழ்.மத்திய கல்லூரிச் சமூகம் ஆகியன இணைந்து எதிர்கால இளம் சமூகத்திற்கு இயற்கை வளத்தைக் கையளிப்போம் என் தொனிப் பொருளில் வல்லை முனியப்பர் ஆலயச் சூழலில் 5 ஆயிரம் பனை விதைகள் நாட்டினர். இதில் யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம், உப பீடாதிபதி கலாநிதி பா.தனபாலன், ஹாவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த தொண்டுநாத சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்-மகாலிங்கம்)**

# சிரமதானம்

(குப்பிழான்)

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் ஏற்பாட்டில் அரியாலை மணியம் தோட்டம் பகுதியில் இன்று ஞாயிற்றுக் கிழமை சிரமதானம் இடம் பெறும்.

மணியம் தோட்டம் சந்தியிலிருந்து கடற்கரை வீதி வரை மேற்படி சிரமதானம் முன்னெடுக்கப்படவுள்ளது. (5-4-18)

# மயானத்திற்கு இடம் ஒதுக்க நகரசபை தீர்மானம்

(சாவகச்சேரி)

கத்தோலிக்க மதம் சாராத கிறிஸ்தவ பொது மயானத்திற்கு இடம் ஒதுக்கிக் கொடுக்க சாவகச்சேரி நகரசபை முடிவெடுத்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போது நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் விடுத்த கோரிக்கையை அடுத்து கிறிஸ்தவ மயானத்திற்கு இடம் ஒதுக்க நகரசபை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரில் கத்தோலிக்க மதம் சாராத 300 இற்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் உள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர் எமது நகர சபையில் தொழிலாளர்களாக உள்ளனர்.

அவர்களுக்கான மயானத்திற்கான இடத்தை இது வரை ஒதுக்காமல் விட்டது நகர சபையின் தவறு.

நகரசபை உடனடியாக அவர்களுக்கான மயானத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்து எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்க்க வேண்டும்.


உறுப்பினரின் கோரிக்கையை அடுத்து சாவகச்சேரி நகர சபை தனங்கிளப்பு வீதியில் உள்ள நகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் கிறிஸ்தவ பொது மயானத்திற்கு இடம் ஒதுக்க ஏகமனதாகத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# வளவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலாசார மத்திய நிலையத்தில் 2021 ஆம் ஆண்டின் கர்நாடக மற்றும் கிராமிய சங்கீதம், கர்நாடக மற்றும் கிராமிய நடனம், சித்திரம் மற்றும் ஓவியக்கலை, நாடகமும் அரங்கியலும், வயலின், மிருதங்கம், ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளை கற்பிப்பதற்கான வளவாளர்களை (ஆசிரியர்கள்) இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையினை எதிர் வரும் 2020.11.04 ஆம் திகதிக்கு முன்னர் "கலாசார மத்திய நிலையம், சங்கானை" எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறும் மேலதிக தகவல்களுக்கு 077 2478017 என்ற தொலைபேசி இலக்கத்துடன்தொடர்புகொள்ளுமாறும் சங்கானை கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி பொ. சிவராசசிவம் அறிவித்துள்ளார். (5)



**உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு மானிப்பாய் அஞ்சல் சமூகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.என்.ஜீ.ஏ.தலைமையில் நவாலி வடக்கு கிராம உத்தியோகத்தர் ஜே.சஜீவன் பங்களிப்புடன் வழுக்கையாற்றங்கரையில் 500 பனை விதைகளை நாட்டும் திட்டம் செயற்படுத்தப்பட்டது.**

# வீட்டுத்தோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பொதுநூலகத்தினால் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வேலணை பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான வீட்டுத் தோட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் வேலணை பொது நூலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் மாணவர்கள், வாசகர்களுக்கு இலவசமாக மரக் கன்றுகள் மற்றும் மரக்கறி விதைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. (5)

# யுவதிக்கு தொற்று உறுதியானதால் கேகாலையில் 6 கிராமங்கள் முடக்கம்

(கேகாலை)

கொரோனாத் தொற்று உறுதியான பெண்ணுடன் பலர் நெருக்கமாக பழகியுள்ளமை கண்டறியப்பட்டதை அடுத்து கேகாலையில் 6 கிராமங்கள் முடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் உள்ள 6 கிராமங்களுக்கு தற்காலிக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக கேகாலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குமார விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஈரியகொல்ல, எம்புல்அம்பே, அலவத்த, பிங்ஹேன, பொரளுவ, கிரிவல்லாப்பிடிய ஆகிய 6 கிராமங்களுக்கே இவ்வாறு தற்காலிக பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ரம்புக்கனை பகுதியில் பெண் ஒருவருக்கு கொவிட் - 19 தொற்று ஏற்பட்டதை தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் குமார விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனை ஈரியகொல்ல பகுதியில் வசித்த ஒரு பெண் கலகெடிஹேன ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரிகின்றமை தெரியவந்துள்ளது.

தொற்றுக்குள்ளான பெண்ணுடன் பலர் நெருங்கி பழகியுள்ள நிலையில் அவ்வாறானவர்களை அடையாளம் காணவே இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கேகாலை மாவட்டத்தில் இதுவரை 15 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன் இதுவரை 636 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் சமூகத்திற்கிடையில் அவ்வப்போது பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் கேகாலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-7)

# மேலும் 198 பேர் வீடு திரும்பினர்

(கொழும்பு)

முப்படையினரால் நடத்திச் செல்லப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்துள்ள மேலும் 198 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த அனைவரிடமும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொரோனா தொற்று ஏற்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக கொரோனா தடுப்பு தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் இதுவரை 53 ஆயிரத்து 395 பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

## வாடகைக்கு

யாழ்.நகரை அண்டிய பகுதியில் நிரந்தரமாக கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0762531735 (4293)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: 11 ¼ செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. அரச உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/8946

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2
கி.பா: 34 ¼ செவ் 4 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. டோகாவில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/8954

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரோகினி 4
கி.பா: 43 ¼ செவ் 7 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. பிரான்ஸில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: வெளிநாட்டுப் பெண்
தொ.இ: B/8956

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 12 ¾ செவ் 5 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தனியார்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/8957

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: 19 ¾ செவ் 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Diploma in Quantity Serveyoring. Quantity Serveyor (private)
எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகத்தர்
தொ.இ: G/1210

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 17 ½ செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: ஆங்கில ஆசிரியை
எதிர்பார்ப்பு: அரச உத்தியோக மணமகன்
தொ.இ: G/1232

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:பட்டதாரி ஆசிரியை
எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்
தொ.இ: G/1256

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: 37 ¾ செவ் 6 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: பயிற்றப்பட்ட ஆசிரியை
எதிர்பார்ப்பு: உத்தியோகத்தர் அல்லது சொந்த வியாபாரம் செய்பவர்
தொ.இ: G/1289

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## குங்குமம் திருமாங்கல்ய சேவை

எங்கள் குங்குமம் திருமாங்கல்ய சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

தொடர்பு (4278)
077 572 9724, 076 788 7677

## ஜோதிடம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (4278)

தொடர்பு - 077 572 9724

## N.K.Sales & Service Centre

சகல விதமான தையல் இயந்திரங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் மற்றும் அனைத்து உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். புதிய 3 நூல் Over Lock மிஷின், தையல் இயந்திர மேசைகள் மற்றும் பாவித்த நல்ல நிலையில் உள்ள தையல் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.



35/2A, பிள்ளையார் கோவில் வீதி
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி பிள்ளையார் கோவில் பின் வீதி) (4287)
0779671932

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் A-9 புகையிரத பாதைக்கருகில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பரப்பு 4 இலட்சம் (Negotiable)

0776333683 (C-542)

## சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை AAA Gold Center.

0765684346 (C-1074)

## Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

### STUDENT VISA

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் - Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Hotline: 0777-761 346

**Sponsor Letters** Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

10 வருட கால நம்பிக்கையான சேவை

## வேலையாட்கள் தேவை

புத்தளம் தமிழ் பகுதியில் நகரிற்கு அண்மையில் அமைந்துள்ள தோட்டத்தில் தங்கி இருந்து மாடுகள் (15) பராமரித்தல், பால் கறத்தல், புல் வளர்த்தல் மற்றும் தோட்ட வேலையில் அனுபவமுள்ள தனி நபரும் அல்லது குடும்பமாக வேலைக்குத் தேவை. பொறுப்புக்கள் அற்ற கணவன், மனைவியோ தனி நபரோ விரும்பத்தக்கது.

தொடர்புக்கு: 0777319426 (C-1073)

## USA GREEN CARD LOTTERY 2022



Live & Work in USA

Register before 10th November 2020

flex Institute
Call for Registration 0777 761 346
6A, Parakumba Place, Colombo 06.
www.flexinstitute.lk

# சிறுவர் காப்பகத்திலிருந்து ஐவர் தப்பியோட்டம்

## காப்பக உதவிப் பொறுப்பாளர் கைது

(பண்டாரவளை)

பண்டாரவளை சிறுவர் காப்பகத்தின் ஐந்து சிறுவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில் அதற்கு உதவிய காப்பக உதவிப் பொறுப்பாளர் பண்டாரவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை சிறுவர் காப்பகத்திலேயே நேற்று முன்தினம் காலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெற்றோரால் கைவிடப்பட்ட மற்றும் நீதிமன்ற உத்தரவிற்கமைய இந்தக் காப்பகத்தில் தடுத்து வைக்கப்பட்ட சிறுவர்களில் ஐவரே தப்பிச் சென்றுள்ளனர்.

இது குறித்த தகவல் கிடைத்ததும் பண்டாரவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் விரைந்து சிறுவர்களை மீட்டதுடன் குறித்த சிறுவர்கள் தப்பிச் செல்ல உதவிய காப்பக உதவிப் பொறுப்பாளரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட காப்பக உதவிப் பொறுப்பாளர் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (நி-7)

## 14 கடைகள் மூடல்

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டையிலுள்ள மெனிங் மார்க்கெட்டிலுள்ள 14 கடைகள் மூடப்பட்டுள்ளதாக அதன் வர்த்தக சங்கத்தலைவர் அனில் இந்திரஜித் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பகுதியிலுள்ள தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்ணின் கணவர் மெனிங் மார்க்கெட்டில் உள்ள கடை ஒன்றில் வேலை செய்ததாகவும் அவருக்கு மனைவி மூலம் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் அவருடன் தொடர்பில் இருந்த வர்கள் வேலை செய்த கடைகள் 14 மூடப்பட்டுள்ளதாகவும் எனினும் மெனிங் மார்க்கெட் தொடர்ச்சியாக இயங்குவதாகவும் வர்த்தக சங்க தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-10)

## சஹ்ரான் குழு பயன்படுத்திய கார் பொலிஸாரால் மீட்பு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ள சஹ்ரானின் சகாக்களான முகமது கனிபா முகமது அக்கிரம் பயன்படுத்தி வந்த எவரி ரக கார் ஒன்றை காத்தான்குடி நிஸவி நகரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட குற்றவியல் பிரிவு பொலிஸார் மீட்டு காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட குற்றவியல் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் கடந்தவருடம் ஏப்ரல் 25 ஆம் திகதி காத்தான்குடியில் வைத்து கைது செய்யப்பட்டு மெனராகலை சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முகமது கனிபா முகமது அக்கிரம் பெயரில் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்த கார் ஒன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் கார் தரிப்பிடம் ஒன்றில் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக கார் மூடும் தறப்பாளால் மூடி மறைத்து வைத்திருந்த நிலையில் காரை பொலிஸார் மீட்டுள்ளனர்.


இந்த காரில் காத்தான்குடியில் இருந்து நுவரெலியா பயிற்சி முகாமிற்கு பயிற்சிக்காக பயிற்சியாளர்களை கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டதா? என்ற கோணத்தில் விசாரணை மேற்கொண்டு வருவதாக குற்றவியல் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு மாவட்ட குற்றவியல் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-7)

## இரு சக்கர வாகனங்களுக்கு தீ வைத்து எரிப்பு

(அம்பாறை)

அம்பாறை- கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிறின் பீல்ட் தொடர்மாடி குடியிருப்புக்கு முன்னால் தரித்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் ஆகியவைகள் இனந்தெரியாத சந்தேக நபர்கள் தீயிட்டு நாசமாக்கியுள்ளனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 3 மோட்டார் சைக்கிள் உட்பட 5 துவிச்சக்கர வண்டிகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி-7)



## குணமடைந்தோர் 3395

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 10 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி இதுவரை 3 ஆயிரத்து 395 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


## 39 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலினால் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த நிலையில் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 39 இலங்கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு கட்டாரில் இருந்து வருகை தந்த 39 பேருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இதுவரையில் 53 ஆயிரத்து 11 பேர் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதோடு 9 ஆயிரத்து 556 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் கண்காணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



**இந்தியாவின் அனைத்து வீடுகளுக்கும் தூய நீரை வழங்கும் நோக்கில் பிரதமர் மோடியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் "ஜல் ஜீவன் திட்டத்துடன்" (வாழ்விற்கு நீர் திட்டம்) இணைந்ததாக ஒரு திட்டத்தை இலங்கையில் முன்னெடுப்பது பற்றி பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடியதாக இருக்கும் என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கடந்த வியாழக்கிழமை அலரி மாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார்.**

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 200 |
| தக்காளி | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 80 |
| கோவா | 140 | 130 | 120 |
| கரட் | 100 | 160 | 200 |
| பூசணி | 60 | 50 | 60 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 180 |
| பாகற்காய் | 250 | 380 | 200 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 100 |
| போஞ்சி | 180 | 250 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 120 | 150 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | -- |

## இராசிபலன்

18.10.2020
ஐப்பசி 02, ஞாயிற்றுக்கிழமை
துதியை முன்னிரவு 9.21 மணிவரை
சுவாதி பிற்பகல் 12.38 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32 - 6.02 மணிவரை
சந்திராஷ்டமம்:- ரேவதி, அச்சுவினி வளவன்


மேஷம்

சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


ரிஷபம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உடல் நலன் சீராகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.


மிதுனம்

வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், வாகன சுகமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலமுண்டு.


கடகம்

நம்பிக்கைகள் நடைபெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வருமானம் வருவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.


சிம்மம்

வெற்றிகள் குவிய அம்பிகையை வழிபட வேண்டிய நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.


கன்னி

எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும்.


துலாம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம்.


விருச்சிகம்

காரியங்களில் வெற்றிபெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


தனுசு

அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், எண்ணங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.


மகரம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.


கும்பம்

பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.


மீனம்

கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம்பெறலாம்.

உன் அறிவுதான் உன் வாழ்க்கைக் கப்பலின் நங்கூரம்.

# கொரோனாவின் ஆயுட்காலம் தொடர்பில் சரியான தகவல் கண்டுபிடிக்கவில்லை

## மகளிர் மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொலைபேசி, பேனா, இரும்பு போன்றவற்றில் அதிக காலம் உயிருடன் இருக்கக்கூடும். இருந்த போதிலும் அதன் ஆயுட்காலம் தொடர்பில் சரியான தகவல் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என சுகாதார மேம்பாட்டுப்பணியகத்தின் மகளிர் மருத்துவ நிபுணர் உத்பலா அமரசிங்க தெரிவித்தார்.**




கொரோனாவின் ஆயுட்காலம் தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

தற்போது கொரோனாத் தொற்றுக்குள்ளான ஒருவர் மூன்று வாரத்திற்குள் குணமடைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அது மனிதனின் உடலுக்கு உடல் மாற்றமடைகின்றது. விசேடமாக உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இதற்கு முக்கிய பங்களிக்கிறது.

எப்படியிருப்பினும் கொரோனாவுக்கு உறுதியான மருந்து அல்லது தடுப்பூசி இல்லாத போதிலும் எங்கள் சுகாதார பிரிவுகளினால், நோயாளிகளின் நோய் அறிகுறிக்கமைய சிகிச்சையளித்து குணமாக்க முடியும்.

உதாரணமாகஇருமல்உள்ள கொரோனா நோயாளி ஒருவர் அனுமதிக்கப்படுகின்றார் என்றால், அவரது நோய் அறிகுறிக்கமைய சிகிச்சையளித்து அவரை குணப்படுத்தக் கூடிய சக்தி எங்கள் வைத்தியர்களிடம் உள்ளது. அதற்கமைய குணமடைந்த நோயாளிகள் வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறுவார்கள் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# கட்டுநாயக்கவில் தமிழ், சிங்களம் புறக்கணிப்பு
# சீன மொழிக்கு முக்கியத்துவம்



(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வருவோர் பற்றிய விபரங்களைப் பதிவு செய்யும் விண்ணப்பப்படிவம் சீன மொழியிலும் ஆங்கில மொழியிலும் மாத்திரமே காணப்படுகின்றது.

நாட்டின் தேசிய மொழிகளான தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளும்அந்தவிண்ணப்பப்படிவத்தில் இல்லை.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக வருகை தந்த சிங்களப் பிரமுகர் ஒருவர் இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளார்.

குறிப்பாக கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்குள் உள் நுழைபவர்களிடம் தகவல்களைப் பெறும் விண்ணப்பப்படிவத்தில் தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு தேசிய மொழிகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அந்தப் பிரமுகர் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள முறைப்பாட்டு அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

உடனடியாக இந்த விண்ணப்பப்படிவத்தை இரத்துச் செய்து புதிய விண்ணப்பப் படிவம் ஒன்றைத் தயாரித்து அவற்றில் தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு தேசிய மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்குமாறும் அவர் தனது முறைப்பாட்டில் கோரியுள்ளார்.

சீன மொழியிலும் ஆங்கில மொழியிலும் உள்ள அந்த விண்ணப்பப்படிவத்தில் இலங்கை சுகாதார அமைச்சு, சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரைகளும் காணப்படுகின்றன.

எனவே உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் கேட்டுள்ளார். (ஜ-4)

# சட்டத்தை மலினப்படுத்தும் வகையில் பொலிஸார் செயற்படக்கூடாது

## சட்டமா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

நீதிமன்றம் வழங்கும் உத்தரவுகளையும் சட்டமா அதிபர் வழங்கும் அறிவுறுத்தல்களையும் பொலிஸார் மெத்தனமாக கருதி விடக் கூடாது என றிசாத் பதியுதீன் தொடர்பில் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பொலிஸாருக்கு கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளார்.





அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் றிசாத்தை கைது செய்யுமாறு சட்டமா அதிபர், பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

எனினும், றிசாத் பதியுதீனை இது வரையில் பொலிஸார் கைது செய்ய வில்லை. இந்நிலையில், சட்டத்தை மலினப்படுத்தும் வகையில் பொலிஸார் செயற்படக்கூடாதென சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் வழங்கும் உத்தரவுகளையும், சட்டமா அதிபர் வழங்கும் அறிவுறுத்தல்களையும் பொலிஸார் மெத்தனமாக கருதிவிடக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

றிசாத் கைது செய்யப்படாமை தொடர்பில் சட்டமா அதிபர், குற்ற விசாரணைப் பிரிவிற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்கவிற்கு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பொது மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பொலிஸார் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சட்டத்தை மீறிச் செயற்படும் முன்னாள் அமைச்சருக்கும், அவருக்கு உதவுவோருக்கும் எதிராக சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சட்டமா அதிபர், பொலிஸாருக்கு கடுமையான தொனியில் பணிப்புரை விடுத்துள்ளார். (நி-7)

## கைதிகளுக்கு தொலைபேசி

(கொழும்பு)

கைதிகளுக்கு இலவச தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ள தெரிவித்தார்.

கொரோனா தொற்று காரணமாக உறவினர்கள் கைதிகளை பார்வையிடுதல் தடை செய்யப்பட்டுள்ளதால் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்காக நேற்று முன்தினம் முதல் இவ் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கைதிகள், உறவினருடன் தொடர்பு கொள்ளாமையினால் ஏற்படும் மனவிரக்தியை தவிர்க்க முடியும் என்றும் கைதிகளின் நிலை பற்றி உறவினர்கள் அறிந்து கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். (ஐ-10)

## குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு புதிய பணிப்பாளர்

(கொழும்பு)

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த டி சொய்சா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பொலிஸ் தலைமையகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ஐ-4)

## மீண்டும் திறக்கப்படும் மோட்டார் வாகன திணைக்களம்

(கொழும்பு)

கொரோனா தொற்று காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொரோனா தொற்று விதிமுறைக்கு அமைய குறித்த திணைக்களம் நாளை திங்கட்கிழமை முதல் திறக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தொலைபேசி வாயிலாக முன்கூட்டியே பதிவு செய்யும் முறைக்கமைய ஒரு நாள் சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் இது தொடர்பில் மேலதிக தகவல்களை கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடப்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.



01. வாகனப்பதிவுகளுக்கு 070635 4116, 070 635 4117, 070 635 4118

02. வாகன உரிமங்களுக்காக 070 635 4115, 070 635 4137, 070 635 4138, 070 635 4139, 070 635 4140, 070 635 4141

03. வாகன இலக்க தகடு தொடர்பில் 070 635 4119, 070 635 4120

04. ஏனைய விடயங்களுக்கு 070 635 4145, 070 635 4146, 070 635 4147, 070 635 4148, 070 635 4149. (நி-7)

## றிசாத்தை பாதுகாக்க அல்ல, அரசாங்கத்தை பாதுகாக்கவே இராஜினாமா செய்தோம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் றிசாத் பதியுதீனுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்காமை அவரைப் பாதுகாப்பதற்காக அல்ல, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காகவே என கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.



ஆணைக்குழுவில் சாட்சியமளித்த முன்னாள் அமைச்சர் கபீர் ஹாசிம் , நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது றிசாத் பதியுதீனை ஆதரிக்கவில்லை, அவரை ஆதரித்திருந்தால், தனது சொந்தப் பகுதிக்கு திரும்ப முடியாது என கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர், கடந்த அரசாங்கத்தில் இருந்த அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் ஒன்றாக இராஜினாமா செய்த தற்கான காரணம் குறித்து சட்டமா அதிபர் திணைக்கள பிரதிநிதி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே முன்னாள் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்த நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளராக தான் இருந்ததாகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்பு இருப்பதாக றிசாத் பதியுதீனுக்கு எதிராக எதிர்க்கட்சி நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்தது. ஆனால் அது உண்மையில் அரசாங்கத்திற்கு எதிரானது என்றும் கபீர் ஹாசிம் குறிப்பிட்டார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் வாக்களித்திருந்தால், அது முழு அரசாங்கத்தையும், அந்த நேரத்தில் நாட்டின் ஸ்திரத்தன்மையையும் பாதித்திருக்கும் என்றும் முன்னாள் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அந்த நேரத்தில், எதிர்க்கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வென்றிருந்தால், எங்கள் அரசாங்கமும் சரிந்திருக்கும். எனவே நாங்கள்பதியுதீனை அகற்ற விரும்பியதால் எங்கள்பதவிகளில்இருந்து விலக முடிவு செய்தோமே அன்றி அவரைப் பாதுகாக்க விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார். (நி-7)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 17.10.2020 - 15.11.2020

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்






## உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும்

சார்வரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதனான செவ்வாய் வக்கிரம் பெற்று உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். 6 ஆம் இடத்தில் புதன் உச்சம் பெற்று வக்கிரம் பெற்றிருக்கின்றார். குரு தனுசு இராசியில் இருந்தபடி உங்கள் இராசியைப் பார்க்கின்றார்.

குரு பார்வை இருப்பதால் வக்கிர கிரகங்களின் ஆதிக்கமாக இருந்தாலும் அவற்றால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. மேலும் 'குரு மங்கள யோகம்'மும் இருப்பதால் மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

### நீச்சம் பெறும் சுக்கிரன்

இதுவரை சிம்ம இராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கின்றார். கன்னி இராசி, சுக்கிரனுக்கு வலிமையிழந்த வீடாகும்.

உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். உச்சம் பெற்ற புதனோடு சுக்கிரன் சேர்வதால் 'நீச்சபங்க இராஜயோக' அடிப்படையில் உங்களுக்கு நன்மைகளையே செய்யும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். வெளிநாட்டு சம்பந்தமாக அனுகூலமான தகவல் வரலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### மீன செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் செவ்வாய், ஒக்டோபர் 26 ஆம் திகதி வக்கிர இயக்கத்தில் மீன இராசிக்குச் செல்கின்றார். வக்கிரமாக இருந்தாலும் குரு வீட்டிற்கு செல்வதால் பெரும் பாதிப்பு ஏற்படாது. பொதுவாக தைரியகாரகன் செவ்வாய் என்பதால் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் இழக்க வேண்டாம்.

இடம், பூமிக்கு அதிபதியானவர் செவ்வாய் என்பதால் வக்கிர இயக்க காலத்தில், நிலுவைப் பணம் வரலாம். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் எதிர்பாராத விதமாக வந்து சேரலாம்.

### புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்

ஒக்டோபர் 27 ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கும் புதன், வக்கிர நிவர்த்தியாகின்றார். ஜீவன ஸ்தானம் பலம் பெறுவதால் நிறைய வாய்ப்புகள் உங்களுக்கு வரப்போகின்றது. நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் கூட்டாளிகள் வந்திணைவர். மூலதனம் போட்ட வங்கிகளில் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்தியோக முயற்சியில் ஈடுபட்டவர்களாக இருந்தால் உயர் பதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்பும் சம்பள உயர்வு பற்றிய சந்தோசத் தகவலும் வரலாம். நவம்பர் 4 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு சேரும் பொழுது 'புத-ஆதித்ய யோகம்' உருவாகும். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

### மகர குருவின் சஞ்சாரம்

நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். கடந்த ஓராண்டாக தனுசு இராசியில் சஞ்சரித்த குரு இப்போது மகர இராசிக்கு செல்கின்றார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும்.

அங்கிருந்தபடி 2, 4, 6 ஆகிய இடங்களைப் பார்வையிடுகின்றார். இதன்மூலம் குடும்ப முன்னேற்றம், தாய்வழி அனுகூலம், பணிபுரியும் இடத்தில் பாராட்டு போன்றவை கிடைக்க வழிவகுப்பார். நீச்ச குருவாக இருந்தாலும் குருவின் பார்வைக்கு பலன் உண்டு என்பதால் குரு கவசம் பாடி வழிபடுவது நல்லது. இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வரவும் செலவும் சமமாகும். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் திடீரென முடிவிற்கு வரலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய்வழி ஆதரவும் உண்டு. பணி புரியும் பெண்களுக்கு புதிய வாய்ப்புகள் பொருளாதார முன்னேற்றத்தோடு வரலாம்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் சுய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். நவராத்திரி நாயகியை வழிபடுவது நல்லது.






## புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் கிடைக்கும்

சார்வரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். பாக்கிய ஸ்தானாதிபதி புதன் வக்கிரம் பெற்றிருந்தாலும் உச்சம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். விரய ஸ்தானத்தில் செவ்வாய் பலம் பெற்றிருக்கின்றார். எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். உடன் பிறப்புகளின் இல்லங்களில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்பு கைகூடி வரும்.

### நீச்சம் பெறும் சுக்கிரன்

இதுவரை சிம்ம இராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கின்றார். அவர் அங்கு நீச்சம் பெற்றாலும் உச்சம்பெற்ற புதனோடு சேருவதால் 'நீச்ச பங்க இராஜயோகம்' ஏற்படுகின்றது. எனவே பொருளாதார உயர்வு, புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இதுவரை கிடைக்காத சலுகைகள் கிடைக்கும். மாமன்-மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.

### மீன செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், ஒக்டோபர் 26 ஆம் திகதி வக்கிர இயக்கத்தில் மீன இராசிக்குச் செல்கின்றார். குரு வீட்டில் செவ்வாய் சேரும் போது 'குருமங்கள யோக' அடிப்படையிலும் ஒருசிலருக்கு பலன் கிடைக்கலாம். 'இல்லம் கட்டிக் குடியேற வேண்டும்' என்ற ஆசை நிறைவேறும். நீண்ட நாட்களாக தாமதித்து வந்த சுபகாரியப் பேச்சுக்கள் திடீரென முடிவாகும்.

உடன்பிறப்புகளின் உதவி கூடுதலாகக் கிடைக்கும். 'முன்பு விற்பனையான இடத்திற்கு இன்னும் பணம் வரவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும்.

### புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்

ஒக்டோபர் 27 ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கும் புதன், வக்கிர நிவர்த்தியாகின்றார். தன-பஞ்சமாதிபதியான புதன், வக்கிர நிவர்த்தியான பிறகு மிகுந்த யோகத்தை வழங்குவார். வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்து உதிரி வருமானங்கள் பெருகலாம். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதியும் கடல் தாண்டி பணிபுரியும் வாய்ப்பு கருதியும் நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி தரும். நவம்பர் 4 ஆம் திகதி துலாம் இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு சேரும் பொழுது 'புத-ஆதித்ய யோகம்' உருவாகின்றது. எனவே பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

### மகர குருவின் சஞ்சாரம்

நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகவான் பகை கிரகமாக விளங்குபவர். அவரது பார்வை 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே திட்டமிடாது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். ஆரோக்கியம் சீராகும். தடைப்பட்ட பதவி உயர்வுகள் தானாக வந்து சேரும். குரு கவசம் பாடி குருவை வழிபடுவது நல்லது.

இம்மாதம் பிரதோஷ நாளில் நந்தி வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் நன்மைகள் வந்து சேரும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எடுத்த காரியத்தை எளிதில் முடிப்பீர்கள். கணவன்- மனைவிக்குள் அன்பும் அரவணைப்பும் அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். உங்கள் பெயரிலேயே இடம் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்தபடியே இலாகா மாற்றம் கிடைக்கும். ராகு வழிபாடு யோகம் தரும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக்கொடுத்த தொகை வந்து சேரும். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். (தொடரும்)

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 50 பேர்



(குருமன்காடு)

வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தனிமைப்படுத்தல் முகாமிற்கு கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் விமான பயணிகள் 50 பேர் தங்கவைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த பயணிகளில் விமான பயணிகள் 50 பேருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டு அவர்கள் அவர்களது வதிவிடங்களுக்கு இராணுவத்தினரால் பேருந்துகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். (5-4-250-299)




# ஊடகங்களில் வெளியான செய்தியை அடுத்து
# சீர்செய்யப்பட்ட மின் கம்பங்கள்
## மின்சார சபைக்கு மக்கள் பாராட்டு



(குருமன்காடு)

வவுனியா குழுமாட்டுச்சந்தி - மரக்காரம்பளை வீதி 3.40 கிலோமீற்றர் தூரத்திற்கு அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையின் காரணமாக வீதியோர பழைமையான மின்கம்பங்கள் உடைந்து விழும் நிலைமையில் காணப்படுவதாக ஊடகங்களில் வெளியான செய்தியையடுத்து மின்கம்பங்கள் அகற்றும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகார சபையினரினால் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடனான இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டுத்திட்டத்தின் கீழ் சீன அரச கட்டுமானப் பொறியியல் நிறுவனத்தினால் 3.40 கிலோ மீற்றர் நீளமான குழுமாட்டுச்சந்தி - மரக்காரம்பளை வீதி செப்பனிடப்படும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ் அபிவிருத்தி பணியின் போது பயன்படுத்தப்படும் வீதியில் மண், கற்களை அழுத்தும் இயந்திரத்தின் செயற்பாட்டின் போது வீதியோர பழைமையான மின்கம்பங்கள் உடைந்து விழும் நிலையில் காணப்படுவதுடன் சில தூண்கள் பாதையிலும் காணப்படுவதுடன் பல தூண்களின் கம்பிகள் வெளியே தெரிவதனால் அதனூடாக மின்சாரம் தாக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகவும் மின் கம்பங்கள் வீழ்ந்து மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் நேற்று அம் மின் கம்கங்களை அகற்றும் செயற்பாட்டில் வவுனியா மின்சார சபையினர் ஈடுபட்டனர். மின்சார சபையினரின் இச் செயற்பாட்டிற்கு அப்பகுதி மக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (5-4-250)

# ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுக்கும் பொலிஸார்



(நெளுக்குளம்)

வவுனியா பொலிஸாரினால் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதோடு அறிவுறுத்தல்களை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென நேற்றுக் காலை நகரப்பகுதிகளில் பொலிஸாரினால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

கொவிட் - 19 தாக்கம் அதிகரித்துச் செல்வதால் தேவைக்கேற்ப நகருக்குள் பிரவேசிப்பதுடன் குழந்தைகளை அழைத்து வருவதை தவிர்க்குமாறும்.

வங்கிகள், வியாபார நிலையங்களுக்குச் செல்லும் போது கட்டாயம் முகக்கவசம் அணிந்திருப்பதுடன் 20 நொடிகள் கைகளைக் கழுவியே உள் செல்லுங்கள். அத்தோடு சமூக இடைவெளியையும் பின்பற்றுமாறும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

வர்த்தக உரிமையாளர்களுக்கான அறிவித்தலில்,

வர்த்தக நிலையங்களில் பணிபுரிபவர்கள் கையுறை மற்றும் முகக்கவசம் அணிந்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. வியாபார நிலையத்திற்கு முன்பாக கைகழுவுவதற்கான அனைத்து வசதிகளும் செய்து வைத்திருக்க வேண்டும்.

இவ் அறிவுறுத்தல்கள் மீறப்படும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை நகரப்பகுதிகளில் அதிகமான திருடர்கள் இருப்பதனால் பெண்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வருவதையும் தேவைக்கு அதிகமாக பணத்தினை கொண்டு வருவதனையும் தவிர்க்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

அத்துடன் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற சுகாதார அறிவுறுத்தல்களை மீறும் பட்சத்தில் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் வவுனியாப் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டது. (5-4-299)

# இடம் ஒதுக்கீடு செய்ய நகர சபை தீர்மானம்

(குருமன்காடு)

வவுனியாவில் வாடகைக் கார் ஓடுவதற்கு நகரசபை அனுமதி வழங்கியுள்ளதுடன், அவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்வதற்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் வாடகைக் கார் ஓடுவதற்கு வவுனியா வைத்தியசாலை முன்பாக ஏற்கனவே நகரசபையால் அனுமதி வழங்கப்பட்ட நிலையில், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக அனுமதி இடை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் வவுனியா நகரசபை அமர்வில் குறித்த விடயம் கலந்துரையாடப்பட்டதுடன், முச்சக்கரவண்டிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வாடகைக்கார் ஓடுவதற்கும் சபை அமர்வில் உறுப்பினர்களால் அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி இரு பகுதியினரதும் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் செயற்பட வேண்டும் என நகரசபை உறுப்பினர்கள் தீர்மானித்ததுடன், வாடகைக்கார் ஓட்டுநர்களுக்கு இடம் வழங்குவது தொடர்பில் நான்கு பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் அடிப்படையில் அவர்களுக்கான இடம் ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-250)

# வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாட்டுத்தடைக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படும்

## சுமந்திரன்

(கிளிநொச்சி)

வவுனியா வடக்குப் பகுதியில் அமைந்துள்ள, வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு அடியவர்கள் சென்று வழிபடுவதற்கு அண்மைய நாட்களாக நெடுங்கேணி பொலிஸார் தடை விதித்து வருகின்றனர்.

இந்நிலையில் இவ் வழிபாட்டுத் தடைக்கு எதிராக விரைவில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்யவுள்ளதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆலயத்தில் வழிபாட்டிற்குச் செல்வதற்குப் பொலிஸார் தடை விதித்துள்ளமை தொடர்பில், ஆலய நிர்வாகத்தினர் நேற்று முன்தினம் வவுனியா தமிழரசுக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் சுமந்திரனைச் சந்தித்து முறையிட்டனர்.

இச்சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருக்கின்றன.

அதிலே பூசை செய்வதற்கு விதிக்கப்பட்டிருக்கின்ற தடை தொடர்பாக அந்த ஆலயத்தினுடைய, பூர்வீகம், வரலாறு இவற்றையெல்லாம் வைத்து மக்கள் அங்கே வழிபாடு செய்ய உரித்து இருக்கின்றது.

அதை எவரும் தடுக்க முடியாது என்ற ரீதியிலே அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றினை உடனடியாகத் தாக்கல் செய்வதாக இருக்கின்றோம் எனவும் தெரிவித்தார். (5-4)

# கல்வியியற் கல்லூரியில் 91 பேர் தனிமைப்படுத்தல்

(நெளுக்குளம்)

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு கொவிட்-19 சந்தேகநபர்கள் 91 பேர் அழைத்து வரப்பட்டனர்.

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள தேசியகல்வியியற் கல்லூரி கொவிட்-19 தனிமைப்படுத்தல் நிலையமாக அண்மையில் மாற்றப்பட்டது.

இந்நிலையில் கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களது உறவினர்கள் என 91 பேர் குறித்த நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்டனர்.

அவர்கள் இராணுவ பாதுகாப்புடன் 3 பேருந்துகளில் அழைத்து வரப்பட்டனர். (5-4-299)

தனது திறமைகளை காலத்தில் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவனே அறிவாளி.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சந்தர்ப்ப சூழல்களை நமக்குச் சாதகமாக்குவோம்

இலங்கை குடியேற்றவாதத்துக்கு ஆட்பட்டதனால் நாட்டுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டன என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

இதுபோல காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற அகநிலை, புறநிலை மாற்றங்கள் பாதகத்தை மட்டுமன்றி, சாதகமான சூழ்நிலைகளையும் ஏற்படுத்தும்.

அந்த சாதகமான சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்வதிலேயே எங்களின் வெற்றி தங்கியுள்ளது.

அந்த வகையில், தற்போது உலகம் முழுமையிலும் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று எங்கள் ஒவ்வொருவருக்கும் வலுவான செய்தியைச் சொல்லி நிற்கிறது.

அதாவது, இந்த உலகம் எந்த நேரமும் முடக்கப்படலாம். விஞ்ஞானம், தொழில்நுட்பம், விண்வெளி ஆராய்ச்சிகள், அணுவாயுத உற்பத்திகள் என அனைத்தும் பயனற்றவையாகப் போகலாம்.

இந்த உலகத்தை ஒரு கிருமியால் கந்தறுக்க முடியும். இதனை வல்லரசோ புல்லரசோ எதுவும் செய்ய முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது.

அதனோடு மிக முக்கியமான தகவல் அனைவருக்கும் கூறப்படுகிறது.

அதாவது உழுதுண்டு வாழுகின்ற வாழ்க்கைக்கு நிகர் எதுவுமில்லை.

உன்னுடைய உணவு உனது கையில் உள்ளது. அதனை நீயே! உற்பத்தி செய்து கொள். உன் வீட்டில் நெல் இருந்தால், தென்னை இருந்தால் பஞ்சம் ஏது?

உலகம் முடங்கினாலும் உன் சீவியம் நடந்தாகும்.

உன் பிள்ளைகள், உன் உறவுகள், அயலவர்கள் பசி என்று கூறாத அளவில் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தை உன்னால் செய்ய முடியும் என்பதையே கொரோனாத் தொற்று மக்களுக்கு எடுத்துரைக்கிறது.

இதில் நம் தமிழ் மக்களுக்கான ஒரு செய்தியும் உண்டு.

அதாவது கொரோனாத் தொற்றுக் காரணமாக எத்தனையோ பொருட்கள் இறக்குமதி ஆகாமல் தடைப்பட்டுள்ளன.

உதாரணத்துக்கு இந்தியாவில் இருந்து இங்கு வருகின்ற சன் பப்படம் இப்போது தடைப்பட்டுள்ளது.

கடைகளுக்குச் செல்லும் நம்மவர்கள் சன் பப்படம் இல்லையா? என்று கேட்கின்றனர்.

இத்தகைய கேள்வி எங்களின் பலவீனத்தையே காட்டுகிறது.

சன் பப்படத்தின் வரத்து இல்லாதபோது; நம் வடபுலத்து பப்படம் அந்த இடத்தைப் பிடிக்க வேண்டாமா? அதுபற்றி பப்பட உற்பத்தியாளர்கள் சிந்திக்க வேண்டாமா என்ன? இதுபோல ஏகப்பட்ட உதாரணங்களைக் கூறமுடியும்.

ஆக, கொரோனா ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில் எங்கள் உள்ளூர் உற்பத்திகளின் தரங்களை உயர்த்துவோம்.

ஊதுபத்தி, தெய்வ விக்கிரகங்களுக்கு சாத்தப்படும் பட்டாடை, திருநீறு, சந்தனம், குங்குமம், அடிக்கல் நாட்டுவதற்கான சங்கு என அனைத்தையும் இங்கேயே தரமாகத் தயாரித்தால் எங்கள் மக்கள் அவற்றின் மீது ஆர்வப்படுவர்.

இஃது எங்கள் உற்பத்திகளுக்கு காத்திரமான சந்தை வாய்ப்பைத் தந்தருளும் என்பதால் சந்தர்ப்பத்தை சாதகமாக்குவோம்.

# கொரோனாவால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை நாம் மறுப்பதற்கில்லை

## சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா தொற்றால் இலங்கையில் உயிரிழப்புகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுக்களை மறுப்பதற்கில்லை என சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு நேற்று சனிக்கிழமை காலை அவர் அளித்த நேர்காணலில் இந்த எச்சரிக்கையுடன் கூடிய தகவலை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டிருக்கும் அவர்,

கொரோனா வைரஸினால் பாதிக்கப்படுபவர்கள் இளைஞர்களாக இருந்தால் உயிரிழப்புக்கள் நேரிடுவது இல்லை என்ற போதிலும் வயோதிபர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால் அவர்களுக்கு தொற்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் உயிரிழப்புக்கள் பதிவாகலாம்.

“கடந்த காலங்களில் கந்தக்காடு மற்றும் வெலிசற கடற்படை முகாமில் தொற்று ஏற்பட்ட அநேகர் இளைஞர்கள் அல்லது வயோதிபவயதெல்லையை அண்மிக்கின்றவர்களாக இருந்தபடியினால்தொற்று குணமடைந்தது. உயிரிழப்புக்களும் ஏற்படவில்லை.

எனினும் எதிர்காலத்தில் வயோதிபர்களுக்கு இந்த தொற்று தீவிரமாகப் பரவினால் உயிரிழப்புக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றக் கோரிக்கையை வலியுறுத்தி

## நாளை சுகயீனலீவு போராட்டத்திற்கு அழைப்பு

(கரணவாய்)

வெளிமாவட்டங்களில் நீண்ட காலம் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்ற கோரிக்கையை வலியுறுத்தி வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம் நாளை திங்கட்கிழமை வடமாகாணம் தழுவியதாக சுகயீன லீவு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட பெருமளவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வட மாகாணத்தின் ஏனைய நான்கு மாவட்டங்கள் மற்றும் சில மாவட்டங்களில் இடமாற்றமின்றி நீண்ட காலம் கடமை புரிகின்றனர்.

- தொடர் நீண்ட பிரயாணங்களால் உடலியல் ரீதியான பாதிப்புகள்.
- திணைக்கள அதிகாரிகளால் மாவட்டம் விட்டு மாவட்டம் பழிவாங்கல் இடமாற்றங்கள்.
- திருமணமான பெண்கள் குழந்தை பேறின்மை மற்றும் கருச்சிதைவு.
- இடமாற்றம் நிட்சயமின்மையால் திருமணம் கைகூடாமை.
- பெறுகின்ற ஊதியத்தில் அரைவாசிக்கு மேல் போக்குவரத்து உணவு மற்றும் தங்குமிடத்திற்கு செலவாகின்றமை.
- குழந்தைகள் மற்றும் வயதான பெறறோரை பராமரிக்க முடியாமை.

போன்ற பல்வேறு பிரச்சினைகளை துன்பங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவைகளால் கடந்த ஆண்டு ஓர் அபிவிருத்தி உத்தியோகத்தரின் மரணம் மற்றும் கடந்த வாரம் ஓர் சிசுமரணம் போன்ற இழப்புகள் ஏற்பட்டுள்ளது

எனவே இத்தகைய சம்பவங்கள் தொடராதிருக்கவும் மற்றும் நியாயமான இடமாற்ற கொள்கையை ஏற்படுத்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் இடமாற்ற பிரச்சினைக்கும் தீர்வை வலியுறுத்தி குறிப்பாக அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் குறித்த இடமாற்ற விடயத்தில் தலையிட்டு தீர்வை பெற்றுக் கொடுக்க வலியுறுத்தி திங்கட்கிழமை சுகயீன லீவு போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கபட்டுள்ளது. (ம-3,60)

# ஊட்டச்சத்தின்மை பட்டியலில் இலங்கை 64 ஆவது இடத்தில்

(கொழும்பு)

உலக அளவில் 107 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் இலங்கை பசி மற்றும் ஊட்டச்சத்தின்மை நாடுகளின் பட்டியலில் 64 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

இப் பட்டியலில் இலங்கை கடந்த ஆண்டு 66 ஆவது இடத்தில் இருந் தது.

உலகளாவிய, தேசிய மற்றும் பிரா ந்திய மட்டங்களில் பசி குறித்து அளவிடுவ தற் கும் கண்காணிப்பதற் கும், பசிக்கு எதிரான திட்டங்களில் முன்னேற்றம் மற்றும் பின்னடைவுகளை மதிப் பிடுவதற் கும் வருடாந்திர குறியீட்டு பட்டியல் வடிவமைக்கப்படுகிறது.

தெற்காசிய நாடுகளில் தற்பேபது இந்தியா 97 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 88 ஆவது இடத்திலும், மியன்மார் 78 ஆவது இடத்திலும், நேபாளம் 73 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 99 ஆவது இடத்திலும் உள்ளது.

இப் பட்டியலில் சாட் (107), கிழக்குத் திமோர் (106), மற்றும் மடகாஸ்கர் (105) ஆகியவை இறுதி இடங்களில் உள்ளது.


அந்த அறிக்கையின் படி, கிட்டத்தட்ட 690 மில்லியன் மக்கள் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள் ஆவர். (5-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

சொல்லுகின்ற விடயத்தை நீண்ட கதையாக சொல்லத் தேவையில்லை. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதே அறிவுடையவர்களின் செயல்

-ரவீந்திரநாத் தாகூர்-

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ சத்தியத்தைப் பற்றி அறிவுபெற்ற பிறகும் நாம் மனமறிந்து பாவம் செய்தால் அதற்குப் பாவபரிகாரமாக ஒரு பலி, காணிக்கையுமில்லை.

❖ எளியவனைக் கருதிப் பார்ப்பவன் பாக்கியவான். தீங்கு நாளில் அவனைக் கர்த்தர் விடுவிப்பார்.

❖ மமதை பிடித்தவர்களையும், உள்ளூரப் பொய்களின் பக்கம் திரும்பியவர்களையும் மதிக்காமல் கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைத்திருக்கும் மனிதன் பாக்கியவான்.

❖ வயதானவரை அவமதிக்காதே. அவரை ஒரு தந்தையைப் போல நடத்து. இளைஞர்களைச் சகோதரர்கள் போலவும், வயதான பெண்மணிகளைத் தாய்மார்களைப் போலவும், இளம் பெண்களைச் சகோதரிகளைப் போலவும் முழுமனத் தூய்மையுடன் கருது.

❖ நம்மிடம் பாவம் என்பதே இல்லை என்று சொல்லிக் கொள்வோமேயானால், நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்கிறோம். நம்மிடம் சத்தியம் என்பதும் இல்லை.

# ஜொலி பாஸ் லீக் - 2020

ஜொலி ஸ்ரார்ஸ் கிரிக்கெட் கழக அணியின் ஏற்பாட்டில் 2020 ஆம் ஆண்டுக்கான முதலாவது பருவ கால ஜொலி பாஸ் லீக் சுற்றுப் போட்டியானது எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் மற்றும் 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதன் முதற்கட்டமாக அணி உரிமையாளர் அறிமுகமும் அணி உரிமையாளர் கலந்துரையாடலும் கடந்த 11 ஆம் திகதி இடம் பெற்றது.



குறித்த சுற்றுப்போட்டியில் ஜொலிஸ்ரார் வீரர்கள் யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் வீரர்கள் மற்றும் கல்வி கற்ற வேறு கழகங்களில் பதிவு செய்யப்படாத வீரர்கள் பங்குபெற முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜொலி பாஸ் லீக் தொடருக்கான ஏலம் இன்று 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ராஜா கிறீம் ஹவுஸில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோல்டன் ஈகிள் கே.ரி.தனியார் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கே.தர்மகுலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் ஜொலி பாஸ் லீக் தொடரானது யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் முதலாவது ஏல முறையிலான inter caup T-10 தொடர் என்பது குறிப்பிடத்தக்கது.(4)

# கொல்கத்தாவை அடித்து நொருக்கியது மும்பை

கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய மும்பை அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். தொடரின் நேற்று முன்தின ஆட்டத்தில் மும்பை, கொல்கத்தா அணிகள் மோதின.

அபுதாபியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணித் தலைவர் மோர்கன் முதலில் துடுப்பாட்டம் தெரிவு செய்தார்.

இதனையடுத்து தொடக்க வீரர்களாக திரிபதி, கில் களமிறங்கினர். ஆனால் மும்பை அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாத கொல்கத்தா அணி வீரர்கள் அடுத்தடுத்து விக்கெட்டுகளைப் பறிகொடுத்தனர்.

திரிபதி (7), ராணா (5), கில் (21), தினேஷ் கார்த்திக் (4), ரசல் (11) என அடுத்தடுத்து முக்கிய விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

இதையடுத்து அணித் தலைவர் மோர்கன் மற்றும் கம்மின்ஸ் ஜோடி இறுதிக் கட்டத்தில் அணியை சரிவில் இருந்து மீட்டனர்.

20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 148 ஓட்டங்கள் எடுத்தனர்.

கடைசி வரை ஆட்டமிழக்காமல் கம்மின்ஸ் 36 பந்துகளில் 53 ஓட்டங்களும், மோர்கன் 39 ஓட்டங்களும் எடுத்தனர்.



இதையடுத்து, 149 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் அணி களம் இறங்கியது.

நிதானமாக ஆடிய ரோஹித் 36 பந்தில் 35 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன்பின் இறங்கிய சூர்யா குமார் யாதவ் 10 ரன்களில் வெளியேறினார்.


டி காக் 44 பந்துகளில் 78 ஓட்டங்கள் குவித்து மிரட்டினார்.

ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய மும்பை இந்தியன்ஸ் அணி, கொல்கத்தா அணியை எளிதில் வீழ்த்தியது.

16.5 ஓவர்களில் மும்பை இந்தியன்ஸ் அணி 2 விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டங்கள் எடுத்து வெற்றியை தமதாக்கியது.

மும்பை இந்தியன்ஸ் அணியில் அதிகபட்சமாக குயிண்டன் டி காக் ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்கள் குவித்தார். (4)

# இலங்கை தமிழனாக பிறந்தது என் தவறா? - முரளி உருக்கம்



முத்தையா முரளிதரன் வாழ்க்கை வரலாறு படமாக்கப்படுகிறது.

இப் படத்திற்கு 800 என பெயர் வைக்கப்பட்டுள்ள இந்த படத்தில் விஜய் சேதுபதி நடிக்கவுள்ளார்.

இந்தப் படத்தின் முதற் பார்வை மற்றும் மோஷன் போஸ்டர்கள் அண்மையில் வெளியிடப்பட்டன.


குழந்தை பருவத்தில் இருந்து அவர் 800 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தது வரை திரைப் படத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

முரளிதரன் தமிழனாக இருந்தாலும் இறுதி யுத்தத்தின் போது சிங்களத்தின் பக்கம் நின்று துரோகம் புரிந்தவர். எனவே இந்த படத்தில் தமிழனான விஜய் சேதுபதி நடிக்கக் கூடாது என தமிழ்த்தேசியவாதிகளும் படைப்பாளிகளும் பல்வேறு எதிர்ப்புகள் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் அது தொடர்பில் விளக்கம் அளிக்கும் வகையில் முரளிதரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில் நான் இலங்கை அணியில் இடம்பெற்று சாதனை படைத்த காரணத்தினாலேயே என்மீது ஒருதவறான பார்வை இருந்து வருகிறது.

நான் இந்தியாவில் பிறந்து இருந்தால் இந்திய அணியில் இடம்பெற முயற்சித்திருப்பேன். இலங்கை தமிழனாகப் பிறந்தது எனது தவறா? என உருக்கமாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.(4)

# வந்தார் மோர்கன்; விலகினார் கார்த்திக்



கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் கப்டன் தினேஷ் கார்த்திக், பட்டிங்கில் கவனம் செலுத்தும் வகையில் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் கப்டனாக தினேஷ் கார்த்திக் இருந்தார்.

அந்த அணியில் இங்கிலாந்து அணியின் மோர்கன் விளையாடி வருகிறார். இங்கிலாந்துக்கு உலக கோப்பையைப் பெற்றுக் கொடுத்த அவருக்கு அனுபவம் அதிகமாக இருப்பதால் அவரை கப்டனாக நியமிக்க வேண்டும் என்று ரசிகர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்நிலையில் தினேஷ் கார்த்திக் தனது கப்டன் பதவியை இராஜினாமா செய்துள்ளார். பட்டிங்கில் கவனம் செலுத்துவதற்காக தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக தினேஷ் கார்த்திக் தெரிவித்தார். (4)

## மோ. சைக்கிள்...

சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை 6.15 மணியளவில் கோப்பாய் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தரை வீதியால் சென்றவர்கள் மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

எனினும், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து சம்பவத்தில் இயற்றாலை கொடிகாமத்தைச் சேர்ந்த ஒரு பெண் பிள்ளையின் தந்தையான கருணா ரட்ணம் கருணானந்தன் (வயது-36) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

(ம-3,18,78)

## புன்னாலைக்கட்டு...

குறித்த முதியவரின் வீட்டுக்குள் நுழைந்த வாள்வெட்டு கும்பல் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றிருப்பதாக கூறப்படுகின்றது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்ற நான்கு பேர் கொண்ட கும்பலே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

பலத்த காயத்திற்குள்ளான 62 வயது மதிக்கத்தக்க முதியவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-3)

## முன்னணி...

10.30 மணியளவில் நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வருகை தர உள்ளார் என்ற தகவலை அடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவில்லை. (ம-3)

## தமிழ்த் தேசியக்...

நிணைந்து செயற்பட வேண்டும் என விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

அவ்வாறு செயற்படுவது தொடர்பில் ஆராய்வதற்கு ஐவர்கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட் டுள்ளது" என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நேற்றுக் காலை ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கூடிக் கலந்துரையாடினர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்ததாவது.

தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்குகின்ற கட்சிகள் இன்று (நேற்று) மீண்டும் கூடி ஆராய்ந்தோம். இந்த கலந்துரையாடலில் தமிழ் தேசிய கட்சிகள் அமைப்பு ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என கலந்து கொண்ட அனைத்து பிரதிநிதிகளும் தங்களது விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.

அதற்காக நாம் குழு ஒன்றை நியமித்துள்ளோம். அமைப்பு ரீதியாக எவ்வாறு நாம் செயற்பட வேண்டும் என அந்த குழு ஆராயவுள்ளது. அவர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளனர். அதன் பின்னர் நாம் அந்த அறிக்கை தொடர்பில் ஆராய உள்ளோம்.

மேலும் இக்கலந்துரையாடலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு நாம் அழைப்பு விடுத்திருந்தோம். எனினும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லை.

எனினும் நாம் தமிழ் தேசிய பரப்பில் தொடர்ந்து அனைத்து கட்சிகளும் ஒன்றாக இயங்குவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் பேசவுள்ளோம்.

மேலும் தமிழர்கள் எதிர்நோக்குகின்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் தமிழ் தேசிய பரப்பில் இயங்குகின்ற நாம் அனைவரும் ஓரணியில் இணைந்து பயணிப்பது என தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக தமிழர்களுக்கு எதிராக எந்த ஒரு பிரச்சினைகள் எழுந்தாலும் அனைத்து கட்சிகளும் உடனடியாக ஒன்றுகூடி தீர்மானங்களை எடுத்து ஓரணியில் பயணிப்பது என தீர்மானித்து உள்ளோம்.

20ஆவது திருத்தச் சட்டவரைவு தற்போது பேசுபொருளாக உள்ளது. அந்த இருபதாவது திருத்தச் சட்டவரைவுக்கு எதிராக தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

எனவே பாராளுமன்ற குழு ஒன்று கூடி அதனை எதிர்ப்பார்கள் என நான் நம்புகின்றேன் என்றார். (ம-3,101)

## வவுனியா...

பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் இரண்டு சடலங்கள் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவ இடத்திற்கு சென்ற ஓமந்தை பொலிஸார், தலையில் பாரிய வெட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இரண்டு சடலங்களை மீட்டுள்ளனர்.

மேலும் ஒருவர் படுகாயமடைந்திருந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரது நிலையும் கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தில் மாணிக்கர் வளவு கிராமத்தின் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரான கோபால் குகதாசன் (வயது-40) (4 பிள்ளைகளின் தந்தை) மற்றும் கரிப்பட்ட முறிப்பை சேர்ந்த சிவனு மகேந்திரன் (வயது - 34) ஆகிய இருவர் மரணமடைந்ததாக பொலிஸாரால் அடையாளம் காணப் பட்டுள்ளனர்

சுப்பிரமணியம் சிவாகரன் என்ற நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் மாணிக்கர்வளவில் வசித்துவரும் இளைஞர் ஒருவர் ஓமந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ம-3,299)

## நேற்றும் 121...

நிலையில் நேற்று மேலும் 121 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை தொழிற்சாலை ஊழியர்களுடன் நெருங்கிப் பழகிய 20 பேருக்கும் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட 28 பேருக்கும் இவ்வாறு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக நேற்று ஏற்கெனவே மினுவாங்கொட கொத்தணியுடன் தொடர்புடைய 73 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதன் மூலம் நேற்று 121 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து மினுவாங்கொட கொத்தணி கொரோனா பரவல் காரணமாக இது வரை தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 14 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சுமந்...

யிடும் முகமாக தமிழ்க் கட்சிகள் நேற்று யாழில் ஒன்றிணைந்தன.

யாழ். இளங் கலைஞர் மண்டபத்தில் நேற்றுக் காலை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பங்கேற்றார். இவரின் வருகையையடுத்து ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவி திருமதி அனந்தி சசிதரன் கூட்டத்தை விட்டு வெளியேறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் அதிரப் படையினரின் பாதுகாப்புடன் இந்த கூட்டத்திற்கு வருகை தந்தமையினாலேயே அனைத்துக் கட்சிகள் கூட்டத்தினை புறக்கணித்து வெளிநடப்பு செய்ததாக ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகமும் வட மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி என்ற பேச்சை வைத்துக் கொண்டு எமக்குப் பெரிய துரோகத்தை இழைத்துவிட்ட பின்னரும் அவருடன் இணைந்து பயணிப்பது என்பது எந்த வகையில் பார்க்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். (ம-3,101)

## கிளிநொச்சியில்...

விரோதமான முறையில் இயந்திரமூலம் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 5 டிப்பர்களும் 3 உழவு இயந்திரங்களும் மணல் ஏற்றுவதற்கு பயன்படுத்திய இயந்திரம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ம-3,316)

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/10/17 சீட்டிழுப்பு இலக்கம் 1544
சுப்பர் இலக்கம் 09 வெற்றி இலக்கங்கள் 07 13 41 60
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0645
W 13 25 34 53 73

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 17-10-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1064
X 9 0 8 8 4 4

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 17-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2573
R 16 22 42 43

மஹஜன சம்பத
திகதி 2020/10/17
சீட்டிழுப்பு இலக்கம் 4278
P 0 2 3 3 3 0

சங்வர்தன வாசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 376 திகதி 17.10.2020 வர்ணம் சிவப்பு
K 19 38 69 5
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 10,000,000
Web: www.dlb.lk

ராசி
திகதி 17/10/2020 வெற்றி வாரம் 2955
சுப்பர் ஜக்பொட் ரூ. 21,78,917 வர்ணம் இளம் நீலம்
26 33 39 55
7277 619
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,823,580

அத கோடிபதி
சனிக்கிழமை சீட்டிழுப்பு இல: 1074 வர்ணம்: மஞ்சள் சீட்டிழுப்பு திகதி: 2020.10.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 79,019,765/-
04 05 39 44 I
ரூ. 500/- 1586
ரூ. 100/- 342

சனிதா
சனிக்கிழமை சீட்டிழுப்பு திகதி: 2020.10.17 சீட்டிழுப்பு இல.: 3404 வர்ணம்: பச்சை
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,456,422.10
58 64 70 73 W
ரூ. 500/- 5553

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1248 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 17.10.2020 தினம் சனிக்கிழமை
I 19 26 30 41
50,100,000.00
SUPER 500 2 8 5 3

சீட்டிழுப்பு வாரம் 18 சீட்டிழுப்பு திகதி 17/10/2020
வெற்றி இலக்கங்கள் 35 37 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 30,83,500

## யாழில்...

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்படை முகாமில் பணியாற்றும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் பயணித்த தொடருந்து மற்றும் பேருந்து பயணத் தடங்கள் தொடர்பிலான அறிவிப்பினை யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் பணியாற்றும் கடற்படையினர் இருவருக்கு கொரோனா தொற்று நேற்று முன்தினம் ஐப்பசி 16 ஆம் திகதி இரவு உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 21 வயதான பெண் கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் கடந்த ஐப்பசி 4ஆம் திகதி காங்கேசன்துறை புகையிரத நிலையத்திலிருந்து அதிகாலை 3.45 மணிக்கு புறப்பட்டு கொழும்பு நோக்கி செல்லும் புகையிரதத்தில் 3ஆம் வகுப்பு பெட்டியில் பிரயாணம் செய்து காலை 11.30 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடைந்துள்ளார்.

பின்னர் அதே தினம் பிற்பகல் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து 4 மணிக்கு புறப்பட்டு காங்கேசன்துறை நோக்கி செல்லும் புகையிரதத்தில் 3ஆம் வகுப்பு பெட்டியில் பிரயாணம் செய்து இரவு 11.00 மணிக்கு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

மேலும் இதே கடற்படை முகாமைச் சேர்ந்த 31 வயதான ஆண் கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் புரட்டாதி 27ஆம் திகதி பதுளை மாவட்டத்தில் வெலிமடையில் உள்ள தனது வீட்டுக்கு விடுமுறையில் சென்றுள்ளார்.

இவர் கடந்த ஐப்பசி 06 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு புறப்பட்டு கண்டி நகரத்தை காலை 11 மணிக்கு சென்றடைந்துள்ளார். அங்கிருந்து இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தில் 11.40 மணிக்கு புறப்பட்டு மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தை வந்தடைந்துள்ளார். மீண்டும் அங்கிருந்து மாலை 6.50 மணிக்கு காங்கேசன்துறைக்கு செல்லும் தனியார் பேருந்தில் பயணித்து இரவு 7.40 மணிக்கு காங்கேசன்துறையை அடைந்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட புகையிரத வண்டிகளில் 3ஆம் வகுப்பு பெட்டிகள் மற்றும் பேருந்துகளில் இக் கடற்படை உத்தியோகத்தர்களுடன் பயணித்தவர்கள் வடமாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24மணிநேர அவசர அழைப்பிலுள்ள 021 222 6666 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டு உங்களது விபரங்களை அறியத்தரவும்.

பயணம் செய்தவர்களின் விபரங்களை அறிவிப்பதன் மூலம் உங்களுக்கு கொரோனா தொற்று உள்ளதா எனப் பரிசோதித்து அறியவும் உங்களது குடும்பங்களையும்அயலவர்களையும்கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கவேண்டிய அவசர சேவைகளை உடனடியாக வழங்குவதற்கும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நோய் எமது மாவட்டத்தில் பரவாதிருக்க பயணம் செய்தவர்கள் அச்சமின்றி உங்களின் தகவல்களை வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

## மாவட்டங்க...

எனவே மாவட்டங்களுக் கிடையிலான போக்குவரத்தை முடக்குங்கள் என அரசாங்கத்திடம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் அதிகரிக்கும் கொரோனா தொற்று மினுவாங்கொடையுடன் தொடர்புடையன என அதிகாரிகள் கூறினாலும் சமூக பரவல் தொடங்கியிருக்கலாம் என்பதற்கான அறிகுறி இதுஎன்றும் அச்சங்கத்தின் உறுப்பினர் டொக்டர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார். நாட்டில் அபாய வலையங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் நடமாட்டத்தை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறும் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்த மாவட்டங்களுக்கு இடையில் தடை விதிக்க வேண்டும் என்றும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை பொலிஸ் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளமையானது ஒரு தீர்வு அல்ல என்றும் ஏனெனில் மக்கள் இன்னும் அனுமதிப் பத்திரத்தை காட்டி செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்சுட்டிக்காட்டினார். இதற்கிடையில், கொரோனா தொற்று உறுதியான நோயாளிகளின் எண்ணிக்கையின் விரைவான அதிகரிப்பை கட்டுப்படுத்த நாட்டில் தற்போது உள்ள சுகாதாரமுறை போதுமானதாக உள்ளதா என்ற கவலையையும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எழுப்பியுள்ளது. (ம-03)

## விபரீத...

விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பபவம் நேற்றுக் காலை நடைபெற்றுள்ளது.

குறித்த சிப்பாய் தன்னைத் தானே சுட்டு உயிரை மாய்த்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் வேரஹும லான்ஸ் கோப்ரலே உயரி ழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இராணுவப் பொலிஸாரும் பளைப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## கொரோனா...

தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்படும் நிலையில் மக்கள் மிகுந்த விழிப்புடன் இருக்கவேண்டும் என கேட்டிருக்கும் இராணுவ தளபதி சவேந்திர சில்வா, வார இறுதி நாட்களில் மேற்கொள்ளும் பயணங்களை கட்டுப் படுத்தி கொரோனா பரவலை கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் முடிந்தளவு வார இறுதி நாள் பயணங்களை நிறுத்துவது நல்லதெனவும் அவர் கேட்டிருக்கின்றார்.

தற்போது அதிக கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படும் கம்பஹா மாட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் காணப்படும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.(ம-3)


### SB Travels - மீண்டும் எமது சேவையை ஆரம்பித்துள்ளோம்!

சகல விதமான பயணச் சீட்டுகளிற்கான நேரடி முகவராக (IAIA Agent) செயற்படும் SB Travels and Tours Pvt Ltd. சகல நாடுகளிற்கான விமான பயணச் சீட்டுக்கள். Travel Itinerary, Travel Insurance, ஐரோப்பிய நாடுகளிற்கான Online VFS Appointments, விசா விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்தல் மற்றும் விமானப் பயணத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து தருகிறது.

தொடர்புகளிற்கு :
**SB Travels and Tours Pvt Ltd.**
No. 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 8555 / 9555
M.P : 077 108 3480 / 076 691 1082 (C-523)

### அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2022ல் நீங்களும் அமெரிக்காவில்..
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 10-11-2020
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

V2 Travels www.facebook.com/v2tandt

### மணமகள் தேவை

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)

Jeyaratnam1988@gmail.com 077 219 4331

### அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1250/= (C-514)
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலன்ட்- 1150/=
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது
இந்தியா – டுபாய் – சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துணுக்காய் மன்னார்/வவுனியா

### மணமகள் தேவை

15.05.1985 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பம், உத்திரட்டாதி 1ம் பாதம், London Citizen, 4 இல் சூரியன் செவ்வாய், கிரகபாவம் 18, B.Com பட்டதாரி - யாழ்ப்பாணம் மணமகனுக்கு மணமகள் தேவை.
சூரி-செவ், பட்டதாரி மணமகள், வயது வித்தியாசம் (6-7) யாழ். மாவட்டம் விரும்பத்தக்கது. (4299)

076 668 8199, 077 914 7318

### வேலையாட்கள் தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது கட்டடத்திற்கு மேசன் வேலை, கூலி வேலையாட்கள், மாபிள் பதிப்பவர் உதவியாள், பெயின்ரிங் உதவியாளர் தேவை. (4404)

தொடர்பு - 077 105 6694

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், வசாவிளான், குட்டியபுரம் அம்மன் கோவில் முன்பாக மெயின்றோட்டுடன் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். ஒரு பரப்பு மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் (350,000/-) (4405)

தரகர் தேவையில்லை.

076 640 0974, 077 998 6806

### காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மில் வீதியில், நாதன் பிரான் கோயிலுக்கு அருகாமையில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 1 பரப்பு 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். 2 பரப்புக்களாக பிரித்துக் கொடுக்கப்படும். (தரகர் தேவையில்லை.) (4405)

076 888 4625

### விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி நெதர்லாந்து / சுவிஸ் 1150 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-308)

### A/L கலைப்பிரிவு இணைய வழிக்கற்றல் (ZOOM)

ஆர்வம் குழுமத்தின் கல்விச் செயற்பாடு

ஆசிரியர் குழாம்

தமிழ் - திரு. த. அஜந்தகுமார், இந்து நாகரிகம்- திரு. ப. ஜோதீஸ்வரன், வரலாறு - திரு. M. பத்மன், புவியியல் - பிரபல ஆசிரியர், அரச அறிவியல் - திரு. சா. ஹரிகரன், ஊடகக்கற்கை - திரு. நி. கஜிதரன், கிறிஸ்தவ நாகரிகம் - திரு. J. வசந்தன், நாடகமும் அரங்கியலும் - திரு. J. ஜோன்சன், ராஜ்குமார், சங்கீதம் - திரு. கு. அனுஷன், அளவையியல் - திரு. க. தர்மதேவன், நடனம் - செல்வி சி. ஜனனி

100 பேருக்கு மட்டுமே அனுமதி
பதிவுகளுக்கு முந்துங்கள் (4402)

Viber, WhatsApp - 077 469 6540

### வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட வியாபார நிலையங்கள் வாடகைக்கு விடப்படும். (சிகிச்சை நிலையங்கள், கல்வி நிலையங்களுக்கும் ஏற்றது.) (4404)

தொடர்பு - 077 953 0496

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் (ஆண்கள்) தேவை.
சம்பளம் - 20,000/- தொடக்கம் 35,000/- வரை
தொடர்பு (4296)
077 375 3503

### CLASS

German, Holand (Netherland), Ostria, Swiss மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் Embassy இன் A1 Exam க்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது.
Mrs. P. Kajenthini
தொடர்பு (4403)
077 160 4823
Jaffna.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்


நாதம் 280

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 18.10.2020 தொலைபேசி : 021 222 3378



# 20 இற்கு எதிர்ப்பு



# மௌனம் கலக நாஸ்தி

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## கொரோனா அதிகரித்தாலும் இறப்பில்லா ஆச்சரியம் கண்டோம்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் இருந்த அத்தனை பேரும் முகக் கவசம் அணிவதை மறக்கவில்லை. மாஸ்க் அணிந்து கொண்டு கதைப்பது கடினம் என்பதாலோ என்னவோ ஆலடியில் சில நிமிடம் அமைதி நிலவியது.

அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

விதானையார்: 20 ஆவது திருத்த சட்ட மூலத்திலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்க, இஞ்சால கொரோனா நாடு முழுவதையும் சுற்றி வளைத்துப் போட்டுது.

கங்காணி: அப்ப இனி இலங்கையில தான் கொரோனாத் தாண்டவம் எண்டு சொல்லுறியள்.

மூப்பர்:கொரோனாத் தொற்று வந்தாலும் இறப்பு ஏற்படவில்லை என்பது ஆச்சரியம் தானே!

பண்டிதர்: கொரோனாத் தொற்று ஏற்பட்டால் ஒரு குறிப்பிட்ட வீதம் இறப்பு ஏற்படவே செய்யும். அப்படி இறப்பு ஏற்படவில்லை எண்டால், உலக நாடுகள் இலங்கையிட்டத்தான் பாடம் படிக்க வேணும்.

சாத்திரியார்: நான் நினைக்கிறன் சீனாவின்ர மருத்துவ உதவிகள் இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்குது போல.

சிறாப்பர்: இருக்கும்... இருக்கும். உலகில சீனாவின்ர முதலாவது நட்பு நாடு இலங்கை எண்டு தானே கதைபடுகுது. ஆகையால சீன அரசாங்கம் கொரோனாவைக் குணப்படுத்த மருந்துகளைக் கொடுத்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வாத்தியார்: சீனா மருத்துவ உதவி வழங்காமல் இருந்தால்...

பண்டிதர்: கொரோனா இறப்பு மறைப்புச் செய்யப்படுகுது எண்டுதான் பொருள்.

மூப்பர்: இதுகளெல்லாம் இங்க கதைக்கிற விடயமல்ல. இதில வலு இரகசியமாக இருக்க வேணும். நான் அறிந்த மட்டில கொழும்பு தேசிய வைத்தியசாலையில ஒரு குறிப்பிட்ட மருத்துவர்களுக்கு கொரோனாப் பரிசோதனை செய்யப்பட்டதாம். அதில சில மருத்துவர்களுக்கு கொரோனாப் பொசிட்டிவ் எண்டு அறிஞ்சனான். இருந்தும் உண்மைத்தன்மை பற்றி எனக்குத் தெரியாது.

வாத்தியார்: சரி... சரி...கொரோனா விசயத்தில நல்ல பெயர் வாங்குவதற்காக, கொரோனாத் தொற்றை மறைப்புச் செய்யிறதோ அல்லது கொரோனாவால ஏற்படுகிற இறப்பை மறைப்புச் செய்யிறதோ அவ்வளவு நல்லதல்ல.

கங்காணி: அது சரி இப்ப இலங்கையில கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துகிற பொறுப்பு ஆரிட்ட இருக்குது.

விதானையார்: கொரோனாத் தொடர்பில இராணுவத் தளபதி அறிக்கை விடுகிறார். அதேநேரம் சுகாதார அமைச்சரும் தன்ர கடமைக்கு கொரோனாப் பற்றிக் கூறுகிறார். இதைவிட பொலிஸாரும் விடாதபிடி எண்டு நிற்கினம்.

இப்ப சுகாதாரப் பொறுப்பு ஆரிட்ட என்பது தெரியாமல் இருக்குது. சிலவேளை கொரோனா கட்டுக்கடங்காமல் போகுமெண்டால், ஆணைக்குழுவொன்றை நியமித்து கொரோனாவைக் கட்டுப்படுத்தாதது யார் பிழை எண்டு விசாரிக்க வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுகிறதுக்கில்லை.

வாத்தியார்: ஏதோ கொரோனாத் தொற்றில இருந்து எங்கட மக்கள் தங்களைக் காப்பாற்றிப் போட வேணும். அதுதான் முக்கியம்.

சாத்திரியார்: வாத்தியார் கொரோனாவில இருந்து எங்கட மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்கிறதெண்டால், உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேணும். ஆனால் நாங்கள் சில இடத்தில சமூக இடைவெளியைப் பேணுகிறம்.சில இடத்தில ஒண்டடி மண்டடியாக நிற்கிறம். அப்படி எண்டால் கொரோனாத் தொற்றில இருந்து எங்களைப் பாதுகாக்கிறது என்னெண்டு.

மூப்பர்: என்ன சாத்திரியார் சொல்லுறியள். கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன்.

சாத்திரியார்: மூப்பர், திருமண மண்டபங்களில சமூக இடைவெளியைப் பேணி கதிரைகள் போட்டபடிருக்குது. போசனம் பரிமாறுகிற இடத்திலும் சமூக இடைவெளி பின்பற்றப்படுகுது.

ஆனால் அறுகரிசி போடுகிற போது முண்டியடிச்சு வரிசை கட்டி நிற்கக்கில ஒரு இடைவெளியும் இல்லை. அப்ப அறுகரிசி போடுகிற போது கொரோனா தொற்றாது எண்டு சொன்னதோ.

கங்காணி: சாத்திரியார் சொல்லுறதிலும் உண்மை இருக்கத்தான் செய்யுது. அர்த்தம் இல்லாத வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறம்.

அண்மையில ஒரு கோயிலில எள் எண்ணெய் எரிக்கிறபோது அடியார்களை மட்டுப்படுத்தித்தான் கோயிலுக்குள்ள விட்டினம். அதொரு நல்ல வேலை. ஆனால் கோயிலுக்குள் செல்வதற்காக அடியார்கள் நிண்ட வரிசையில எந்த இடைவெளியும் பின்பற்றப்படவில்லை எண்டால், இன்னமும் எங்களிட்ட கொரோனா விழிப்புணர்வு ஏற்படவில்லை எண்டு தானே சொல்ல வேணும்.

சாத்திரியார்: ஏதோ கடவுளையும் வணங்க வேணும். பிரார்த்தனை, தேவாரத் திருமுறை, மந்திரங்களை எங்கும் ஒலிக்க விடுகிறது நல்லது.

சிறாப்பர்: அட, சங்கதி அப்படியோ. அதுதான் பார்த்தன். யாழ்ப்பாணம் கொட்டடி மீன் சந்தையில ஒரு இசைப் பெட்டி வைத்திருக்கினம். அந்த இசைப் பெட்டியில இருந்து ஓம் கஜானனம் பூத கணாதி சேவிதம்...எண்ட மந்திரம் ஒலிக்குது.

பண்டிதர்: இதென்ன நாசமறுப்பு. மீன் சந்தையில வேத மந்திரம் ஒலிக்குதோ.


மூப்பர்: செய்கின்ற தொழிலே தெய்வம். கண்ணப்பர் இறைச்சி படைத்ததும் குகன் இராமருக்கு மீன் கொடுத்ததும் அன்பு நிலைதானே. ஆக, மீன் சந்தையில வேத மந்திரம் ஒலிக்கிறதில என்ன தவறு. மூப்பர் இவ்வாறு கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் கலைப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணி ஒலித்தது.

கூடவே ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் என்ற பாடல் ஒலிபெருக்கியில் கேட்க, நவராத்திரி விரதாரம்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஒற்றுமை என்பது சந்திப்புக்களால் ஏற்படுவது அல்ல...



நீ, நான் என்றால் உதடுகள் கூட ஒட்டா. நாம் என்றால் தான் உதடுகளும் ஒட்டிக் கொள்ளும்- ஒற்றுமைப்பட்டுக் கொள்ளும் என்பார் கலைஞர் கருணாநிதி.

இதைச் சொன்ன கலைஞர் கருணாநிதி திராவிட முன்னேற்றக் கழகத்தை குலைய விடாமல் பாதுகாத்தார் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆக, ஒற்றுமை என்பது வெறும் வார்த்தைகளில், சந்திப்புக்களில் ஏற்பட்டுவிட முடியாது.

மாறாக ஒற்றுமை என்பது ஆழ்மனதில் இருந்து வெளிப்படவேண்டியது. இதய சுத்தியோடு ஏற்பட வேண்டியது.

அதிலும் ஒற்றுமைப்படுகின்ற அனைத்துத் தரப்பிடமும் மேற்கூறிய உணர்நிலை இருந்தாக வேண்டும்.

இதில் ஒரு தரப்பேனும் உள்நோக்கத்துடன் செயற்படுமாக இருந்தால், ஒற்றுமை என்பது நிலை குலைந்து போகும்.

எனவே, ஒற்றுமை ஏற்படுவதற்குள் நிறைந்த விட்டுக் கொடுப்புகளும் நேர்மைத் தன்மைகளும் வெளிப்படையான நடவடிக்கைகளும் நம்பகத்தன்மைகளும் தாராளமாக இருப்பது அவசியம்.

இதற்கு மேலாக, இனப்பற்றும் மக்கள் நலன் என்ற தூய சிந்தனையும் மிகுந்திருப்பதும் கட்டாயமானது.

இந்த அடிப்படையில் தமிழ் அரசியல் கட்சிகளுக் கிடையே ஒற்றுமை ஏற்பட்டா லன்றி மற்றும்படி அந்த ஒற் றுமை நின்று நிலைப்பது கடினமானதென்பதைக் கூறித் தானாக வேண்டும்.

இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தக்க சான்றாதாரமாகும்.

ஆம், தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகளுக்குப் பின்பாக; எவ்வாறாக இருந்தது என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ளவேண்டியதில்லை.

கூட்டமைப்பு என்ற கூட்டுக்குள் இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னைத் தலைமைப்படுத்தியது. ஏனைய கட்சிகளை ஓரங்கட்டியது. இதனால் சில அரசியல் கட்சிகள் கூட்டமைப்பில் இருந்து வெளியேற வேண்டியதாயிற்று.

ஏனைய கட்சிகளுக்கு உரிய இடம்கொடுக்காமல் கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி தனியுரிமையை நிலைநாட்ட முற்பட்டதன் விளைவாக நடந்தவை என்ன? என்பது தெரிந்த விடயம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழர்களின் ஒற்றுமையை பிரதிநிதித்துவம் செய்யும் என நம்பப்பட்டாலும் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே முரண்பாடுகளும் பக்கச்சார்புகளும் ஏற்படும் அளவில் நிலைமை இருந்தது.

இதன் உச்சக்கட்டத்தை 2020 பொதுத்தேர்தலின் போதான தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் வெளிப்படுத்தி நின்றன.

பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பாதகமாக அமைந்தன.

தவிர, கூட்டமைப்பின் போக்கை விமர்சித்த- தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளைக் கண்டித்த தமிழ்க் கட்சிகளுக்கு பாராளுமன்ற ஆசனம் கிடைக்கப் பெற்றது.

இங்குதான் தமிழரசுக் கட்சி தன்னிலை குறித்து மீள் மதிப்பீடு செய்யவேண்டிய கட்டத்திற்குத் தள்ளப்பட்டது.

உண்மையில் தமிழரசுக் கட்சி தமிழ்மக்களின் மன நிலையைப் புரிந்துகொண்டு செயற்பட்டிருக்குமாயின் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு பாராளுமன்றத் தேர்தலைச் சந்தித்திருக்கும்.

ஆனால் அவர்கள் அந்த மாதிரியான விடயங்களைச் சிந்திக்காமல், தங்களுக்கான வெற்றி வலுவானதாக இருப்பதாக மதிப்பிட்டுக் கொண்டனர்.

தேர்தல் முடிவுகள் மிகப் பெரிய பாடமாக அமைந்தது. தோல்வி என்பதைவிட வென்றவர்கள்கூட, தங்களின் வெற்றி கண்டு மகிழ்வடைய முடியாத அளவிலேயே நிலைமை அமைந்தது.

ஆம், தமிழரசுக் கட்சிக்குத் தேசியப் பட்டியலில் கிடைத்த ஓர் ஆசனத்தை வழங்குவதில் கட்சி கடும் பிரச்சினைகளைச் சந்திக்க, கட்சியின் பொதுச் செயலாளர் தன்னிச்சையாக முடிவெடுத்தபோது, தமிழரசுக் கட்சியின் அடித்தளம் ஆட்டம் கண்டது.

அதன் விளைவு கட்சியின் பொதுச்செயலாளர் துரைராஜசிங்கம் தனது பதவியை இராஜினாமாச் செய்துகொண்டார்.

அவரின் இராஜினாமா கட்சிக்கு ஆறுதலைக் கொடுத்திருந்தாலும் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியில் பிடித்த இழுபறி இன்னமும் முடிவுக்கு வந்தபாடில்லை.

இந்நிலையில்தான் தியாகி திலீபனின் நினைவேந்தலை மையப்படுத்தி தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டன.

அந்த ஒற்றுமை வெற்றி கண்டதாயினும் அதன் அடுத்தகட்ட நகர்வுகள் ஆரோக்கியமானதாக இல்லை என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபடுவதற்கான சந்தர்ப்ப சூழலை தியாகி திலீபனின் நினைவேந்தல் ஏற்படுத்தியிருந்தாலும் ஒற்றுமைக்கான தளம், அதற்கான ஏற்பாடுகள், கட்டமைப்புகள், உடன்பாடுகள் என்ற விடயத்தில் இன்னமும் இணக்கப்பாடுகள் அடையப்பெற்றதாகத் தெரியவில்லை.

மாறாக, தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமைக்கிடையில் சந்தேகங்களும் இருக்கவே செய்கின்றன.

தவிர, இந்த ஒற்றுமையானது நடைபெறப் போகும் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கானது என்று கருத்துரைப்போரும் உளர்.

எது எவ்வாறாயினும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை ஏற்படுவது அவசியமாயினும் அந்த ஒற்றுமை வலிமை மிக்கதாக இருக்க வேண்டும்.

தவறும் பட்சத்தில் இன்னொரு தடவை ஒற்றுமைப்படுதல் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போகும்.

**விதுரன்**




## வாய்மையே வெல்லும்

ஒரு ஊரில் கஞ்சன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் கஞ்சமாக செலவு செய்வான்.

யாருக்கும் உதவி செய்யாதவன். அவனுக்கு ஒரு நாள் அவன் வீட்டுத் தோட்டத்தில் உள்ள வேப்ப மரத்திற்கு அடியில் புதையல் இருப்பது போல கனவு வந்தது.


தூக்கத்திலிருந்து கஞ்சன் எழுந்து புதையலை எடுக்க நினைத்தான். பகலில் சென்றால் பிறருக்கு தெரிந்துவிடும் என்று நினைத்து இரவில் புதையலை எடுக்கச் சென்றான்.

அப்போது, அங்கிருந்த நல்ல பாம்பு ஒன்று அவனைக் கடித்துவிட்டது. விஷம் ஏறியது.

விஷக்கடி மந்திர வாதியிடம் ஓடினான் கஞ்சன். அவர் தன்னிடம்வரும்நோயாளிக்கு மந்திரம் சொல்லியே நோயைக் குணமாக்குவார்.

பூரான் கடிக்கு-5 ரூபாய், தேள் கடிக்கு- 10 ரூபாய், பாம்புக்கடிக்கு-25 ரூபாய்.

உனக்கு என்ன கடித்தது என்றார் மந்திரவாதி. அந்த நேரத்தில் கஞ்சன் எந்தக் கடியானாலும் ஒரே மந்திரம் தானே சொல்லப் போகிறார் என்று நினைத்து பாம்பு கடித்தது என்று சொல்லி அதிக காசு கொடுக்க வேண்டும் என்று கஞ்சமாக யோசித்து பூரான் கடித்து விட்டது என்று பொய் கூறினான்.



மந்திரவாதி பூரான்கடி மந்திரத்தை சொல்ல, பயன் இல்லை. மீண்டும் வைத்தியரே எனக்கு தேள் கடித்து விட்டது என்றான்.

மந்திரவாதி தேள்கடி மந்திரத்தை சொன்னார். இப்போதும் எந்தப் பயனும் இல்லை. பயந்து போன கஞ்சன் மெதுவாக, பா. பா.. பாம்பு கடித்தது என்றான். அவன் சொல்லி முடிப்பதற்குள் விஷம் தலைக்கு ஏறி இறந்து விட்டான்.

**நீதி :** அளவுக்கு மீறின கஞ்சம் உயிரினை எடுக்கும்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## பின்கதைச் சுருக்கம்

101

ராஜராஜன் காலத்தில் சோழர் சாம்ராஜ்ஜியம், வட இந்திய மன்னர்கள் மிரளும் படி இந்தியாவின் சிறந்த பேரரசாக நிலவியது. ஆனால் ராஜராஜன் மறைவுக்குப் பிறகு சோழ அரசுக்குத் தேய்பிறை தொடங்க ஆரம்பித்தது.

கஷ்டப்பட்டு மீட்டுக் கொண்டு வரப்பட்ட சோழ ஆளுமை, கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து ஒரு கட்டத்தில் முற்றிலும் மறைந்து போனது தமிழ் வரலாற்றின் ஆகப் பெரிய சோகம்.

குறிப்பாக 176 ஆண்டுகளாகச் சோழர்களின் தலைவராக இருந்த தஞ்சாவூர் ராஜராஜன் காலத்துக்குப் பிறகு கேட்பாரற்றுப் போனது.

தந்தை ஒரு தஞ்சாவூரை நிறுவியது போலத் தானும் ஓர் ஊரை உருவாக்கிக் காட்ட கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைமை மையமாக மாற்றினார் ராஜேந்திர சோழன்.


கங்கை கொண்ட சோழபுரம்

ராஜராஜன் உருவாக்கிய ஜெயங்கொண்ட சோழபுரத்துக்கு ஐந்து கல் தூரத்தில் இருந்த காட்டை அழித்து வட நாட்டுப் போரில் வெற்றி பெற்று அங்கிருந்து கொண்டுவரப்பட்ட கங்கை நீரை மண்ணில் தெளித்துப் புனிதமாக்கி புதிய நகரை உருவாக்கினார். கங்கை நீர் பட்ட மண் என்பதால் அந்தப் புதிய பகுதி கங்கை கொண்ட சோழபுரமானது.

இதனால் ஆட்சி செயற்பாடுகள் அனைத்தும் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாறின. ராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம், பழையாறை, நந்திபுரம் போன்ற நகரங்களுக்கு அதிகக் கவனம் கிடைத்தது.

ராஜராஜனின் தஞ்சை தன் செழுமையை இழக்க ஆரம்பித்தது. சோழர்களின் வருங்கால வீழ்ச்சிக்கு அது ஒரு குறியீடாக இருந்ததை அப்போது யாரும் உணரவில்லை.

இரண்டு முறை நடந்த போர்களில் பாண்டியர்களை ஓடஓட விரட்டிய மூன்றாம் குலோத்துங்க சோழன், மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த குலசேகர பாண்டியனோடு மோத வேண்டிய சந்தர்ப்பம் அமைந்தது.

பாண்டிய நாட்டில் உள்ள மட்டியூர், கழிக்கோட்டை ஆகிய இடங்களில் பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் கடுமையான சண்டை நடந்தது.

குலசேகரனின் மறப்படை யும் ஏழகப் படையும் பேரழிவுக்கு உண்டாகி போரிலிருந்து பின் வாங்கின. குலசேகரன், தன் தம்பியுடன் மதுரையை விட்டு ஓடினார்.

மூன்றாம் குலோத்துங்கனுக்கு அப்போதும் வெறி அடங்கவில்லை. கேட்க ஆளில்லாமல் இருந்த மதுரைக்குள் தன் படையோடு நுழைந்தார்.

அங்கு இருந்த மாட மாளிகைகளையும் அரண்மனைகளையும் ஒரேயடியாக அழித்தார்.

(தொடரும்)



போற போக்கைப் பார்க்க பேக்கரி நம்மை விட்டுப் போயிடும் போல இருக்கே?




வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு பெண்ணை திருமணம் செய்து கொடுப்பது சொந்த நாட்டை தாரை வார்த்துக் கொடுப்ப தற்கு ஈடாகுமல்லவா?




குஷ்பு காங்கிரஸில் இருந்து வெளியேறி விட்டாராமே?

**கேதீஸ் — தெல்லிப்பளை**

**அதிகாரங்களை அதிகாரத்தால் அடக்க முடியுமல்லவா?**

முள்ளை முள்ளால் எடுப்பது போலத்தான் இதுவும். கண்டம் விட்டுக் கண்டம் தாண்டும் ஏவுகணையினை எதிர்த்து இன்னொரு ஏவுகணை சீறிப் பாய்ந்து வந்து ஆகாயத்திலேயே வைத்து அதை செயலிழக்கச் செய்து விடுமல்லவா.

அதுபோல்தான் அதிகாரங்களை அதிகாரத்தால் மாத்திரமே அடக்க முடியும். அதுதான் முறையும்.

**சுதாத் — மானிப்பாய்**

**குஷ்பு காங்கிரஸில் இருந்து வெளியேறி விட்டாராமே?**

சமூக வலைத்தளத்தில் பார்த்து ரசித்த ஒரு விடயத்தை உங்களுடன் பகிர்கிறேன்.

கொண்டையில் தாழம்பூ
நெஞ்சிலே வாழைப்பூ
சாக்கடையில் வீழ்ந்ததே குஷ்பு.

கல்லில் மிதிக்க கால் தவறி படுகுழியில் வீழ்ந்த கதையாய் குஷ்பு காங்கிரஸில் இருந்து விலகி பி.ஜே.பியில் இணைந்துள்ளார்.

"இதைப் பார்க்கும் போது இருக்கும் கட்சியில் இருந்து கொண்டே இன்னொரு கட்சிக்குத் தாவும் துணிவும் தைரியமும் இந்த வண்டு முருகனுக்கு மட்டும் தான் உண்டு என்பதை கூறிக் கொள்கிறேன்" என்ற வடிவேலுவின் நகைச்சுவையே ஞாபகம் வருகிறது.

**சோதி — யாழ்ப்பாணம்**

**எங்களுக்கும் காலம் வரும் என்கிறார்களே அது உண்மையா வியாசரே?**

அடிமைச் சந்தைகளில் விற்கப்பட்ட இனத்தின் இளைஞன் ஒருவன்தான் அமெரிக்க ஜனாதிபதியாகி அமெரிக்காவையே ஆட்சி செய்தான்.

காலம் என்பது இதுதான். அதற்காய் காலம் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும் என்று விட்டு முயற்சி இல்லாமல் இருந்து விட்டால் அதே இருண்ட யுகத்தில் தான் வாழ வேண்டிவரும்.

அடிமைச் சங்கிலிகள் உடைக்கப்பட வேண்டுமே தவிர ஒருநாளும் அது தானாய் உடைந்திடாது.

**ஆனந்தி — யாழ்ப்பாணம்**

**துரோகிகளை நீங்கள் எப்படிக் கையாள்கிறீர்கள் வியாசரே?**

செய்வது துரோகம் என்று அவன் ஒரு நாள் தன் மனதுக்குள் வேதனை கொள்வான்.

அப்போது அவன் அருகில் யாரும் இருக்கவும் மாட்டார்கள் அவனிடத்தே எதுவும் இருக்காது.

துரோகிகளுக்கு திருந்த ஒன்றல்ல ஓராயிரம் சந்தர்ப்பங்களை வழங்குவதில் தப்பேதும் இல்லை என்பதே எமது கருத்து.

ஏனென்றால் கடவுள் எப்போதும் தர்மத்தின் பக்கமே நிற்பார் என்பதில் எமக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு.

துரோகியை கடக்கும் போது ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டுப் பார். அதற்கு அர்த்தம் தெரியாமல் புழுங்கிக் கொண்டிருக்கும் அவனது மனம்.

**வியாசர் பதில்கள்**
**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கு**
**SMS**
**அனுப்புங்கள்**

**ஆகாஸ் — எழுதுமட்டுவாழ்**

**வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு பெண்ணை திருமணம் செய்து கொடுப்பது சொந்த நாட்டை தாரை வார்த்துக் கொடுப்பதற்கு ஈடாகுமல்லவா?**

அடேய் ஆகாஸ். உனக்கு நாட்டைத் தாரை வார்த்துக் கொடுப்பதில் எல்லாம் கவலை இல்லை. உன் கவலை என்ன என்று எனக்குப் புரிகிறது.

இதே கவலை எனக்கும் இருந்தது தான். நாங்கள் இங்கு ஒன்றில் கண்வைத்து காத்திருக்க எங்கோ இருந்து வந்தவன் கௌவிக் கொண்டு போய்விடுவான்.

நாங்கள் இலவு காத்த கிளிகள் அப்படித் தானே.

**நிலா — சுழிபுரம்**

**கொரோனா கொத்தணித் தொற்று இலங்கையைச் சூழ்ந்து விட்டதே**

உலகையே உச்சந்தலையில் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது கொரோனா.

ஆனால் எம்மவர்களோ சீனாவின் விளையாட்டுப் பொம்மையுடன் விளையாடுவது போல கொரோனாவுடன் விளையாடுகிறார்கள்.

வெளியே சென்று வந்தவுடன் மாஸ்க்கைக் கழற்றி சட்டைப்பையில் வைத்து விட்டு கைகளை உரஞ்சிக் கழுவி என்ன பயன் வந்து விடப் போகிறது.

கொரோவைத் தோற்கடித்துவிட்டோம் என்று உரத்துக் கத்தியதால் வந்த வினையே இது.

அதற்குக் கோபம் வந்துவிட்டது போல.

**சுதன் — குப்பிழான்**

**மாவீரர் நாளுடன்தான் இனி ஊரடங்கு அமுலாகுமா?**

அதுதான் நாடு முடங்காது பயம் வேண்டாம் என பெரியவர்களே சொல்லிவிட்டனரே. அதற்குள் ஒரு ஊரடங்கைப் பார்த்துவிட ஆசைப்படுகிறீர்.

ஏன் ஊரடங்கு என்றால் உங்களுக்கு விருப்பம் போல்

**சிவன் — வதிரி**

**போற போக்கைப் பார்க்க பேக்கரி நம்மை விட்டுப் போயிடும் போல இருக்கே?**

அடப்பாவிங்களே. அது உங்களுக்கும் தெரிந்து போய்ச்சுதா?

எப்படியாவது பேக்கரியைக் காப்பாற்றி அக்காளை அந்த அவமானத்தில் இருந்து மீட்டெடுக்கணும் என்று சத்தியம் செய்திருக்கிறான் அந்த வீரபாகு.


**தரன் — வடமராட்சி**

**வெற்றிக்கும் தோல்விக்கும் என்ன வித்தியாசம் வியாசரே?**

வென்றவன் மமதை கொண்டாடினால் தோல்வி கொடுத்து பாடம் புகட்டும் வெற்றி.

தோற்றவர் முயற்சி செய்தால் வெற்றிக்கனி கொடுத்து விருட்சமாக்கி வாழ்வைக் கற்பிக்கும் தோல்வி.

# நமக்குள் வருமா உணர்வு?



நானும் அவளும்
காரியாலயத்தில் ஒன்றாய்
நட்போடு பணிபுரிந்தோம்
அவளின்றி நானில்லை
வீடுவரை இழுத்து வந்தேன்
என்னோடு தங்கி
பிரசித்த சமயத் தலங்கள்
கல்விக்கூடங்கள்
தீர்த்தத் தடாகங்கள்,
துறைமுகங்கள்
தவறாமல் சென்று வந்தோம்
எம் நாட்டு கற்பகமர
பண்டங்களில் லயித்தாள்
அயலட்டையாரும்
உறவு கொண்டனர்
சமயச் சடங்குகள்
கலாசார வைபவங்கள்
எதையுமே விட்டு வைப்பதில்லை
பேச்சில் வசியம்
இனியொரு பிள்ளை கிடையாது
சான்றிதழ் பெற்றாள்
சின்னப் பிள்ளைகளுக்குத்
தன்மொழியூட்டினாள்
திடீரென அவள் மாற்றத்தில் ஊர் சென்றாள்
பிரிவு எம்மை வாட்டிற்று அடிக்கடி கதைப்பாள் என்று
அங்கலாய்த்து போனைத் திட்டுவேன்
செல்போனை நானெடுத்தாள் செயலிழக்க வைக்கிறாள்
மனதுக்குள் போராட்டம் இவள் போக்கை
இனங்காணமுடியவில்லை சலிப்படைந்தேன்
பத்திரிகையில் வந்த செய்தி ஒன்று கவனத்தை ஈர்த்தது
திடுக்கிட வைத்தது நம்பமுடியவில்லை...
இவளா...? தலை சுற்றியது
எம் மக்களுக்கெதிரான போராட்டப் பதாகையை
பிடித்தபடி முன்வரும் நிழற்படம்...
உணர்வைக் கிளறிற்று அவள் யார்?
நம் ஊரில்லையே இனமில்லையே
இனவாதம் இப்படி வலியதா? நாம் எங்கே நிற்கிறோம்

மானந்தன், அல்வாய்

## செலவில்லா யுத்தம்

ஐம்பூதங்களை அவலப்படுத்தியதால்
பூத உடல்களாகப் பூமியில் பொலிந்து
கிடக்கிறான் மானுடன் கொரோனாவினால்
உலோகப் பறவைகளின் இடையறாப் பறப்பால்
காற்று மண்டலம் கருகிப்போய்
கார்மழை இறங்கவில்லை ஓசோன் படைக்கு
உலைவைத்ததால் உருக்குலைந்த
மானுடன் உடலும் உயிரும் உரம் போயின
காட்டை அழிக்கவே கண்கொத்திப் பறவையாய்
காத்திருந்து சொருகிய
கொள்ளியால் பூமித்தாயின்
வற்றாமுலைக்காம்பு கனன்று எரிகிறது
இயற்கைக்கு ஒவ்வா எத்தனை வேதியல்
பாசாணம் சூழலுக்கு விளையாட்டாக வீசி
வேடிக்கை பார்த்தனர் கொரோனா உன்
தொண்டைக்குழியில்
அழுத்திப் பரீட்சிக்கின்றது
பதிலடி தரமுடியாப் பரிதாப நிலையில் மானுடன்
ஊற்று நீரை உறிஞ்சி உருசையா பார்த்தாய் நீ
வேற்றுக்கொள்கலனில்
விலைபோக வைத்தாய்
விண்மழையா அது விசப் பாதரசமானது
ஆறாம் அறிவால் நீ
அதிகம் சாதித்தது என்னே
ஊறாய் இயற்கைக்கு உருக்குலைவு தந்தாய்
மாளும் உயிரியாய் மண்ணில் எத்தனை
இயற்கையோடு ஒத்து இயையாப் போக்கால்
பயம் விளைத்த உயிரியல் ஆயுதம் கொரோனா
செலவில்லா யுத்தம் மூலம்
இயற்கையின் அடிமை நீ
இறையின் சமூக நீதி இதுவாம்

வை.க.தவமணிதாசன்

## இனத்தின் இறுமாப்பு

இழக்கப்பட்ட உரிமைகளுக்குள்
தேடிக்கொண்டிருக்கின்றனர்
மனித உரிமைகளை

அடக்கு முறைக்குள் அகப்பட்டு
அதிகார வர்க்கத்தின் கால்களில்
மிதிபட்டு நசிந்துவிட்ட
இனமொன்றின் இதயத்துடிப்பு
இப்போது இருக்கிறது

கடிவாளமிட்டு
காதுவரை இழுத்துவிட
முடியாது முடியாது என
முன்னேற ஜீவனின்றி
முதுகு வளைந்து முடிவைத் தேடாமல்
மடியத் தயாராகிறது மனிதம்

இளவு வீழ்ந்த வீடாய்
நிதம் ஓலம் மிகுந்து போக
ஓநாய்க் கூட்டங்களின் ஊளை
உயிரை உலுக்குகிறது...

இடிந்த இனத்தின் சுவர்
இல்லை எழுந்துவிடு என
எச்சரிக்கை செய்ய
முடிவு கண்டுவிடுவோம் என்று
முன்னேறுகிறது இப்போதும்...

மாலை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 499



## வறுமையின் தாலாட்டு

பசிக்காக பசித்துக் கிடக்கும்
இப்பிள்ளையின்
பட்டினியறிவாரோ- பாமரர்
பசி தாகம் தான் தீர்ப்பாரோ
வகையறா வறுமை
வஞ்சனையேதுமின்றி
வாட்டிவதைப்பதுமேனோ சிறுவனை
பத்துமாதம் சுமந்த
பதின்மவயதவன் தாயின்
பற்றுள்ளமிதைத் தாங்குமோ?
தன்னலமறியாப்பிள்ளை
இதை எண்ணித் தவிக்குமோ?
வறுமை தாலாட்டுப் பாடுகின்றது
இச்சிறுவனின் உறக்கத்திற்காக

வி.டிலக்ஷன்
யா/ துமபளை
சிவப்பிரகாச ம.வி.

## மௌனத்தின் தேடல் -500



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ ✉ எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## மௌனராகம்

அடுப்பும் எரியவில்லை
உடுப்புக்கும் வழியில்லை
விரும்பினாலுமில்லை
படிப்புக்கும் பலன்
தொற்று நோய் தொடலால்
தொண்டு
நிறுவனங்களுடன்
தொடர்பு கொள்வதும்
மௌனத்தின்
தேடலானது
சிறுவர் நலன்பற்றி
வெளியாகும் தகவல்கள்
இச்சரிவிலிருந்து
நிமிர உதவ வேண்டும்

க.நாகராசா
நுணாவில்

## கொடுமை இளமையில் வறுமை

கொடுமையிலும் கொடுமை
இளமையில் வறுமை
என்பதனை உணர்த்தும்
காட்சியிது
சிறுவனோ உணவருந்த
சமையற்கூடத்தில்
காத்திருந்து களைத்து
சோர்ந்து விட்டானோ
பானையில் சோறு இல்லை
பகிர்ந்தளிக்க அம்மாவின்
கரங்கள் இல்லை
கொடிய பசிக்கொடுமை
சிறுவனை வதைக்கிறதோ
வாடிய பயிர் துளிர்த்தெழ
உதவியில்லையோ

அபிகுலமாலிகா
சித்தங்கேணி

## பேசா இறை வணங்கும்

சோறும் பசி வயிற்றால்
சுருண்டு படுத்திருக்கும்
யாரின் கண்ணில் படா
அவலநிலை பாலகனை
பெரும் வேள்வி நிகழ்த்தி
பேசா இறை வணங்கும்
தருமவான்கள் ஏழைக்கு
தயவுதரத் தயங்கிடுவர்

கந்தபாலன்
காவலூர்

## வழியறியாப் பிள்ளை நீ

கந்தலாடை ஒரு புறம்
பசிப்பிணி மறுபுறம்
வழியறியாப் பிள்ளை நீ
யாரறிவார்
உன் வளத்தை
உன் தவறோ என்றால்
பதில் சொல் மூச்சில்லை
தவறுடையோர்
யாரென்றால்
பதிலுக்குப் பஞ்சமில்லை

த.ஐங்கரதீபன்
கிளி/ பூநகரி
ஸ்ரீ விக்னேஸ்வரா
வித்தியாலயம்

## உண்மை

யதார்த்த உலகம் பாரீர்
பார்ப்போர்
இக்காட்சியையும் பாரீர்
ஓர் அநாதைச் சிறுவனின்
நிலை பாரீர்!
பாருலகில் ஆட்சியாளர்
போக்கு அறிவீர்!
வேராய் ஊன்றி மரமாய்
வளர்ந்த இனம் பாரீர்!
நாராய் இன்று அறுந்து
கிடக்கும் நிலை பாரீர்!
யதார்த்த உண்மை
இதுவென உணர்வீர்!
யதார்த்த உலகின் அநீதியை
நீதியாய் வென்றிடுவீர்!

சி.சுகிர்தமலர்

# அன்புத் தம்பி முரளிதரனுக்கு...

> “2009 ஆம் ஆண்டு எனது வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சிகரமான நாள் என நீங்கள் கூறியதற்குள் இருக்கும் அர்த்தத்தைப் புரிவதற்கு முன் பல்லாயிரக்கணக்கான உறவுகள் கொல்லப்பட்டது உங்கள் நினைவுக்கு வராதது ஏன் ?

அன்புள்ள தம்பி முத்தையா முரளிதரனுக்கு வணக்கம். தங்களுக்கு மடல் எழுத வேண்டும் என்ற நீண்டகாலக் கனவு இன்று நினைவாகிறது. அதற்கு முதற்கண் நன்றிகள்.

தாங்கள் எதையும் மறக்காதவர் என்பது தங்களின் செயற்பாடுகள் ஊடே தெரிந்தவை. அந்தவகையில், 2002 ஆம் ஆண்டு என நினைக்கிறேன் ஒரு தனியார் நிறுவனம் ஒழுங்கு செய்த காட்சி கிரிக்கெட் போட்டிக்கு தாங்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தீர்கள்.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தங்களுடன் பல இலங்கை கிரிக்கெட் நட்சத்திரங்களும் வந்திருந்தனர்.

இந்தப் போட்டியைக் காண சனக்கூட்டம் அலைமோதியது. அந்த அலை முரளிதரன் முரளிதரன் என உச்சரிப்பதைப் பார்த்து நான் மெய்சிலிர்த்துப் போனேன். உங்களை ஒரு தடவையேனும் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலுடன் அந்த சனச்சமுத்திரம் அசைந்து கொண்டிருந்தது.

அதில் சிறு அலையாய் நானும் அங்குமிங்கும் அடிபட்டுக் கொண்டிருந்தேன்.

மதிப்புக்குரிய முரளிதரன் அவர்களே, இலங்கை கிரிக்கெட் அணியின் அத்தனை நட்சத்திரங்கள் அங்கு பிரசன்னமாகியிருந்த போதிலும் அங்கு நின்றவர்களின் பிரதான இலக்கு முரளிதரனாகவே இருந்தது.

இது எதனால் என்பதை நீங்கள் புரிந்திருப்பீர்கள் என நான் நினைக்கிறேன். இருந்தாலும் இவ்விடத்தில் அதைக் கூற வேண்டிய கட்டாயம் எனக்கிருக்கிறது. அதனால் கூறுகின்றேன்.

நீங்கள் ஒரு தமிழன் என்ற ஒரே காரணத்தினாலேயே அவ்வளவு எதிர்பார்ப்பு உங்கள் மேல் இருந்தது.

ஒரு தமிழனாய் நீங்கள் செய்த சாதனைகளை நினைத்துப் பூரித்தவர்களே அன்று உங்களை தரிசிக்க அலைமோதினர்.

அது தவறானதல்ல. ஒரு தமிழனுக்கு அணியில் இடம் கிடைப்பதே குதிரைக் கொம்பான விடயம்.

ஆனால் உங்களுக்கு அது கிடைத்தது. கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாய் பயன்படுத்தினீர்கள்.


அதனால் உங்கள் சாதனை உலகை முட்டும் அளவில் உயர்ந்தது.

அப்பேர்ப்பட்ட தமிழனை ஒரு தடவையேனும் சந்திக்க வேண்டும் என அங்கலாய்ப்பது தவறான விடயம் அல்ல.

ஆனாலும் முத்தையா முரளிதரன் என்ற தாங்கள் தமிழன் என்ற அடையாளத்தை காட்டிக் கொள்வதில்லை என்றும் தங்களுக்கு தமிழே தெரியாது என்றும் தமிழர் மத்தியில் ஒரு கசப்பான விடயம் உலவிக் கொண்டே இருந்தது.

ஆனாலும் முரளி தமிழன் எனவும் ஒரு தமிழன் உலக சாதனைகளை நிலை நாட்டியுள்ளான் எனவும் ஈழத்தமிழர் மார்தட்டிக் கொண்டனர்.

கறுப்பு, வெள்ளை ரிவிகளில் அன்ரனாவைத் திருப்பு திருப்பென்று திருப்பி புள்ளி அடிக்க அடிக்க கிரிக்கெட் பார்த்த காலங்களில் ஊரில் உள்ள வயது முதிர்ந்த பாட்டிமார் வந்து “தம்பி டேய் அந்த தமிழ் பெடியனை ஒருக்கா காட்டுங்கோடா” என்று கேட்ட காலங்களை நினைத்து தமிழனாய் பெருமைப்பட்டோம்.



அண்மைக்காலங்களில் தங்களின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகிறது எனவும் அதில் தங்கள் வேடத்தில் மக்கள் செல்வன் விஜய் சேதுபதி நடிக்கிறார் எனவும் செய்திகள் வந்து கொண்டிருந்தன.

அப்போதுதான் பிரச்சினை ஆரம்பமானது. என்னது தமிழினத் துரோகி முரளியின் படத்தில் விஜய் சேதுபதி நடிப்பதா? என எதிர்ப்புக் கிளம்பியது.

மதிப்புக்குரிய முரளிதரன் அவர்களே! தாங்கள் எதையும் மறக்காதவர் என்பதைவிட தமிழ் மக்களும் எதையும் மறக்காதவர்கள் என்பதையும் தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

2019 ஆம் ஆண்டு ஒரு பேட்டியில் “2009 ஆம் ஆண்டே எனது வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான நாள்” என கூறியிருந்தீர்கள்.

அதை நீங்கள் என்ன காரணத்திற்காகக் கூறுகிறீர்களோ தெரியாது. ஆனாலும் அந்த வார்த்தை தமிழினத்தின் மனங்களை காயப்படுத்திவிட்டது.

இறுதிப் போரில் தமிழினம் கொத்துக் கொத்தாய் மடிந்து கொண்டிருந்த நேரம் அது.

குழந்தைகள், முதியோர், பெண்கள், இளைஞர் என பல்லாயிரக் கணக்கானோர் ஒரு சிறிய இடத்தில் முடங்கி செல் பட்டும் குண்டு பட்டும் சிதறிய நாள் உங்களுக்கு மகிழ்வான நாளா? என்ற கேள்வி ஒவ்வொரு தமிழர் நெஞ்சங்களையும் கீறிக் காயப்படுத்திவிட்டது.

முரளிதரன் அவர்களே! தமிழினம், ஒரு தமிழன் இலங்கை கிரிக்கெட் அணியில் இருப்பதையும் அந்தத் தமிழனின் சாதனைகளையும் நினைத்துப் பெருமைப்பட்ட அந்தவேளை தமிழர் கொத்துக் கொத்தாய் இறந்தநாள் உங்களுக்கு மகிழ்வான நாள் என்று கூறிய பின்பு உங்களை தமிழர் எப்படி ஏற்பர் சொல்லுங்கள்.

இறுதி யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கானவர்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசு, உடன் போரை நிறுத்த வேண்டும் என பல சர்வதேச நாடுகள் இலங்கையிடம் கோரிக்கை விடுக்க, அதை எதையும் கருத்தில் எடுக்காது பயங்கரவாதத்தை தோற்கடித்தே தீருவேன் என இலங்கை செயற்பட அதில் மாண்டு போனது பல்லாயிரம் தமிழர்களின் உயிரே.

இந்த ரண வேதனையினை நீங்கள் உணராவிடினும் அந்த நாள் உங்களுக்கு மகிழ்வான நாள் என்பதை கூறாமல் விட்டிருக்கலாமல்லவா? அந்த ஒற்றை வார்த்தை இன்று எப்படி வந்து நிற்கிறது பார்த்தீர்களா?

ஒரு தமிழனின் உலக சாதனையினையும் அவன் அந்த சாதனைகளைத் தொட முன்னர் எவ்வளவு சோதனைகளைக் கடந்தான் என்பதையும் உலகிற்கு வெளிக்கொண்டுவரும் தருணத்தில் தங்களின் அந்தப் பேச்சு அதற்கு முட்டுக்கட்டை போட்டுள்ளதைத் தாங்கள் உணர்வீர்கள் என நம்புகிறேன்.

800 என்று பெயரிடப்பட்ட தங்களின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படத்திற்கு தமிழ்நாட்டிலும் சரி ஈழத்திலும் சரி எதிர்ப்பு ஏன் கிளப்பியுள்ளது என்பதை தாங்கள் உணர்ந்துள்ளீர்கள் என்பதை தங்களின் அறிக்கை வெளிக்காட்டி நிற்கிறது.

நான் இலங்கையில் தமிழனாய் பிறந்தது என் தவறா? என்ற நீண்ட தங்கள் அறிக்கையில்,


“என் பள்ளிக் காலத்தில் என்னுடன் பள்ளியில் ஒன்றாக விளையாடிய மாணவன் மறுநாள் உயிருடன் இருக்கமாட்டான். வீட்டை விட்டு வெளியே சென்றவர்கள் வீடு திரும்பினால் தான் நிஜம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் போர் முடிவுற்றது. ஒரு சராசரி மனிதனாக, பாதுகாப்பாக உணர்வது மட்டுமல்லாமல் போர் நிறைவடைந்ததால் கடந்த 10 வருடங்களாக இரண்டு பக்கமும் உயிரிழப்புகள் ஏதுமில்லாமல் இருப்பதை மனதில் வைத்தே “2009 ஆம் ஆண்டு எனது வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான நாள்” என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தேன். ஒருபோதும் நான் அப்பாவி மக்களின் படுகொலைகளை ஆதரிக்கவும் இல்லை, ஆதரிக்கவும் மாட்டேன்” எனும் தங்களின் அறிக்கையினூடே தங்களுக்கு தற்போது ஏற்பட்ட எதிர்ப்பிற்கான காரணத்தை புரிந்து கொண்டுள்ளீர்கள் என்பது புரிகிறது.

அன்புமிகுந்த முரளி அவர்களே! தமிழன், தமிழ் பெடியன் என்று தங்களை தமிழர் தலையில் வைத்துக் கொண்டாட தங்கள் உதட்டில் இருந்து வந்த அந்த வார்த்தை அனைத்தையும் உடைத்து நிர்மூலமாக்கிவிட்டது என்பதே உண்மை.

அதுவே இன்று தங்கள் வாழ்க்கைப்படத்தை எதிர்த்து தங்களுக்கு வாழ்வை உணர்த்தி இருக்கிறது என்பதை தாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று கூறி இம்மடலை முடிக்கின்றேன். நன்றி வணக்கம்.

அபிமன்யு

# கொரோனா வைரஸ் உடலில் 90 நாட்கள் இருக்குமா?



முதலில் இதை எப்படிக் கண்டு பிடித்தார்கள் எனப் பார்க்க நாம் அறியவேண்டிய மருத்துவ விடயம், த்ரோட் ஸ்வாப் எனப்படும் ஆர்.டி.பி.சி.ஆர்தான். முதலில் ஆர்.டி.பி.சி.ஆர். என்பது என்னவென நாம் அறிந்து கொண்டோமானால் இந்தத் தகவலில் இருக்கும் அறிவியல் உண்மையை எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

**கொரோனா வைரஸ் விடயத்தில் இதன் பங்கு என்னவென்றால்,**

பொதுவாக நமக்கு வரும் தொற்றுகளில் பக்றீரியா, பூஞ்சை, ஒட்டுண்ணிகள் ஆகியவற்றை அறிகுறிகளை வைத்தோ அல்லது சாதாரணமாக உடனடியாகச் செய்யக்கூடிய இரத்த மாதிரி பரிசோதனைகளை வைத்தோ அவற்றின் தாக்கம் இருப்பதை அறிந்து உடனடியாக சிகிச்சையை ஆரம்பித்து விடலாம்.

ஆனால், வைரஸ் அப்படி அல்ல. அதனை ஆன்டிஜென் அல்லது ஆன்டிபாடி டெஸ்ட்டுகளின் மூலம்தான் அறிய முடியும். நமக்கு ஏற்கனவே தெரிந்த வைரஸ் பாதிப்புகளால் வரும் நோய்களான மஞ்சள் காமாலை எனும் ஹெப்படைடிஸ், டெங்கு காய்ச்சல், அனைத்திற்கும் மேல் எயிட்ஸ் எனும் எச்.ஐ.விக்குக் கூட ஆன்டிஜென் அல்லது ஆன்டிபாடி டெஸ்ட்கள் தான் பரவலாகச் செய்யப்படுகின்றன.

ஆனால், இந்த கொரோனா வைரஸ் உலகிற்குப் புதியது என்பதாலும், இதற்கான சரி யான ஆன்டிஜென், ஆன்டிபாடி டெஸ்ட்டுகளின் வருகை தாமதமானதாலும், இந்தப் புதிய வைரஸின் முப்பரிமாண மாற்றங்கள் மிக வித்தியாசமாக இருப்பதாலும், மரபணுக்களை ஆராயும் இந்த **RT-PCR** மூலம், கொரோனா வைரஸின் **RNA**-க்கள் எனப்படும் வைரஸ் மரபணுத் துகள்களை அறிந்திடச் செய்யும் இந்தப் பரிசோதனைதான் எளிதாக நோய்த்தொற்றை அறிந்திட உதவுகிறது.

அதே நேரத்தில் நோய்த்தொற்று அறியும் மற்ற பரிசோதனைகள் பற்றிய நம்பகமான ஆய்வுகள் இல்லாத காரணத்தினாலும், இவ்வகை தாமதங்களால், பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இந்த வைரஸால் கொல்லப்படக்கூடாது என்பதாலும் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று அறியும் பரிசோதனை என மருத்துவ உலகம் ஆர்.டி. பி.சி.ஆர். சோதனையை அறிமுகப்படுத்தியது.

இந்தச் சோதனை, நம் உடல் நீரில் இருக்கும் நம் மரபணுவுக்கு சம்பந்தமில்லாமல் இருக்கும் ஏதேனும் அந்நிய **RNA** பொருட்களைக் கண்டறிந்து, அதனை ஒரு கருவியின் உதவி மூலம் அவற்றின் பிரதிகளைப் பெருக்கும்.

அப்படி இருக்கும் பிரதி, நமக்குத் தேவையான அந்நிய வகை **RNA** பொருளாகத்தான் இருக்கிறதா? ன்பதை அடுத்த கருவி ஆய்வு செய்யும். அப்படிச் செய்தபின், அந்தப் பிரதிகளில் இருப்பது ஒரே வகையாக இருந்தால் அவை பொசிட்டிவ்வாக கணிக்கப்படும். வெவ்வேறு **RNA** துகள்களாக இருந்தாலோ, தேவைப்படும் அளவு அந்தப் பிரதிகளை எடுக்க முடியாதது தெரிந்தாலோ பரிசோதனை முடிவானது நெகட்டிவ்வாக கருதப்படும். இதுதான் கொரோனா பொசிட்டிவ் - கொரோனா நெகட்டிவ் எனச் சொல்லப்படுகிறது.

ஆனால், இதில் நீங்கள் அறியவேண்டிய முக்கிய தகவல் என்ன தெரியுமா? இந்த **RT-PCR** பரிசோதனை என்பது கொரோனா வைரஸையோ, வைரஸ் கிருமி இருப்பதையோ கண்டறியும் பரிசோதனை அல்ல.

மாறாக அந்த வைரஸிற்குள் இருக்கும் மரபணு, அதாவது **RNA** எனப்படும் மரபணுவுடைய துகள்களைத்தான் இவை பிரதிகளாக்கி கண்டறிந்து நமக்குக் காட்டும்.

எனவே, தற்சமயம் மக்கள் பயப்படுவது போல, இந்தக் கொரோனா நோய்க்கிருமி நம் உடலில் 90 நாட்கள் இருப்பது என்பது உண்மையல்ல. ஏனென்றால் நாம் பரிசோதனையில் பார்ப்பது வைரஸ் அல்ல. அதன் ஆர்.என்.ஏ. துகள் மட்டும்தான்.

அடுத்ததாக, தொற்று ஆரம்பித்த முதல் 11 நாட்களுக்குள் நம் உடலில் இதற்கென பிரத்தியேகமாக எலும்பு மஜ்ஜையிலிருந்து உருவாக்கப்படும் எதிர்ப்பாற்றல் செல்கள், இந்த **RNA**க்களை கூட விட்டுவிடாமல் அவற்றை உடைத்து நொறுக்கிவிடும்.

அப்படி உடைந்திட்ட **RNA**க்களால், அதன் பிறகு பொதுவாக நோயைப் பரப்பவும் முடியாது. உடலில் நோயைப் பெருக்கவும் இயலாது. அவை **Inactive Fragments** எனப்படும் வீரியமில்லா துகள்களாகவே உடல் நீரிலும் நம் செல்களிலும் ஆங்காங்கே காணப்படலாம்.

இந்த நேரத்தில் நாம் செய்யும் வழக்கமான **RT-PCR** பரிசோதனைக்கு, நம் உடலுக்கு சம்பந்தமற்ற அந்நிய பொருள் **(Foreign RNA particles)** தானே...

ஆதலால், இந்தப் பரிசோதனை வழக்கம் போல் உடைந்த வீரியமில்லா **RNA** துகள்களைக் கண்டறிந்து, அதன் பிரதிகளை உருவாக்கி மீண்டும் அந்த நபருக்கு பொசிட்டிவ் என தெரிவிக்கும். இதைத்தான் ஒருவருக்கு மீண்டும் மீண்டும் நோய்த்தொற்று வந்ததாகவும், நோய்த்தொற்று வந்து குணமான சிலருக்கு மீண்டும் **RT-PCR** பரிசோதனை பொசிட்டிவ் எனக் காட்டுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதைக் கண்டு நிச்சயமாக அச்சப்படத் தேவையில்லை. இதனால் வரும் பொசிட்டிவ் ரிப்போர்ட்களால் தொற்று உள்ளவருக்கோ, அவருடன் இருப்போருக்கோ எந்தவிதச் சிக்கலும் கிடையாது.

ஆனால் உங்களை நோய்த்தொற்று பாதித்து, அறிகுறிகள் வந்து, மருத்துவ சிகிச்சை முடிந்து, டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட பின்னரும் அறிகுறிகள் குறையாமல் இருந்தாலோ, அதிகமாகத் தென்பட்டாலோ, அது வீரியமடைந்த நோய் எனச் சொல்லலாம். தேவைப்பட்டால் இன்ன பிற உடல்நிலை கண்டறிய உதவும் பரிசோதனை, இரத்த மாதிரிகள், சிடி ஸ்கேன் அல்லது ஒரு ஆன்டிபாடி பரிசோதனை செய்து, நோய் எதிர்ப்பு செல்கள் இருக்குமானால், நோய் நம்மை விட்டு விலகியதாக எண்ணிக் கொள்ளலாம்.

மற்றப்படி அறிகுறிகள் இல்லாது மீண்டும் பொசிட்டிவ் என **RT-PCR** பரிசோதனை மூலம் அறியப் பெற்றால், புதிய அறிகுறிகள் அல்லது பழைய அறிகுறிகள் அதிகரிக்காத நிலையில் நீங்கள் இருந்தால் இந்த விடயத்தை மிகச் சாதாரணமாகக் கடந்திடலாம்.

# கடல் வற்றிப் போனால்...



இந்த உலகில் உள்ள கடல்கள் எல்லாம் காணாமல் போனால் அல்லது இல்லாமல் போனால் என்னாகும் என்று யோசித்து இருக்கிறீர்களா? ஒரு நிமிடம் இந்த உலகில் உள்ள கடல்கள் அனைத்தும் திடீரென காணாமல் போய்விட்டது என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

உலகில் சுமார் 37 மில்லியன் மக்கள் கடலை சார்ந்து வாழ்வதாக கணக்கிடப்பட்டுள்ளது.

கடலில் சென்று கொண்டிருக்கும் கப்பல்கள் எல்லாம், கடலின் அடிமட்டத்திற்கு சென்று உடைந்துவிடும். கடலில் வாழும் உயிரினங்கள் உடனடியாக இறந்துவிடும்.

கடல் படுகையில் இருக்கும் கரிமப்படிமங்கள் எல்லாம், அழுக ஆரம்பித்து விடும்.

கடற்கரையாக இருந்த இடங்களில் ஒரு மாதிரியான துர்நாற்றம் வீசக்கூடும்.

கடல் இல்லாமல் போனதால், உருவான 1.3 பில்லியன் க்யூபிக் கிலோ மீற்றர் காலியிடத்தை காற்று வேகமாக நிரப்பும். இதன் விளைவாக வளிமண்டலத்தின் அடர்த்தி பெருமளவு குறையும்.

இதனால் உயரமான இடங்களில் வாழும் மக்கள் அடர்த்தியற்ற காற்றை சுவாசிக்க வேண்டியிருக்கும். அதாவது எவரஸ்ட் மலைப்பகுதியின் ஆபத்து மிகுந்த பகுதி எப்படி இருக்குமோ, அது போன்ற காற்றை சுவாசிக்க நேரிடும்.

மேலும், இந்த இடங்களில் வளி மண்டலத்தில் உள்ள காற்று மூலக்கூறுகள் குறையும் என்பதால் வெப்ப நிலையும் குறைய ஆரம்பிக்கும். இந்த உலகில் 97 சதவீத நீர் என்பது கடல்தான். அந்த 97 சதவீத நீர் இல்லையென்றால், நீர் சுழற்சி முறை உடையும்.

அதாவது, மழையும், பனிப்பொழிவும் மிக, மிக குறைவாகவே இருக்கும். இதனால் ஏரிகள், குளங்களில் தண்ணீர் இல்லாத சூழல் ஏற்படும்.

மேகக்கூட்டங்களும் காணாமல்போகும் என்பதால், சூரியனின் மொத்த வீரியமும் பூமியின் மேல் விழும். பனிப்பாறைகளும், பனிக்குமிழ்களும் வேகமாக உருகிவிடும்.

உலகின் மூன்றில் இரண்டு பங்கு பிராண வாயுவை உருவாக்குவது கடல்பாசிகள். அதோடு அவை வளி மண்டலத்தில் இருக்கும் காபனை உறியும் தன்மை கொண்டவை. கடல்பாசிகள் இல்லாமல் போனால், பிராண வாயு குறைந்து, கரியமில வாயு அதிகரிக்கும்.

செடி, கொடிகள் காய்ந்து போக, காட்டுத்தீகள் கட்டுப்படுத்த முடியாத அளவில் ஏற்படும். இதனால் உணவு வளங்கள் குறைய ஆரம்பிக்கும். அதோடு, இந்த காட்டுத்தீ பிராணவாயுவை மேலும் குறைத்து, ஆபத்து மிகுந்த பசுமைக்குடில் வாயுக்களையும் அதிகம் உருவாக்கும்.

உணவு, நல்ல குடிநீர் இல்லாமல், மனித இனம் இந்த பூமியில் வாழ்வது சாத்தியமற்றதாக்கி விடும்.

நம் உலகின் கடல்கள் அனைத்தும் அவ்வளவு விரைவில் காணாமல் போகாது என்பது நமக்கு தெரியும். ஆனால், மனிதர்கள் உள்ளிட்ட எந்தவொரு சிறு உயிரினங்களுக்கும் இந்த பூமியில் வாழ கடல் முக்கியமானது என்பதால் அதை நாம் அறிந்து கொள்வது அவசியமாகிறது.

# கடல் புறா

## வலைக்குள் வந்த சிங்கம்




பீமன் செய்த போலிச் சிந்தனையும் அவன் கூறிய சொற்களின் பொருளும் புரிந்துதானிருந்தது இளைய பல்லவனுக்கு. இருப்பினும் புரியாதவன் போல் "நீங்கள் சொல்வது விளங்கவில்லை" என்று பதில் கூறினான்.

"வாணிபத்தில் பலவிதமுண்டு" என்று சுட்டிக்காட்டி மெள்ள நகைத்தான் பீமன்.

"மன்னருக்கு வாணிபத்திலும் நல்ல பரீட்சயமுண்டு போலிருக்கிறது" என்று இளைய பல்லவன் இகழ்ச்சி நகை புரிந்தான். நிராயுத பாணியாக கலிங்கத்து வீரர்கள் மத்தியில் சிறைப்பட்டு நின்ற சமயத்திலும் இளைய பல்லவன் இகழ்ச்சி நகை புரிந்ததையும் சர்வசகஜமாகப் பேசத் துவங்கி விட்டதையும் கண்ட பீமன் அவன் நெஞ்சுரத்தைப் பெரிதும் வியந்தான்.

அந்த வியப்பு குரலிலும் ஓரளவு தொனிக்கப் பேச முற்பட்டு "வாணி பத்திலும் பரீட்சயம் தேவையாயிருக்கிறது. இளைய பல்லவரே! காரணம் தெரியுமா?" என்று வினவினான்.

"தெரியாது" என்றான் இளைய பல்லவன்.

"இதில் கஷ்டமேதுமில்லை. வாணிபத்தில் பலவகையுண்டென்று முன்னமே நான் குறிப்பிடவில்லையோ?"

"ஆம், குறிப்பிட்டீர்கள்"

"பொருட்களில் செய்யும் வாணிபம் ஒருவகை"

"ஓகோ?"

"அரசியலில் வாணிபம் மற்றொரு வகை"

"அப்படியா!"

"அரசியலை வாணிபத்திலும் வாணிபத்தில் அரசியலையும் கலப்பதால் பல தொல்லைகள் உண்டாகின்றன" என்று கூறிய பீமன் புன்முறுவல் செய்தான்.

இளைய பல்லவன் இதற்கு ஏதும் பதில் சொல்லாது போகவே சற்றுப் பெரிதாகவே நகைத்த கலிங்கத்து மன்னன், "ஏன் பதிலில்லை இளைய பல்லவரே! வணிகர்கள் அரசியலில் கலக்கும் போது மன்னரும் வாணி பத்தில் கலக்கத்தானே வேண்டியிருக்கிறது? இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் சம்பிரதாயத்தை மட்டும் கவனிக்க முடியுமா? முடியாது முடியாது.

வாணிபத்திலும் சோழ நாட்டிலிருந்து வரும் வணிகர்களிடமும் நாம் சிறிது கவனத்தைச் செலுத்தத்தான் வேண்டியிருக்கிறது. செலுத்துவதில் பலனிருக்கிறது" என்றும் கூறினான்.

"என்ன பலன்?" இளைய பல்லவன் சற்று நிதானத்தை இழந்து இரைந்தே கேட்டான் இந்தக் கேள்வியை.

நிதானத்தைச் சிறிதும இழக்காமலே பதில் சொன்னான் பீமன். "அநபாயச் சோழரின் இணை பிரியாத தோழரான இளைய பல்லவரின் சந்திப்பு எனக்குக் கிடைத்திருப்பதே பெரும் பலனல்லவா?"

இதற்குத் தாங்கள் இத்தகைய முயற்சி எடுத்திருக்க வேண்டியதில்லை" என்று சற்றுக் கோபத்துடன் கூறினான் இளைய பல்லவன்.

"அப்படியா!" என்று கேட்ட பீமனின் முகத்தில் ஆச்சரிய ரேகை படர்ந்தது.

"ஆம் மன்னவா! தங்களைப் காணவே நான் கலிங்கம் வந்தேன். இத்தனை வீரர்களை அனுப்பிப் பவனி நடத்தாவிட்டாலும் தங்களை நாடிக் கண்டிப்பாய் வந்திருப்பேன்" என்றான் இளைய பல்லவன்.

"ஆம், ஆம் மறந்துவிட்டேன்" என்றான் பீமன். "எதை மறந்துவிட்டீர்கள்?"

பீமன் சொன்ன பதில் ஒரு விநாடி பேரதிர்ச்சியைக் கொடுத்தாலும் அடுத்த விநாடி அந்த அதிர்ச்சி மறைந்தது இளைய பல்லவனிடமிருந்து "ஆம்! ஆம் மறந்து விட்டேன். வீரராஜேந்திர சோழதேவரிடமிருந்து நீங்கள் சமாதான ஓலை கொண்டு வந்திருப்பதை மறந்து விட்டேன்" என்று பீமனின் பதிலைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்த இளைய பல்லவன், "இந்த விபரம்தான் சுங்க அதிகாரிக்கே தெரிந்திருந்ததே. மன்னனுக்குத் தெரிவதில் வியப்பென்ன? என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டான். அத்துடன் சற்றுக் கோபத்துடன் கேட்கவும் செய்தான்.

"நான் சமாதான ஓலை கொண்டு வந்ததை அறிந்துமா என்னைச் சிறைப்படுத்தினீர்கள்?" என்று.

பீமன் முகத்தில் வருத்தக்குறி தோன்றியது. "சிறைப்படுத்திக் கொண்டு வருவது உசிதமில்லைத் தான். ஆனால் சமாதானத் தூதர்கள் இறங்கும் துறைமுகச் சுங்கச் சாவடியில் அந்நாட்டு மன்னர்களைத் தூசிப்பதும் வீரர் துரத்த ஓடுவதும் மாளிகையில் பதுங்குவதும் உதிசமா? என்பதை எண்ணிப் பாருங்கள்!" என்று வருத்தத்துடன் கூறுபவன் போல் பாசாங்கு செய்த பீமன் உண்மையில் தன்னைப் பார்த்து நகைக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டான் இளைய பல்லவன்.

தவிர தான் பாலூர்ப் பெருந்துறையில் காலெடுத்து வைத்த விநாடியிலிருந்து தன் நடவடிக்கைகள் பலவற்றையும் கலிங்க மன்னன் தெரிந்து கொண்டிருப்பதை உணர்ந்த கருணாகர பல்லவன் தன் இருப்பிடத்தை அவன் எப்படிக் கண்டு பிடித்தானென்பதை மட்டும் புரிந்து கொள்ள முடியாமல் சிந்தை குழம்பினான்.

"சுங்கச் சாவடி நிகழ்ச்சியைக் காவல் வீரர்களிடமிருந்து அறிந்திருக்கலாம். ஊருக்குள் ஏற்பட்ட சண்டை நிகழ்ச்சியையும் துரத்திய வீரர்கள் சொல்லியிருப்பார்கள். ஆனால் குணவர்மன் தங்கியிருந்த மாளிகையில் ஒளிந்ததை இவன் எப்படி அறிந்தான்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்ட இளைய பல்லவன் பதிலேதும் கிடைக்காமல் பீமனை நோக்கினான்.

கருணாகர பல்லவனது எண்ணத்தில் சுழன்ற ஒவ்வொன்றையும் புரிந்துகொண்ட பீமன் சொன்னான், "இளைய பல்லவரே! ஆபத்திலிருப்பவன் புத்தி எப்பொழுதும் சுறுசுறுப்புடன் வேலை செய்கிறது. கலிங்க நாடு ஆபத்திலிருக்கிறது. ஆகவே அதன் மன்னன் விழிப்புடனிருக்கிறான்.

கலிங்கத்தின் துறைமுகங்களைக் கைப்பற்றிக் கொண்டு சோழ நாடு அளிக்க விரும்பும் போலிச் சமாதானத்தைத் தென் கலிங்கமும் ஏற்காது. வடகலிங்கமும் ஏற்காது. ஆகவே சோழர் போர் தொடுப்பார்கள். அத்தகைய நிலையில் சோழ நாட்டிலிருந்து படைகள் வந்திறங்க இருக்கும் கலிங்கத்தின் முதல் துறைமுகமான பாலூர்ப் பெருந்துறையில் நாங்கள் சர்வ எச்சரிக்கையுடனிருப்பது இயற்கைதானே? அதன் விளைவாகத்தான் இங்கிருக்கும் தமிழ் ஒற்றர்களையும் இங்கு வரும் சோழ நாட்டுப் படைத் தலைவர்களையும் கண்காணிப்புச் செய்கிறோம்.

நீங்கள் பாலூர்ப் பெருந்துறையில் கால் வைத்த விநாடி முதல் கலிங்கத்தின் ஒற்றர்கள் உங்களைக் கவனித்து வருகிறார்கள். நீங்கள் வெளிநாட்டுப் பிரமுகர் வீதியில் மறைந்ததும் அந்த வீதி முழுதும் ஒற்றர் பார்வைக்குள் அகப்பட்டது. தவிர..."

இப்படிச் சம்பாஷணையை அரை குறையாக விட்ட பீமன் மீண்டும் இளநகை கொண்டான். அந்த இளநகையில் பெரும் பொருள் சிக்கியிருப்பதை உணர்ந்த இளைய பல்லவன், "ஏன் பேச்சைப் பாதியில் நிறுத்திவிட்டீர்கள்! எதையோ சொல்ல வந்தீர்களே?" என்று கேட்டான்.

சொல்ல வந்ததைச் சொன்னான் பீமன். அதைக் கேட்டதும் மீண்டும் திகைப்பும் அதிர்ச்சியும் சூழ்ந்து கொண்டன இளைய பல்லவனின் சித்தத்தை.

"ஆம் ஆம் பேச்சைப் பாதியில் தான் நிறுத்திவிட்டேன். நான் சொல்ல வந்தது" என்ற பீமனை இடைமறித்த இளைய பல்லவன், "நீங்கள் சொல்ல வந்தது?" என்று வினவினான்.

(தொடரும்...)

# அமெரிக்கா- சீனா தொடரும் நூசல்கள்!

## தர்மசங்கடத்தில் இலங்கை

**“ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதைப் பார்ப்பது எப்போதுமே ஆச்சரியமல்ல என்றாலும், மற்றவர்களின் இராஜதந்திர உறவுகளை கையாளுவதற்கான அதன் இழிவான முயற்சியைக் கண்டு பொதுமக்கள் இன்னும் ஆச்சரியப்படுகிறார்கள்”**





இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஒரு உள்ளூர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் போது இராஜதந்திர நெறிமுறைகளை கடுமையாக மீறியதாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் குற்றம் சுமத்தியுள்ளது.

பிறிதொரு நாட்டைச் சேர்ந்த தூதரொருவர் சீனா - இலங்கை உறவுகளை வெளிப்படையாக பேட்டி கண்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாக சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது.

“ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதைப் பார்ப்பது எப்போதுமே ஆச்சரியமல்ல என்றாலும், மற்றவர்களின் இராஜதந்திர உறவுகளை கையாளுவதற்கான அதன் இழிவான முயற்சியைக் கண்டு பொதுமக்கள் இன்னும் ஆச்சரியப்படுகிறார்கள்" என்று அத்தூதரக அறிக்கை தெரிவித்துள்ளது.

சுதந்திர நாடுகளாக சீனா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் நமது சொந்தத் தேவைகளுக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப வெளிநாடுகளுடன் உறவுகளை வளர்ப்பதற்கான முழு உரிமையையும் கொண்டுள்ளன.

இலங்கையும் சீனாவும் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஈடுபடுகின்றன என்பது பலமுறை காலத்தின் சோதனையாக இருந்து வருகிறது. மேலும் அரசாங்கத்துக்கும் இலங்கை மக்களுக்கும் சீனாவுடனான உறவுகள் குறித்து தங்களது சொந்த சுயாதீனமான மற்றும் நியாயமான தீர்ப்பு உள்ளது.

இலங்கையில் உள்ள சீனத்தூதரகம் மேலும் கூறுகையில், சீனா - இலங்கை உறவுகள் குறித்து விரிவுரை செய்ய அமெரிக்காவிற்கு அதிகாரமோ கடமையோ இல்லை.

"இத்தகைய வெளிப்படையான மேலாதிக்கம் மற்றும் அதிகார அரசியல் ஆகியவை சீனர்களால் பொறுத்துக் கொள்ளப்படாது மற்றும் இது இலங்கையர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படாது. மற்றவர்களைப் பிரசங்கிப பதற்கும், இரட்டைத் தரங்களைப் பயன் படுத்துவதற்கும் அடிமையாகிவிட்ட அமெரிக்காவை நாங்கள் கடுமையாக இதனைக் கைவிடுமாறு அறிவுறுத்துகிறோம்"

மேலும் அவ்வறிக்கையில், “உலகின் மறுபக்கத்திலிருந்து வரும் எங்கள் திமிர்பிடித்த நண்பருக்கு எங்களது நான்கு எளிய ஆனால் பயனுள்ள அறிவுரைகள்.

❖ கொவிட்-19 வழக்குகளில் உலகில் முதலிடம்வகிக்கும்போது, தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதில் பிற நாடுகளை அவதூறாகப்பேச வேண்டாம்

❖ உலகவர்த்தக அமைப்பின் தீர்ப்புகளை மீறும்போது சுதந்திர வர்த்தகத்தின் பாதுகாவலராக நடிக்கவேண்டாம்.

❖ சர்ச்சைக்குரிய எம்.சி.சி.ஒப்பந்தத்தை மறைக்கும் போது வெளிப்படைத் தன்மையின் பதாகையை உயர்த்தவேண்டாம்

❖ வெளிநாடுகளில் குண்டுவீச்சு செய்யும்போது, வெளிநாட்டு இராணுவ தளங்களை ஆக்கிரமித்து, ஒருதலைப்பட்சமாக பொருளாதாரத் தடைகளை விதிக்கும்போது, இறையாண்மைக்கு எதிரான மற்றவர்களின் இயல்பான ஒத்துழைப்பைத் தூண்டவேண்டாம்.

இலங்கையில் உள்ள சீனத் தூதரகம், அமெரிக்காவின் இந்த அபத்தமான மற்றும் பாசாங்குத்தனமான நடத்தைகள் அனைத்தும் ஏற்கனவே ஒருநூலால் ஆடிக் கொண்டிருக்கும் அதன் சர்வதேச நற்பெயரை மட்டுமே சேதப்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர், திறந்த, வெளிப்படையான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் வகையில் சீனாவுடனான இலங்கையின் பங்காளித்துவத்தை அமெரிக்கா ஊக்குவிக்கும் என்று கூறியதை அடுத்து இந்த அறிக்கை வந்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதர் அலைனா ரெப்லிட்ஸ் செய்தித்தாள் ஒன்றிடம், வெளிநாட்டு நாடுகளுடனான உறவுகளில் இலங்கை பாதிக்கப்படக்கூடாது என்று கூறியிருந்தார்.

நாடுகளுக்கிடையேயான கூட்டாண்மை திறந்த, வெளிப்படையான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் வகையில் இருக்கவேண்டும் என்றும் இலங்கை அதன் உறவுகளில் பாதிக்கப்படக்கூடாது என்றும் அவர் கூறியிருந்தார்.

சீனா வழங்கும் கடன்கள் குறித்து தூதர் விமர்சனக் கருத்துக்களைத் தெரிவித்ததோடு, திட்டங்கள் குறித்த நியாயமான போட்டிச் செலவீனங்களைக் குறைத்து சிறந்த தரத்தை உறுதி செய்யும் என்றும் கூறினார்.

பெல்ட் அண்ட்ரோட் முன் முயற்சியின் கீழ் இலங்கைக்கு சீனா வழங்கிய ஒரு கடனைத் தவிர மற்ற அனைத்தின் விதிமுறைகளும் சீன நிறுவனங்களுக்கு மட்டும் ஒப்பந்தங்கள் மற்றும் டெண்டர்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டிருப்பதை அவர் கவனித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

யு.எஸ். ஐ.ஐ.டி என்றும் அழைக்கப்படும் சர்வதேச அபிவிருத்திக்கான யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏஜென்சி, இலங்கைக்கு இடையில் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களை தூதர் ரெப்லிட்ஸ் மேற்கோளிட்டுள்ளார்.

இலங்கையில் அதில் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது என்றும் அது வெளிப்படைத்தன்மையை வரவேற்கிறது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், அமெரிக்க தூதர் இலங்கைக்கு விதிமுறைகளை ஆணையிட முயற்சிப்பதை மறைக்கும் போதெல்லாம், அமெரிக்கா ஒரு உண்மையான நண்பர் என்று அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில், ஐ.நாவின் முன்னாள் இலங்கை நிரந்தர பிரதிநிதி தமரா குணநாயகம் ஒரு சுதந்திர அரசின் வெளியுறவுக் கொள்கையை அரசே தீர்மானிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

“அரசாங்கம் அதன் சொந்த மக்களுக்கு மட்டுமே பதிலளிக்க வேண்டும், சில அந்நிய சக்திகளுக்கு அல்ல" என்று கூறியுள்ளார்.

வெளியுறவு செயலாளர் ஜெயநாத் கொலம்பகே, இலங்கை மற்ற நாடுகளின் விருப்பத்திற்கேற்ப இருந்தால் முன்னேற முடியாது என்று ஒப்புக் கொண்டுள்ளார்.


“நாங்கள் எங்கள் மூலோபாயத்தை முடிவுசெய்யவேண்டும், பின்னர் மற்றவர்கள் எங்கள் விதிக்கேற்ப செயற்படவேண்டும்" என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தனது தேசிய மூலோபாய சொத்துக்களை விற்கும் ஆடம்பரத்தை கொண்டிருக்கவில்லை என்று கோலாம்பேஜ் சுட்டிக்காட்டியுள்ளார். வெளியுறவு செயலாளரின் சிந்தனை வரிசை துல்லியமானது மட்டுமல்ல, மிகவும் பாராட்டத்தக்கது.

பல ஆண்டுகளாக, ஒரு நாட்டை மையமாகக் கொண்ட வெளியுறவுக் கொள்கையின் முக்கியத்துவத்தையும், நாட்டில் நம்முடைய சொந்த மூலோபாய மதிப்புமிக்க இடங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் நாங்கள் எடுத்துரைத்துள்ளோம்.

"நாடு முதல்" வெளியுறவுக் கொள்கையின் தேவை குறித்து அதிக கவனம் செலுத்தப்படும்போது, நாடுமுழுவதும் 517,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்கு “இலங்கைக்கடல்” என்று பெயரிட பரிந்துரைக்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவுடன் விலகி சீனாவுடன் ஒட்டும் இலங்கை



சீன பிரதிநிதிகள் அடங்கிய உயர் மட்டகுழுவொன்று கடந்த 8 ஆம் திகதி இலங்கை வந்தடைந்தது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சீன அரசாங்கத்துடன் இலங்கை மிகவும் நெருங்கிய தொடர்புகளை பேணியிருந்த அதேவேளை, இலங்கையின் பெரும்பாலான அபிவிருத்தி பணிகள் சீன அரசாங்கத்தின் உதவியுடனேயே முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக இலங்கையில் கோவிட்-19 தொற்றின் 3 ஆவது கொத்தணி மிக வேகமாக பரவி வரும் பின்னணியில், பி.சி.ஆர் பரிசோதனைகளை தவிர, வேறு எந்தவொரு தனிமைப்படுத்தல் சட்டமும் அமல்படுத்தப்படாத நிலையிலேயே இந்த உயர்மட்ட தூதுக்குழு நாட்டிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வண்ணியாராட்ச்சி நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

உயிர் கொல்லி வைரஸ் நாட்டை அதிர்வுக்கு உள்ளாக்கியுள்ள இந்த தருணத்தில், சீன உயர்மட்ட குழுவிற்கு மாத்திரம் எவ்வாறு இந்த அனுமதி வழங்கப்பட்டது ஏன் என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின.

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் தலைமையிலான குழுவொன்றே இவ்வாறு நாட்டிற்கு வந்திருந்தது.

இந்த குழுவினர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் மறுநாளான கடந்த 9ஆம் திகதியே பேச்சு வார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

இவ்வாறு நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் போது, சீனாவிற்கும், இலங்கைக்கும் இடையில் உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கைக்கு சீனாவினால் 600 மில்லியன் யுவான் நிதியுதவி வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

> “பொருளாதார விடயங்களில் இலங்கை இந்தியாவிடம் இருந்து அன்னியப்பட்டு சீனாவுடன் நெருங்கும் நிலை ஏற்படமானால் அது இராஜதந்திர ரீதியில் ஆரோக்கிய மான அணுகுமுறையாக அமையாது.”

இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையில் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஒத்துழைப்பு உடன்படிக்கையே இவ்வாறு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை மதிப்பில் 16.5 பில்லியன் ரூபாய் நிதித் தொகை, உதவியாகவே வழங்கப்படுவதாக இலங்கைக்கான சீன தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கொரோனா தொற்றை எதிர்கொண்டுள்ள இந்த காலப் பகுதியில் கிராமிய பகுதிகளிலுள்ள மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்கும், கல்வி மற்றும் நீர்பாசன திட்டங்களை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தவே இந்த நிதித் தொகை வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா தாக்கம் அதிகரித்துள்ள பின்னணியில், வெளிநாடொன்றினால் வழங்கப்பட்ட அதிக் கூடிய தொகையாக இது அமைந்துள்ளது.

இதேவேளை, சீன உயர்மட்ட குழுவின் விஜயத்தை தொடர்ந்து, அமெரிக்க உயர்மட்ட குழுவொன்று இந்த மாத இறுதிப் பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கத்தின் அமைச்சர்கள் அண்மையில் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

## சீனாவின் தலையீடும் இலங்கை இந்திய உறவும்

இவ்வாறான பின்னணியில், இலங்கை பொருளாதாரத்தின் மீதான சீனாவின் தலையீடானது இலங்கை மற்றும் இந்திய உறவுகளில் ஒரு விரிசல் நிலைமையை ஏற்படுத்தக்கூடும் என பொருளியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீட பேராசிரியரும், அரசியல் ஆய்வாளருமான சங்கரன் விஜயச்சந்திரன் தெரிவிக்கையில்,

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையில் அரசியல் முரண்பாட்டை, சீனாவின் இந்த உதவித் திட்டம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் அவர் அச்சம் வெளியிடுகின்றார்.

இலங்கை அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் மூலம், 13 ஆவது திருத்தத்தில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடாது என இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை அரசாங்கத்திற்கு தெரிவித்திருந்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

அத்துடன், 13ஆவது திருத்தம் மேலும் வலுப் பெறுவதற்கான நட வடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இந்திய பிரதமர் வலியுறுத்தியுள்ளதாக அவர் கூறுகின்றார்.

இவ்வாறான நிலையில், இந்தியாவினால் கொடுக்கப்பட்ட அழுத்தத்திற்கு எதிராகவே, சீன உயர்மட்ட குழுவின் விஜயமும், சீன உதவித்திட்டமும் அமைந் துள்ளதா என்ற கேள்வி எழுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

அதுமாத்திரமன்றி, பொருளாதார விடயங்களின் இந்தியாவை கைவிட்டு, சீனாவுடன் இலங்கை கைக்கோர்த்து முன்னோக்கி பயணிக்குமா என்ற கேள்வியும் தற்போது எழுவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு இலங்கை சீனாவை நாடுமாக இருந்தால், பிராந்திய அரசியலில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையில் பாரிய அரசியல் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக பேராசிரியர் கூறுகின்றார்.

இதன்காரணமாக இலங்கைக்கு இந்தியாவினால் கிடைக்கின்ற பொருளாதார மற்றும் ஏனைய உதவிகளிலும் பாதிப்புக்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

பொருளாதாரம், வீழ்ச்சி கண்டுவரும் இந்த சூழ்நிலையில், சீனாவின் உதவித்திட்டம் இலங்கைக்கு நன்மைகளை ஏற்படுத்தும் அதேவேளை, பிராந்திய ரீதியில் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் பாரிய நெருக்கடியை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் வாய்ப்புக்களும் அதிகமாக காணப்படுவதாக தெரியவருகின்றது.

## வெளிநாட்டு உதவித் திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்ன சொல்கிறார்?

இலங்கை அரசாங்கம் பக்கச்சார்பற்ற வெளிநாட்டுக் கொள்கையின் கீழ் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தியோகப்பூர்வ பேஸ்புக் தளத்தில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை தீவானது, மூலோபாய முக்கியத்துவம் மிக்க ஒரு பூகோளப் புள்ளியில் அமைந்துள்ளமையினால், நாடு பலதரப்பட்ட அனைத்துலகச் சக்திகளையும் பல்வேறுப்பட்ட ர்ஜதந்திர மற்றும் பொருளாதார காரணங்களையும் ஈர்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சூழ்நிலையில், இலங்கை அரசாங்கமானது பக்கச்சார்பற்ற வெளிநாட்டு கொள்கையின் கீழ் செயற்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

எந்தவொரு நாடாக இருப்பினும், அதனுடன் இருதரப்புக்கும் நன்மை பயக்கக்கூடிய அபிவிருத்தி ஒத்துழைப்புக்கு தமது அரசாங்கம் முன்னுரிமை வழங்கும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த அடிப்படையில், இலங்கை, வெளிநாட்டு முதலீடுகளுக்காக திறந்தே உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகள் எங்கிருந்து வந்தாலும், அதனை தமது அரசாங்கம் வரவேற்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து, அதன் தற்சார்பு நிலையை பலப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

|| பி. பி.சி ||

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : நீர்க்குமிழி
இயற்றியவர் : சுரதா
இசை : வி.குமார்
பாடியவர்: சீர்காழி கோவிந்தராஜன்



ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

முதலில் நமக்கெல்லாம் தொட்டிலட
கண் மூடினால் கால் இல்லா கட்டிலடா

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

பிறந்தோம் என்பதே முகவுரையாம்
பேசினோம் என்பதே தாய்மொழியாம்
மறந்தோம் என்பதே நித்திரையாம்
மரணம் என்பதே முடிவுரையாம்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

சிரிப்பவன் கவலையை மறக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை
வந்தவர் யாருமே நிலைத்ததில்லை
வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை
வந்தவர் யாருமே நிலைத்ததில்லை

தொகுப்பார் சிலரதை சுவைபதில்லை
தொகுப்பார் சிலரதை சுவைபதில்லை
தொடங்குவார் சிலரதை முடிப்பதில்லை

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

# ஆண்களின் மோசமான குணம்

ஆண்களின் மோசமான குணங்களில் ஒன்று ரோட் ரேஜ். வாகன சாரதிகளுக்கு இடையே ஏற்படும் வன்மம் இது. இந்தக் குணத்தை ரோட் ரேஜ் என்கிறார்கள் உளவியலாளர்கள். 1987 ஆம் ஆண்டு அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்று லொஸ் ஏஞ்சல்ஸ் வீதியில் ஒரு படப்பிடிப்பை நடத்தியது. அப்போது ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலால் சாரதிகள் ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வதும் மோசமான சைகைகளைக் காண்பிப்பதும் வெறித்தனமாக வாகனங்களை செலுத்துவதும் நடந்தது. அப்போதுதான் இத்தகைய செயலுக்கு ரோட் ரேஜ் என்று புதிய பெயரை வைத்தார்கள். ரோட் ரேஜ் என்ற வகையில் முரட்டுத்தனமாக வாகனம் செலுத்துதல், சடன் பிரேக், வாகனத்தை மோதுவது போல் பின்னால் நெருக்கமாக ஓட்டி வருவது, ரோட்டின் ஒரு பக்கத்தில் இருந்து மறு பக்கத்திற்கு சமிக்ஞை இல்லாமல் மாற்றி ஓடுவது, ஏனைய சாரதிகளுக்கு போட்டி போட்டுக் கொண்டு வாகனத்தை ஓவர்டேக் செய்யாமலும் பின்புறம் செல்லாமலும் சரி சமமாக ஓட்டி வருவது, எதிரே வாகனங்கள் வந்தாலும் அப்படியே தொடர்வது, வீதிகளை பிரிக்கும் வளைவுகளில் இருக்கும் கட்டுகளில் செலுத்துவது, வீதி ஓரத்தில் இருக்கும் நடைபாதையில் செலுத்துவது, ஆபாசமான வார்த்தைகளால் திட்டுவது, வீதிகளில் செல்பவர்கள் மீது மோதுவது போன்ற எல்லா வகை அத்துமிறல்களும் ரோட் ரேஜ் (Road Rage) வகையில் சேரும்.


அமெரிக்காவில் வருடத்திற்கு 1200 இற்கு மேற்பட்ட ரோட் ரேஜ் சம்பவங்கள் நடைபெறுகின்றன. அதிலும் சரியாக 83 வயது ஆண்கள் தான் அதிகம் ஈடுபடுகிறார்கள். ரோட் ரேஜ் வழக்குகளில் 97 சதவீதம் பேர் ஆண்களாகவே இருக்கிறார்கள். இதில் இருந்தே இது ஆண்களுக்கான குணம் என்று தெரிய வந்தது.

சரி இது எப்படி ஆணுக்கு மட்டும் ஏற்படுகிறது? இதுவும் ஆதி ஆணின் மரபு வழியைப் பெற்ற குணம்தான். வேட்டையில் போட்டி போடுவது மனிதனுக்கு பிடிக்கும். தன்னை விட யாரும் முதன்மையாக வந்து விடக்கூடாது என்பதில் பிடிவாதமாக இருப்பான். இன்றைக்கு வேட்டை இல்லை.

ஆனால் பிடிவாதம் இருக்கிறது. வாகனம் செலுத்துவது ஆண்களுக்கு ஒரு வேட்டையாடுவது போலவும் பந்தயம் போலவும் ஒரு போட்டியாகத்தான் ஈடுபடுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் இன்றைய மனிதர்களிடம் பொறுமையும் சகிப்புத் தன்மையும் போய் விட்டது.

பெரும்பாலான ஆண்களுக்கு போதிய தூக்கம் இல்லை. உதவும் மனப்பான்மையும் இல்லை. தங்கும் இடமும் வேலை பார்க்கும் இடமும் வெகு தொலைவில் உள்ளது. பலருக்கு வேலைக்குப் போவதே ஊருக்குப் போவது போல இருக்கிறது. இவ்வளவு சிரமங்கள் இருப்பதால் மன அழுத்தம் அதிகரிக்கிறது. வீடும் வேலை செய்யும் இடமும் அருகருகே இருக்கும்படி அமைத்துக் கொண்டால் ரோட் ரேஜ் குறைகிறது என்று மனநல ஆய்வு சொல்கிறது. அதனால் நல்ல மனிநிலையோடு வாகனம் செலுத்தும் போது ரோட் ரேஜ் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை. விபத்துகள் நடப்பதற்கு இந்த மனநிலை காரணமாக அமைகிறது. இது போக மனநிலையின் மாற்றமும் விபத்துக்குக் காரணமாக அமைகிறது. வீதிகளில் வளைந்து நெளிந்து போகும் போது இருந்த விபத்துக்களின் எண்ணிக்கையைவிட தற்போது அதிகம்.

இதற்கு மனநிலை மாற்றமும் ஒரு காரணம். நான்கு வழி வீதிகளில் ஒரே மாதிரியான நில அமைப்பு தொடர்ந்து வந்து கொண்டே இருப்பது. ஒரே மாதிரியான



வீதி அமைப்பு, மனிதர்கள் நடமாட்டம் இல்லாத வெட்டவெளி, கடைகள் இல்லாத வனாந்தரப் பயணம் செய்வது போல் இருப்பது சாரதிகளுக்கு தூக்கத்தை வரவழைத்து விடும்.

தொடர்ந்து இதே போல் மணிக்கணக்கில் பார்த்துக் கொண்டே வாகனம் செலுத்தும் போது வண்ணங்கள் மங்கத் தொடங்கும். பகலிலேயே இருள் சூழ்ந்தது போல தெரியத் தொடங்கும்.

இவை எல்லாமே விபத்துக்களுக்கு வழி வகுத்து விடும். இவை எல்லாமே ரோட் ரேஜ் என்ற ஆண்களின் மன நிலையால் ஏற்படும் விபத்துக்களாகவே உளவியல் சொல்கிறது. இது போக உடல் நிலை காரணமாக ஏற்படும் விபத்துக்களும் உண்டு. இதில் பெரும் இடத்தை பிடித்திருப்பது மது அருந்தி விட்டு வாகனம் செலுத்துவது தான். இவற்றையெல்லாம் மாற்றினால் விபத்துக்கள் குறையும் என்கிறார்கள் உளவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள்.

தொகுப்பு:
வி.பிரணவன்
யாழ்.கலட்டி.

# த்ரிஷாவுக்கு திருமணம்?



தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக வலம்வரும் திரிஷாவுக்கு விரைவில் திருமணம் நடைபெற உள்ளதாக கூறப்படுகிறது.

தமிழ், தெலுங்கு திரையுலகில் முன்னணி கதாநாயகியாக வலம் வரும் திரிஷாவுக்கு தற்போது 37 வயது ஆகிறது. சக நடிகைகள் திருமணம் செய்து குடும்பத்தோடு ஐக்கியமான பிறகும் திரிஷா இன்னும் திருமணம் செய்து கொள்ளாமலேயே இருக்கிறார். அவருக்கு ஏற்கனவே திருமணம் நிச்சயமாகி முறிந்துவிட்டது.

பின்னர் தெலுங்கு நடிகர் ராணாவும், திரிஷாவும் பட விழாக்களில் ஜோடியாக பங்கேற்றதை வைத்து இருவரையும் இணைத்து கிசுகிசுக்கள் வந்தன. ஆனால் ராணாவும் வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

இந்த நிலையில் திரிஷாவுக்கு திருமண ஏற்பாடுகள் நடப்பதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் அவர் திருமணம் செய்து கொள்வார் என்றும் மாப்பிள்ளை யார் என்பதை ரகசியமாக வைத்துள்ளனர் என்றும் சமூக வலைத்தளங்களில் தகவல் பரவி வருகின்றன. சிம்புவை திரிஷா மணக்கப் போகிறார் என்றும் புதிய தகவல் பரவி உள்ளது.


ஆனால் திரிஷா, சிம்பு ஆகியோர் தரப்பில் இதனை உறுதிப்படுத்தவில்லை. சிம்புவின் தந்தை டி.ராஜேந்தரிடம் இந்த கேள்வியை எழுப்பியபோதும் அவர் பதில் சொல்லவில்லை.

இருவரும் விண் ணைத் தாண்டி வருவாயா படத்தில் ஜோடியாக நடித்து இருந்தனர்.

அந்த படம் பெரிய வெற்றி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.




# அதர்வாவுக்கு திருமணம்



தமிழ் சினிமாவில் பல படங்களில் நடித்த பிரபலமாகி இருக்கும் நடிகர் அதர்வா காதல் திருமணம் செய்ய இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக இருந்த முரளியின் மூத்த மகன் அதர்வா. பாணா காத்தாடி படம் மூலம் அறிமுகமானவர் தொடர்ந்து தமிழ் சினிமாவில் நடித்து வருகிறார். இவரது தம்பியும் முரளியின் இளைய மகனுமான ஆகாஷ்க்கும் விஜய்யின் உறவினரும், "மாஸ்டர்" படத்தின் தயாரிப்பாளருமான சேவியர் பிரிட்டோவின் மகள் சிநேகாவுக்கும் சில வாரங்களுக்கு முன் திருமணம் நடைபெற்றது.

இந்நிலையில் அதர்வா கோவாவை சேர்ந்த ஒரு பெண்ணை காதலிப்பதாகவும் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துள்ளதாகவும் செய்தி வெளியாகி உள்ளது. குடும்பத்தினர் சம்மதத்துக்காக காத்திருந்த அதர்வா அது கிடைத்துவிட்டதால் திருமணத்துக்கு தயாராகி விட்டார் என்கிறார்கள்.

# புதிய தோற்றத்தில்



# சிங்கத்தின் பிடரியைப்பிடித்தே உலுக்கியவன்

## வி.வி.எஸ்.லட்சுமண்

(கடந்தவார தொடர்ச்சி)

இதன் பிறகு சச்சினின் அதகள இன்னிங்ஸான ஷார்ஜாடெசர்ட்ஸ் டார்ம் இன்னிங்ஸில் இந்தியா இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற சச்சினோட களத்தில் நின்றவர் லட்சுமண். **Running Between The Wickets**-தான் லட்சுமணின் பிரச்சினையே. ஒருநாள் போட்டிகளில் ஸ்ட்ரைக்கை ரொட்டேட் செய்ய ஓடிக்கொண்டேயிருப்பது அவசியம். ஆனால், ரன்கள் ஓடவே ரொம்பவும் யோசிப்பார் லட்சுமண். அதனாலேயே அன்று ஷார்ஜாவில் சச்சினிடம் கண்டபடி திட்டு வாங்கியிருப்பார். இந்த சீசனில் டெஸ்ட்டிலும் சரி, ஒருநாள் போட்டிகளிலும் சரி 20-30 ஓட்டங்களுக்கு மேல் அவரால் இன்னிங்ஸை பில்ட் செய்ய முடியவில்லை. இதனால் அணிக்குள் இருந்து மீண்டும் கழற்றி விடப்பட்டார்.

இந்த வெளியேற்றம் லட்சுமணுக்குள் தூங்கிக் கொண்டிருந்த சிங்கத்தை தட்டி எழுப்பி விட்டது. 1999/2000 ரஞ்சி சீசனில் லட்சுமணின் பட்டிலிருந்து ஓட்ட மழை பொழிந்து கொண்டேயிருந்தது. அந்த ஆண்டு அசாருதின் தலைமையில் ஐதராபாத் அணிக்காக விளையாடியவர் அடித்தது 1415 ஓட்டங்கள். இன்றுவரை ரஞ்சியின் ஒரு சீசனில் அடிக்கப்பட்ட அதிகபட்ச ரன்கள் இதுதான். டோனி அந்த சீசனில் ரயில்வேஸ் அணிக்காக விளையாடி கொண்டிருந்தார். ரயில்வேஸ்ீக்கு எதிராக எல்லாம் சென்சுரிகள் பறந்தன. மொத்தம் 7 சதங்கள் அடித்தார். பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்தில், மைசூருக்கு எதிரான அரையிறுதிப்போட்டியில் லட்சுமண் ஆடிய இன்னிங்ஸைப் பார்த்து இந்திய கிரிக்கெட் வீரர்களே மிரண்டனர். அந்தப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் 353 ஓட்டங்கள் அடித்தார் லட்சுமண்.52 பவுண்டரிகளும் உலகத்தரம். மைசூர் அணியில் வெங்கடேஷ் பிரசாத், சுனில்ஜோஷி, டோடா கணேஷ் என இந்திய அணிக்கு விளையாடிய பௌலர்கள் இருந்தார்கள். ஆனால், லட்சுமணை அன்று யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

2000 இன் இறுதியில் மீண்டும் இந்தியா வந்தது அவுஸ்திரேலியா. அவு ஸ்திரேலிய ஸ்பெஷலிஸ்ட்டான லட்சு மணும் அணிக்குள் சேர்க்கப்பட்டார். இந்தமுறை பழையபடி பட்டிங் ஆர்டரில் 6 ஆவது பட்ஸ்மேன். மும்பையில் நடந்த முதல் டெஸ்ட்டில் அவமானகரமான தோல்வியை சந்திக்கிறது இந்தியா. ஸ்டீவ்வாக் தலைமையில் அவுஸ்திரேலியா பெறும் 17 ஆவது தொடர் வெற்றி அது. இரண்டாவது டெஸ்ட் ஈடன் கார்டனில்.18 ஆவது வெற்றி கொண்டாட்டத்துக்கு அவுஸ்திரேலியா கிட்டத்தட்ட ரெடி. அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 445 ஓட்டங்கள் அடிக்க, இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் வெறும் 171. இதில் லட்சுமண் அடித்த 59 ஓட்டங் கள் தான் அதிகபட்சம். ஃபாலோ ஆன் செய்கிறது இந்தியா. இப்படிப்பட்ட இன்னிங்ஸ்கள் எல்லாம் வரலாற்றில் எப்போதோ ஒருமுறை தான் நடக்கும். இந்தியா ஆடிய அதிசய ஆட்டம் அது. அதை நிகழ்த்திக் காட்டியவர்கள் லட்சுமணும் டிராவிட்டும். ஆஸி பௌலர்கள் லைன் அண்ட் லென்த்தில் துல்லியம் காட்டக் கூடியவர்கள். 2000 களின் தொடக்கத்திலேயே டீமுக்குள் வீடியோ அனலிஸ்ட்டுகளை வைத்துக்கொண்டு எந்த லைனில் எப்படிப்போட்டால் ஒருவருடைய விக்கெட்டை வீழ்த்த முடியும் என்கிற கணக்குகளோடு பந்து வீசியவர்கள். மெக்ராத், கில்லெஸ்பி, காஸ்பரோவிச், ஷேன்வார்னே என இந்த பௌலிங் சுப்பர் ஸ்டார்களாலேயே லட்சுமணுக்கு எங்கே பிட்ச் செய்வது என்பது பிடிபடவில்லை. எந்த லைனில் போட்டாலும் அடிக்கிறார், எந்தவேகத்தில் போட்டாலும் தடுக்கிறார் என லட்சுமண் அன்று ஆடிய ஆட்டம் இந்திய ரசிகர்கள் அதுவரைப் பார்த்திராதது. காயம் ஏற்படுத்த வேண்டும் என பவுன்சர் போடுவது, லட்சுமணின் கவனத்தை திருப்ப ஏதேதோ பேசி வெறுப்பேற்றுவது என ஆஸி பௌலர்கள் என்னவெல்லாமோ செய்து பார்த்தார்கள். ஒன்றுமே வேலைக்காகவில்லை. அவுஸ்திரேலிய சாம்ராச்சியத்தின் சரிவைத் தொடங்கி வைத்தபோட்டி அது தான். லட்சுமணைப் பார்த்து மிரள ஆரம்பித்தது அவுஸ்திரேலியா.

> “அந்த இன்னிங்ஸில் சரியாக ஆடாததால் மீண்டும் அணியிலிருந்து கழற்றிவிடப்பட்டார் லட்சுமண். இது அவருள் தூங்கிய சிங்கத்தை தட்டி எழுப்பிவிட்டது.”



இதற்கு அடுத்து சென்னையில் நடந்த டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலியவுக்கு எதிராக இரண்டு இன்னிங்ஸ்களிலுமே 65, 66 ஓட்டங்க்ள் அடித்து இந்தியா தொடர் வெற்றிபெற காரணமாக இருந்தார் லட்சுமண்.

இந்த ஃபார்ம் அவரை அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்து ஒருநாள் போட்டிகளிலுமே விளையாட வைத்தது. 1 டவுன் பட்ஸ்மேன் லட்சுமண். முதல் போட்டியில் 34 பந்துகளில் 45 ஓட்டங்கள், இரண்டாவது போட்டியில் 51 ஓட்டங்கள், மூன்றாவது போட்டியில் 83 ஓட்டங்கள், இதில் சச்சினோடு இணைந்து 199 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் என செம ஃபார்மில் இருந்தார். ஐந்தாவது ஒருநாள் போட்டியில் சென்சுரி அடித்தார். ஒருநாள் போட்டிகளில் லட்சுமண் அடித்த முதல் சதம் இதுதான்.

2002 இல் மேற்கிந்தியத்தீவுக்கு எதிராக மீண்டும் அதே ஈடன் கார்டன் மைதானத்தில் சச்சினோடு இணைந்து லட்சுமண் ஆடிய ஆட்டமும் மறக்க முடியாதது. முதல் இன்னிங்ஸில் இந்தியா 358 ஓட்டங்கள் அடிக்க, மேற்கிந்தியத் தீவுகள் 497 ஓட்டங்கள் அடித்தது.139 ஓட்டங்கள் லீடிங்கில் இருந்தது கரீபியன். வழக்கம்போல இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியாவின் விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிகின்றன. 6 ஆவது பட்ஸ்மனாக வரும் லட்சுமண், சச்சினுக்கு பக்கபலமாக நின்று ஆடுகிறார். ஐந்தாவது விக்கெட்டுக்கு இருவரும் சேர்ந்து 214 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் போடுகிறார்கள். சச்சின் 176 ஓட்டங்கள் அடித்து அவுட் ஆக, லட்சுமண் 154 ஓட்டங்கள் அடித்து இறுதிவரை நொட்அவுட் பட்ஸ்மனாக களத்தில் நிற்கிறார்.மேட்ச்டிரா ஆகிறது.

2003 அல் மீண்டும் அவுஸ்திரேலியாவுக்கு ஆச்சரியங்கள் தர அவுஸ்திரேலியாவுக்குப் போய் இறங்கினார் லட்சுமண். இது அவுஸ்திரேலிய கப்டன் ஸ்டீவ்வாகின் ஃபேர் வெல் தொடர். ஆனால், ஸ்டீவ்வாகின் சாதனைப் பயணத்தை டிராவிட் - லட்சுமண் கூட்டணி நல்லபடியாக முடித்து வைக்க விடவில்லை. பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்ட் டிராவில் முடிய, இரண்டாவது டெஸ்ட்டில் எப்படியாவது வென்று விட வேண்டும் என்கிற முனைப்பில் இருந்தார் கப்டன் ஸ்டீவ்வாக். ரிக்கி பொண்ட்டிங் மட்டும் 242 ஓட்டங்கள் அடிக்க, அவுஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ்ஸ்கோர் 557 ஓட்டங்கள். இந்தியா முதல் இன்னிங்ஸை தொடங்கியது. சோப்ரா, ஷேவாக், சச்சின், கங் குலி என டாப் ஆர்டர் மீண்டும் சீர்குலைகிறது. ஆனால், இந்த முறை 1 டவுன் பட்ஸ்மனான டிராவிட்டும், 6 ஆவது பட்ஸ்மனான லட்சுமணும் கொல்கத்தா சம்பவத்தை அவுஸ்திரேலியாவின் அடிலெய்டில் மறு உருவாக்கம் செய்கிறார்கள். 303 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப். டிரா விட் இந்த முறை 233 ஓட்டங்கள் அடிக்க, லட்சுமண் 148 ஓட்டங்கள் அடிக்கிறார். இந்த விக்கெட்டை வீழ்த்த ஸ்டீவ்வாக் தன்னுடைய அத்தனை ஆண்டுகால அனுபவத்தைப் பயன்படுத்தி என்னவெல்லாமோ செய்து பார்க்கிறார். ஒன்றுமே வேலைக்காகவில்லை. ஒரு கட்டத்தில் பான்ட்டிங் கூட வந்து பௌலிங் போட்டார். ஆனால், இந்தியா 523 ஓட்டங்கள் அடித்து, அவுஸ்திரேலியாவின் இரண்டாவது இன்னிங்ஸை சீக்கிரம் முடித்து, சேஸிங்கை வெற்றிகரமாக நடத்தி வரலாற்று வெற்றி பெற்றது.

இதற்கு அடுத்த டெஸ்ட்டை அவுஸ்திரேலியா வென்று விட சீரிஸ் 1-1 என சமன் ஆனது. சிட்னியில் நடக்கும் நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட்டை வென்று ஸ்டீவ்வாகை வெற்றியோடு வழியனுப்ப வேண்டும் என நினைக்கிறது அவுஸ்திரேலியா. இந்தியா முதலில் பட்டிங். இந்த முறை தனக்கு முன்பாக ஐந்தாவது பட்ஸ்மனாக லட்சுமணுக்கு வழி விடுகிறார் கப்டன் கங்குலி. அடிலெய்டில் டிராவிட்டோடு பார்ட்னர் ஷிப்போட்டதைப் போல, இந்த முறை சச்சினோடு இன்னிங்ஸை பில்ட் செய்கிறார் லட்சுமண். சச்சினும் லட்சுமணும் சேர்ந்து நான்காவது விக்கெட்டுக்கு 353 ஓட்டங்கள் அடிக்கிறார்கள். பிரெட்லீ எல்லாம் கிரிக்கெட்டே வேண்டாம் என வெறுக்கும் அளவுக்கு அன்று சச்சினும் லட்சுமணும் ஆடினார்கள். சச்சின் 241 ஓட்டங்கள் அடிக்க, லட்சுமண் 178 ஓட்டங்கள். இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 705 - டிக்ளேர். ஸ்டீவ்வாகின் கடைசி தொடர் சோகத்தோடே முடிந்தது.

அவுஸ்திரேலியாவோடு மட்டுமல்ல பல நான்காவது இன்னிங்ஸ் சேஸ்களில் லட்சுமணின் பங்கு முக்கியமானது. 2010 இல் மொகாலியில் முதுகு பிடிப்பு காரணமாக பைரன்னர் வைத்துக் கொண்டு, கடைசி விக்கெட்டுக்கு பிரக்யான் ஓஜோவோடு நின்று இந்தியாவை வெற்றிபெற வைத்தார் லட்சுமண். அன்று லட்சுமண் அடித்த 73 ஓட்டங்கள் தான் கப்டன் டோனிக்கு ரெஸ்ட்டிலும் தன்னால் கப்டனாக வெற்றிகளைப் பெற்றுத்தர முடியும் என்கிற நம்பிக்கையைக் கொடுத்தது.

ஒரு நிருபராக லட்சுமணுடனான என்னுடைய அனுபவம் என்பதும் அழகானது, காலத்துக்கும் நினைவு கூறத்தக்கது. கிரிக்கெட்டர்களை அணுகுவது என்பது 2000 களின் பிற்பகுதியில் சிரமமாகிப்போனது. அணியின் மேலாளர்களிடம் பேசி, அவர்கள் மூலம் நேரம் வாங்கினால் மட்டுமே கிரிக்கெட்டர்களைச் சந்தித்துப்பேச முடியும். நிருபராகவே இருந்தாலும் நினைத்த நேரத்தில் ஒரு கிரிக்கெட்டரைப் பார்த்ததும் பேசிவிட முடியாது. அப்போதல்ல, இப்போதும் முகத்தைக் கூடப் பார்க்காமல் கடந்து போவது தான் இந்திய வீரர்களின் குணம். ஆனால், அதில் இருந்து விலகியிருந்தவர் லட்சுமண். கிரிக்கெட் மைதானமோ, ஹோட்டல் லாபியோ அவரை எங்கே வேண்டுமானாலும் பார்த்துப்பேசலாம். ஒரு புன்னகையோடு வரவேற்பார். எதைப்பற்றி பேச வேண்டும், என்ன கேள்வி, எவ்வளவு நேரம் ஆகும் என்பதை யெல்லாம் கேட்டு நம்பரையும் வாங்கிக் கொண்டு அவரே போனில் அழைப்பார். ஈமெயில் மூலம் வாழ்த்துகள் அனுப்புவார்... என லட்சுமண் உண்மையிலேயே வேறு மாதிரியான கிரிக்கெட்டர். (முற்றும்)

# அண்மையில் உலகைத் திரும்பிப் பார்க்கவைத்த பெண்கள்

## இவாங்கா ட்ரம்ப்



ட்ரம்பின் மகள் அமெரிக்க இளம் பெண் தொழிலதிபராக வலம்வந்தவர், கடந்த அமெரிக்கத் தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெற்ற பிறகு, அதிபரின் சீனியர் ஆலோசகரானார். தற்போது மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிற்கும் தந்தைக்காக அமெரிக்கா முழுவதும் பம்பரமாகச் சுழன்று அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருகிறார். பயணத்துக்கு நடுவில், ஒரு பீட்ஸா கடைக்கு திடீர் விசிட் அடித்தவர், கிச்சன் ஏரியா வரை சென்று அமர்க்களப்படுத்தினார். மேலும், கொரோனா பரவலைத் தன் தந்தை அளவுக்கு யாரும் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை என ட்ரம்புக்கே சர்ட்டிஃபிக்கேட்டும் கொடுக்கிறார் செல்ல மகள்.

## ஆவா மர்த்தோ



பருவநிலை மாற்றம், மனித உரிமைகள் போன்ற விடயங்களில் தீவிரமாகச் செயற்பட்டு வருபவர் ஆவா மர்த்தோ. தெற்கு பின்லாந்தின் சிறிய கிராமத்திலிருந்து வந்த இந்த 16 வயது சிறுமி, அந்நாட்டின் ஒருநாள் (ஒக்டோபர் 7 ஆம் திகதி) பிரதமராகப் பணியாற்றியிருக்கிறார். அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு இணையாக இளம் பெண்களும் திறமையுடன் இருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்கான முன்னெடுப்புக்காகவும் ஐ.நா.சபையின் சர்வதேசப் பெண்கள் தினத்தின் 'கேர்ள்ஸ் டேக் ஓவர்' என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகவும் இந்த நிகழ்வு அரங்கேறியது. "நாம் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதைச் சிறுமிகள் உணர வேண்டும்" என்கிறார் இந்த ஒரு நாள் பிரதமர்!

## மெஹ்பூபா முப்தி



மத்திய அரசால் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீர் மாநில முன்னாள் முதல்வர் மெஹ்பூபா முப்தி, 14 மாதங்கள் கழித்து ஒக்டோபர் 13 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார். வெளியே வந்ததும், "காஷ்மீரின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்காக எத்தனையோ காஷ்மீரிகள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். அதை நாம் பெறுவதற்கான பாதை நிச்சயம் எளிதானதாக இருக்காது" என்று ஆடியோ வெளியிட்டு தன் அரசியல் பணிகளைத் தொடங்கிவிட்டார்.

## பெட்ரா டி சட்டர்



"ஐரோப்பாவின் முதல் திருநங்கை துணைப் பிரதமர்" என்ற பெருமையை பெல்ஜியம் நாட்டின் துணைப் பிரதமர் பெட்ரா டி சட்டர் பெற்றிருக்கிறார். மகப்பேறு மருத்துவர், மூத்த அரசியல்வாதி எனப் பன்முகத்தன்மை கொண்ட இவர், திருநங்கைகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர். ஒரு திருநங்கையாக, தன் சொந்த அனுபவங்களை வெளிப்படையாகப் பேசியவர். "எனது 40 வயதில் பெண்ணாக முழுமையாக மாற முடிவு செய்தேன். அதனால், என் நண்பர்களை இழந்தேன். அதேசமயம், எனக்குக் கிடைத்த வாய்ப்பு, என்னைப் போன்ற மற்ற பலருக்குக் கிடைப்பதில்லை. அவர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என நினைக்கிறேன்" என்கிறார்.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2146

### சாந்தன்

கோபப்பட்டு ஒதுங்கி நிற்கும் உறவுகளை விட.....



வெட்கமின்றி மன்னிப்பு கேட்கும் உறவுக்குத்தான் அன்பு அதிகம்...

### லக்சன்



எனது கண்ணீரால் நீ சிரிப்பாய் என்றால் என் வாழ்க்கை முழுவதும் அழுவேன் உனக்காக...

### தன்சிகா

என் குறும்புத்தனமும் என் திமிரும் தான் என் கவலைகளை மறக்க நான் என்னிடம் வைத்துள்ள மிகப் பெரிய ஆயுதம்...!



### பானுமதி

உனக்கென்று ஒரு தன்மானம் திமிர் இருக்கனும்.அதை யாருக்காகவும் எப்போதும் விட்டுக்கொடுக்காதே...!



### சாரங்கன்

என் மகிழ்ச்சியை பார்த்து என்னை தீர்மானித்து விடாதீர்கள்...



உங்களால் நினைத்துக்கூட பார்க்க முடியாத சோகங்கள் எனக்குள் உண்டு...

### பார்கவன்

வெற்றி என்பது ஓர் மனப்பாங்கு, அது ஒரு நிகழ்வல்ல



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 226

## நிறையை குறைப்போம் என்று உறுதி எடுப்போம்; அதற்கான ஆர்வத்தை விதைத்து வளர்ப்போம்

ஒருவர் அளவான உடல் நிறையை பேணுவது அவர் வாழும் காலத்தை அதிகரிக்கச் செய்வதுடன் அவரின் செயற்றிறனையும் கற்கும் திறனையும் கூட்டும் என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நிறையை சரியான அளவில் பேணாதவர்களுக்கு நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம், மூட்டு சம்பந்தமான நோய்கள், நாரி சம்பந்தமான நோய்கள், புற்றுநோய்கள், மாரடைப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், மாதவிடாய் கோளாறுகள், கர்ப்பம் தரிப்பதில் தாமதம், குடும்ப வாழ்வில் ஆரோக்கிய குறைவு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் ஆகும்.

சீனி, சர்க்கரை, பனங்கட்டி அல்லது இவை சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுகள் அல்லது பானங்கள் போன்றவற்றை சிறிதளவு உட்கொண்டாலும் பெரும் நிறை அதிகரிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. காரணம் இவற்றில் இருக்கும் கலோரி அடர்த்தி அதிகமாகும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி என்பவற்றுக்குப் பதிலாக இனிப்பூட்டிகள் அல்லது சுவையூட்டிகளை பயன்படுத்தலாம்.இவற்றின் சுவை சீனியை ஒத்ததாக இருக்கும். ஆனால் நிறை அதிகரிப்பு எதனையும் ஏற்படுத்தாது. நீரிழிவு இல்லாதவர்களும் இதனைப் பயன்படுத்த முடியும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி போன்றவற்றுடன் ஒப்பிடும் போது இந்த இனிப்பூட்டிகள் பாதுகாப்பானவை மட்டுமல்ல நிறை அதிகரிப்பையும் ஏற்படுத்தமாட்டாது.

இதேபோன்று எண்ணெய் அல்லது எண்ணெயில் பொரித்த உணவுவகைகளும், பட்டர், மாஜரின் போன்றவற்றையும் சிறிய அளவு உணவில் சேர்த்தாலும் அதிகளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவல்லன. நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகள் உட்பட எல்லா எண்ணெய் வகைகளும் நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவல்லன. மிக்சர், வடை, ரோல்ஸ் ஏனைய பொரியல்வகைகள், தேங்காய் அதிகளவு சேர்த்த உணவு வகைகள், எண்ணெய் சேர்த்து செய்யும் உணவு வகைகள் போன்றவற்றில் எண்ணெயின் வீதம் அதிகமாக இருப்பதால் இவற்றில் சிறிதளவை உட்கொண்டால் கூட பெருமளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தும்.

நிறை குறைப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள் சுவைக்காகவும் பசியை போக்குவதற்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் அடிக்கடி உண்ணக்கூடிய உணவுவகைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். பழவகை குறிப்பாக கொய்யா, தோடை, அப்பிள், ஜம்பு, விளாம்பழம், பப்பாசி, வாழைப்பழம், நாவல் போன்றன. அத்துடன் எல்லா விதமான மரக்கறி வகைகள் குறிப்பாக அகத்தி, முருங்கை, கோவா, கரட், பீற்றூட், தக்காளி, முள்ளங்கி, கீரைவகை, பயிற்றை, வெங்காயம், போஞ்சி, சிறகவரை, லீக்ஸ் போன்றவை. இத்துடன் பானங்களான மோர், இனிப்பூட்டிகள் சேர்த்த சீனி சேர்க்காத தேநீர், கோப்பி, பால், தேசிக்காய் தண்ணீர், குத்தரிசிக்கஞ்சி,



தோடம்பழச்சாறு, இளநீர் போன்றவற்றை குறிப்பிடலாம். பால், முட்டை, மீன், இறால், தானிய வகைகள் போன்றவற்றை போதியளவு உணவில் சேர்த்துக் கொள்வது நன்மை பயக்கும். இவை எமக்கு அதிகளவு புரதத்தை வழங்குவதுடன் பசியைக் கட்டுப்படுத்தவும் உணவில் சுவையை கூட்டுவதற்கும் உறுதுணையாக இருக்கும்.

நிறை குறைப்பதில் மட்டும் கவனம் செலுத்தாது உடல் ஆரோக்கியத்துடன் நிறை குறைப்பதில் அக்கறை செலுத்தவேண்டும். இதற்கு உடற்பயிற்சி மிகவும் உறுதுணையாக அமையும். உணவு வீணாகப் போகிறதே என்ற உணர்வில் மிகுதி உணவுகளை உண்ணும் பழக்கத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பசிக்காத வேளைகளில் மிகுதி உணவை உண்டால் உடம்புதான் வீணாகிப் போகும்.


பிறரின் வற்புறுத்தலிற்காக உணவு உண்ணுவதையும் உணவு உண்ணுமாறு ஒருவரை வற்புறுத்துவதை ஒரு உபசார முறையாகக் கடைப்பிடிப்பதையும் நிறுத்திக் கொள்ளவேண்டும். பசிக்காத வேளையில் ஒருவரை உண்ணுமாறு வற்புறுத்துவது அவரை நோயாளி ஆக்கும் படி முறையாக அமைத்து விடும். உணவு அருந்துவதற்கு 10 நிமிடங்கள் முன்னதாக பழங்களை உண்டு அதன் பின்னர் உணவை அருந்துதல் நல்லது. இது உண்ணும் உணவின் அளவைக் குறைத்துக் கொள்ள உதவியாக இருப்பதுடன் போதுமான உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

உணவை ஆறுதலாக உண்ணப்பழக வேண்டும். இது குறைந்தளவு உணவுடன் பசியைப் போக்கவும் போதுமானளவு உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்தவும் உதவும். சாப்பாட்டுக் கோப்பைகளையும் கரண்டிகளையும் சிறியனவாக தெரிவு செய்து வைத்திருப்பது பயன்தரும். இதன்மூலம் அளவுக்கதிகமான உணவு உட்கொள்ளப்படுவதை குறைத்துக் கொள்ள முடியும். தேநீர் கோப்பையையும் சிறியதாக தெரிவு செய்து வைத்திருப்பது நல்லது.

தினமும் ஒரேவகையான உணவு வகைகளை உண்பதிலும் பார்க்க நிறத்தாலும், சுவையாலும், வாசனையாலும் மாறுபடும் வெவ்வேறு வகையான உணவுகளை மாறிமாறி உண்பது உடலுக்கும் மனதுக்கும் ஆரோக்கியத்தையும், புத்தாக்கத்தையும் தருவதுடன் பசியைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான நிறை குறைப்பிற்கு வழிவகுக்கும். ஒரே வகையான உணவு வகைகளை உண்ணுவதன் மூலம் எல்லா வகையான சத்துக்களையும் பெற்றுக் கொள்ள முடியாது.

முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் பெயர் போனவர்கள், தியாகத்திற்கு சிகரம் வைத்தவர்கள், சேமிப்பிற்கும் கொடைக்கும் இலக்கணம் வகுத்தவர்கள், கல்வியில் கரைகண்டவர்கள், நினைத்த இலக்கை அடையும் வரை உழைக்கும் நெஞ்சுரம் கொண்டவர்கள் உடல்பருத்து உயிர் விடுவதா?

நிறையை குறைப்போம் என்று உறுதி



எடுப்போம். அதற்கான ஆர்வத்தை விதைத்து வளர்ப்போம். உடற்பரிமாணங்களைப் பேணும் கலையை கற்றுத் தெளிவோம். இதை நடைமுறைப்படுத்த திடசங்கற்பம் எடுப்போம்.

**Dr.சி.சிவன்சுதன்**
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்